திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, பேரவைக் காவது 'ட்ராஃப்ட்'டைத் தர ஏற்பாடு செய்யப்படுமா? ஏழு நாட்கள் என்று சொல்வது மிகவும் தூரமாக இருக்கிறது. முக்கிய மான சில விஷயங்களில் யார் யார் என்னென்ன கருத்துக்கள் கூறி யிருக்கிறார்கள் என்று பார்வையிடுவதற்கு அனுமதிப்பது ஜனநாயக முறையில் முக்கியமான காரியமாக இருப்பதால், அதற்கு வேண்டிய ஏற்பாட்டைத் தாங்கள் தீர்ப்பு கூறுவதற்கு முன்னதாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையில் அதை மேற் கோள் காட்டும் நேரத்தில் அந்த உறுப்பினர், அப்படிப் பேசவில்லை என்று மறுக்கக்கூடிய நிலைமை உண்டாகி, அதுவே ஒரு பிரச்சினைக் குரிய நிகழ்ச்சி ஆகிவிடும் என்ற காரணத்தால், அவ்வாறு கொடுப் பதற்கில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய தீர்மானத்தின் மீதும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய தீர்மானத்தின் மீதும் விவாதம் தொடரும். இப்பொழுது திரு. எல். கணேசன் அவர்கள் பேசலாம்.

(3) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

*** திரு. எல். கணேசன்:** மாண்புமிகு மாமன்றத் தலைவர் அவர்களே, இங்கே டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கும் அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்று எதிர்த்தரப்பினரால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீதும், அதே போல் கொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மானத்தின் மீதும் அவை இரண்டையும் எதிர்த்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பிரச்சினைகளை எழுப்புகின்ற எதிர்த்தரப்பில் இருப்பவர் கள் எப்படியாவது ஆளும் தரப்பில் இருப்பவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில், எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற பாணியில், எரிச்சலூட்டத்தக்க வகையில்—

1973 ஆகஸ்ட் 9] [திரு. எல். கணேசன்]

கருத்துக்கள் என்று சொல்லமாட்டேன்—தனிப்பட்ட விமர்சனங்களில் தீவிரமாக ஈடுபடுகிறார்கள் என்பதையும அதிலும் குறிப்பாக, பேரறிஞர் பெருந்தகை அண்ணு அவர்களுடைய பெயரை வைத்துக் கொண்டிருக்கிற சில பேர் கூட, அண்ணு அவர்கள் கற்றுத் தந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அவர்களுக்குப் புரிது என்ற காரணத்தாலோ அல்லது பயிலவில்லை என்ற காரணத்தாலோ அவற்றுக்கு மாறுபட்ட முறையில் இன்றையதினம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால் கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் கட்டளைக் கிணங்க, சூடு வாதத்திலே இருக்க வேண்டுமே தவிர, வார்த்தையிலே இருக்கக்கூடாது என்ற பாரம்பரியத்தினை அண்ணு அவர்கள் மரபில் வந்த நாங்கள் கடைப்பிடிக்கின்ற கட்டாயத்தில் இருக்கிறோம்.

இங்கு கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்த மாண்புமிகு பொதுவுடைமைக் கட்சித் தலைவர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கையற்ற கொள்கையுடையது, இந்த ஆசுக்குக் கொள்கை இல்லாத நிலைதான் ஒரு கொள்கையாக இருக்கிறது என்று வாதிட முனைந்தார்கள். இதிலே பொதுவுடைமைக் கட்சியினர் எப்படியெல்லாம் தங்களுடைய போக்குகளை நாளுக்கு நாள் மாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைக் கொள்கை வழியில் நின்று நான் விமர்சிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் தங்களுடைய நிலையை இடத்திற்கு இடம், நேரத்திற்கு நேரம், ஒரே நேரத்திலும் பல இடங்களுக்கு ஏற்ற வகையில், இன்னும் சொல்லப் போனால் பச்சோந்தித்தனம் என்ற அப்படிப்பட்ட வகையில் தங்களுடைய போக்குகளை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் பிற்போக்கு சக்தி என்றார்கள். 1971-ல் முற்போக்கு சக்தி என்றார்கள். 1973-ல் மீண்டும் பிற்போக்கு என்று மாற்றிக் கூற ஆரம்பித்துள்ளனர். உலக மகா யுத்தத்தின்போது ரஷ்யா தலையிடுவதற்கு முன்னால் அது ஒரு 'இம்பீரியலிஸ்ட் வார்' என்று வர்ணித்தார்கள். அது ஒரு ஏகாதிபத்திய யுத்தம் என்று வர்ணித்தார்கள். அதே நேரத்தில் ரஷ்ய நாடு பங்கேற்ற பிறகு அதுவே மக்கள் யுத்தமாக அவர்களால் பிரசாரம் செய்யப்பட்டது. ஒரு

[திரு. எல். கணேசன்] [1973 ஆகஸ்ட் 9

மாநிலத்தில் முஸ்லீம் லீக் அவர்களுக்குப் பிற்போக்கு சக்தி. இன்னொரு மாநிலத்தில் அதே கால கட்டத்தில் அதுவே முற் போக்கு சாத்தியப்படும்.

இதிலே வேடிக்கை என்னவென்றால் அவர்களிலேயே யார் உண்மையான மார்க்சிஸ்ட், யார் உண்மையான கம்யூனிஸ்ட் என்பதிலே கூட இன்னும் முடிவான விளக்கத்தைக் காண முடிய வில்லை. தமிழகத்தில் மட்டுமல்ல, அகில இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திற்கு அவர்கள் விடைகூற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். இங்கு நாட்டில் இருக்கும் அத்துணை கட்சிகளும் ஒவ்வொரு காலகட்டத்தில் அவர்களால் அரவணைக்கப்படுவதும், அதற்குப் பின்னால் அதையே பிற்போக்கு சக்தி என்று வர்ணிப்பதும், இந்தியாவில் இருக்கும் அத்துணை கட்சிகளையும் பிற் போக்கு சக்திகள் என்று வர்ணித்த பின்னர் வேறு யாரும் பாக்கி யில்லாத நிலையில் அவர்களிலேயே இரு குழுவினராகப் பிரிந்து ஒரு குழுவினர் தோழர் ரணதிவே, தோழர் ராமமூர்த்தி போன்றவர்கள் சேர்ந்து டாங்கே போன்றவர்களைப் பார்த்து 'நீங்கள் பிற்போக்கு சக்திகள்' என்று குற்றம் சாட்டும் வழக்கமும் அவர்களுக்கு இருந்து வருகிறது. ரிவிஷனிஸ்ட், டிவிஷனிஸ்ட் என்ற இரண்டு வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். டாங்கே போன்றவர்கள் ராமமூர்த்தி, ரணதிவே ஆகியவர்களைப் பார்த்து 'டிவிஷனிஸ்ட்' என்று சொல்லுகிறார்கள். இந்த இரண்டு பேர்களுமே பிற்போக்கு வாதிகள் என்று சொல்லி மூன்றாவது அணி எழுந்தது. இந்த மூன்று பேரில் யார் பிற்போக்குவாதி, யார் உண்மையான கம்யூனிஸ்ட்வாதி என்று மேலே இருக்கும் ரஷ்ய பூமியைக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. நீதிபதி யாக இருந்து தீர்ப்பு வழங்க வேண்டிய ரஷ்யத் தலைமையைப் பார்த்து மாசேதுங்கும், சீனத் தலைமையும் அவர்களை ரிவிஷனிஸ்ட் என்று குற்றம் சாட்டி அதற்கு எதிர்க் குற்றம் சாட்டும் வகையில் இவர்கள் அவர்களைப் பார்த்து 'டிவிஷனிஸ்ட்' என்ற குற்றத்தைச் சாட்டி, இவர்களில் யார் உண்மையான மார்க்சியவாதி, யார் உண்மையான தீவிரவாதி, யார் உண்மையான கம்யூனிச வாதி என்று அகில உலகத்திற்கும் பிரகடனப்படுத்தவும், அதை உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்ட நிலையில் அவர்கள் இன்று நெருக்கடியில் இருக்கிறார்கள்.

1973 ஆகஸ்ட் 9] [திரு. எல். கணேசன்]

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பிற்போக்கு அரசு என்றும், மூதலாளித்துவத்திற்குப் பக்கபலமாக இருக்கும் அரசு என்றும் குற்றம் சாட்டுகிறார்கள். உண்மையாகச் சொல்ல வேண்டுமென்றால் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் உண்மையிலேயே கொள்கை ரீதியில் அரசியல் கட்சியை நடத்துபவர்கள் என்றால் தமிழகத்தில் இருக்கும் அரசு முற்போக்கா, பிற்போக்கா என்பதைக் கொள்கை வழியில் நின்று ஆராய்ந்து பார்த்தால்—உறுதியாகச் சொல்வேன்—அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தோழமைக் கட்சியாக இருந்து வரவேண்டும். அவர்கள் என்னென்ன கோரிக்கைகளை வைத்தார்களோ அவற்றை நிறைவேற்றுவதற்காக யார் யார் சிறை சென்றார்களோ, அந்தக் கோரிக்கைகளைச் சொல்லி போராட்டத்தில் ஈடுபட்ட காரணத்தால் யார் யார் கடியடிகளுக்கு ஆளானார்களோ, யார் யார் தலைமறைவானார்களோ அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கைகளை இன்றையதினம் அடக்குமுறைகளுக்கு ஆளாகாமல், சிறைச்சாலைக்குச் செல்லாமல், சித்திரவதைக்கு ஆளாகாமல் தலைமறைவாகச் செல்லாமல் இங்கே அவர்கள் மாண்புமிகு உறுப்பினர்களாக அமர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அந்தக் காரியங்களை இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றி வருகிறது என்பதை மனப்பூர்வமாக மார்க்சியத்தில் நம்பிக்கை இருக்குமானால், உளப்பூர்வமாக சோஷலிச சித்தாந்தத்தில் நம்பிக்கை இருக்குமானால் ஏற்றுக் கொண்டாகவேண்டும்.

எங்களுக்கு நன்றாக நினைவிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 1952 காலகட்டத்தில் எவ்வளவு கடுமையாகத் தாக்கப்பட்டார்கள்? இங்கே மதிப்பிற்குரிய மணலியார் அவர்கள் இருக்கிறார்கள். மதிப்பிற்குரிய எ. கே. சுப்பையா அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் என்ன கோரிக்கைகளைச் சொன்னார்கள்? குடிசைகள் பிய்த்தெறியப்படக்கூடாது, தோட்டங்கள், தென்னந்தோப்புகளில் கொத்தடிமைகளாக, பொட்டுப் பூச்சிகளாக, புன்மைத் தேரைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடிசைகள் நிலப்பிரபுக்களால் பிய்த்தெறியப்படக்கூடாது, அதற்குப் பாதுகாப்புத் தேவை என்று சொன்னார்கள். விவசாயத் தொழிலாளர்களுடைய குடிசைகள் பிய்த்தெறியப்படக்கூடாது,

[திரு. எல். கணேசன்] [1973 ஆகஸ்ட் 9

பாதுகாப்பு வேண்டுமென்று போராடிய பெருந்தலைவர்கள் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் எந்தவிதப் போராட்டமும் இல்லாமல் பாதுகாப்பு மட்டுமல்ல, பட்டாவே வழங்குகிறோம் என்று சொல்லி லட்சக்கணக்கானவர்களுக்குப் பட்டா வழங்கியிருப்பதைக் கொள்கைதான் முக்கியம், கொள்கை அடிப்படையில் தான் இயங்குவோம் என்று கூறுகின்ற கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களும், தோழர்களும் நிச்சயமாக இதை உண்மையான சோஷலிசத் திட்டம் என்று ஏற்றுக் கொள்வார்கள். இவர்கள் அன்று என்ன சொன்னார்களோ அவற்றையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றி வருகிறது. பஸ்களைத் தேசிய மயமாக்கினோம். அது மிகப் பெரிய சோஷலிசத் திட்டம் என்பதை அவர்கள் உணருவார்கள்.

அதற்கு முன்னால் நிலப் பிரபுக்கள் ஏராளமான நிலத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள். தஞ்சை மாவட்டத்திலேயே திடீரென்று கரும்பாலை வந்தது. ஏன் வந்தது? திரு. வி. எஸ். நியாகராஜ முதலியார் பல்லாயிரக்கணக்கான நிலங்களுக்குச் சொந்தக்காரர். நில உச்சவரம்புச் சட்டம் வரப் போகிறது, கரும்புத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு வாப் போகிறது, எனவே, இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்தார். நெல்லைத் தவிர வேறு எதையும் பயிரிட்டுப் பழக்கமில்லாதவர்—வி. எஸ். நியாகராஜ முதலியார். அதைக் கரும்புத் தோட்டமாக மாற்றி ஒரு கரும்பாலையும் கொண்டுவந்தார். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கரும்புத் தோட்டம் என்ற பெயரால் விதிவிலக்குப் பெற்றன. அதேபோன்று மேய்ச்சல் தரை என்ற பெயரால் பட்டக்காரர் விதிவிலக்குப் பெற்றார். இப்படிப் பல நிலப் பிரபுக்கள் உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இன்றையதினம் அந்த விதிவிலக்குகளை எல்லாம் ரத்து செய்து, அந்த நிலங்களை எல்லாம் பறித்திருக்கிறது என்றால் அது உண்மையான சோஷலிசத் திட்டம் அல்லவா? நிலப்பிரபுத்துவத்தின் பாணியில் சொல்ல வேண்டுமென்றால் 'எச்ச சொச்சங்கள்' இல்லாமல் ஆக்க முனைந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அல்லவா? கொள்கை ரீதியாக இருக்குமானால் திராவிட முன்னேற்றக் கழக அரசு சோஷலிச

அரசு அல்லவா? அதே போல் அவர்கள் சொல்லிவந்த கோரிக்கைகளை, நடுநிலையில் நின்று பார்க்கிறபோது திராவிட முன்னேற்றக் கழக அரசு உண்மையான சோஷலிச திட்டங்களை, உண்மையான சோஷலிச சித்தாந்தங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அது இயற்றுகிற சட்டமானாலும், போடுகிற திட்டமானாலும், அது எந்தக் கட்டத்திலானாலும் அப்படிப்பட்ட செயல்களைச் செய்து வருவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன். இருந்தபோதிலும் இன்றைய தினம் அவர்களுக்கு சோஷலிசத்தைப்பற்றி அக்கறை இல்லை, முற்போக்கான திட்டங்களை நிறைவேற்றுகிறவர்களுக்குப் பக்கபலமாக இருந்திடவேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இல்லை, எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழக அரசை வீழ்த்தியாக வேண்டும், அதற்கு யாரோடு சேர்ந்தாலும் கவலை இல்லை அவர்களுக்கு. அந்தப் போக்கில்தான் அவர்கள் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசை எதிர்க்கிறார்கள். சித்தாந்தம், தத்துவம் இந்த அடிப்படையில் பார்ப்பார்களேயானால் நிச்சயமாக இந்திய பூபாகத்தில் வேறு எந்த அரசையும்விட திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழக அரசு, முற்போக்கான அரசு என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும்.

அதேபோல் இன்னொரு வேடிக்கை. இதே மன்றத்தில் புதிய கட்சியில் உறுப்பினராக இடம் பெற்றிருக்கிற டாக்டர் ஹாண்டே அவர்கள் அடிக்கடி சவால் விடுகிறார்கள் ராஜினாமா செய் என்று. ஒரு கட்சியினுடைய வேட்பாளராக நின்று அந்தக் கட்சியின் கொள்கைகளைச் சொல்லி, அந்தக் கட்சித் தொண்டர்களின் உழைப்பால் அந்தக் கட்சியின் கொள்கைகளை நான் பிரதிபலிக்கப் போகிறேன், எனவே, எனக்கு வாக்களியுங்கள் என்று சொல்லி வாக்குகளைப் பெற்று சட்டமன்றத்திற்கு வந்தபிறகு பிறகு அந்தக் கட்சியின் கொள்கைக்கு மாறுபட்ட கொள்கையையுடைய ஒரு கட்சியோடு திடீரென்று இணைகிறபோது நியாயமாகப் பார்த்தால் மக்களுடைய நம்பிக்கைக்கு அவர்கள் துரோகம் செய்தவராவார். அவர்களுக்கு நியாய உணர்வு கிஞ்சிற்றேனும் இருக்குமானால், ஜனநாயக மரபைப் பற்றி அவர்கள் கிஞ்சிற்றேனும்

[திரு. எல். கணேசன்] [1973 ஆகஸ்ட் 9

அறிவார்களேயானால், ஒரு கட்சியின் கொள்கைகளை வைத்து ஓட்டு வாங்கி இந்த மன்றத்திற்கு வந்திருக்கிற அவர்கள்தான் வேறு கட்சிக்கு மாறும்போது ராஜினாமா செய்வது நியாயமே தவிர, எந்தக் கொள்கையைச் சொல்லி திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்ததோ, எந்தக் கொள்கைகளுக்காக நாங்கள் பாடுபடுவோம் என்று வாக்குகளைப் பெற்று வந்தோமோ அதே கொள்கைகளைத்தான் நாங்கள் இன்று பின்பற்றி வருகிறோம், நிறை வேற்றி வருகிறோம். அந்தக் கொள்கைகளுக்காக நாங்கள் எவ்வளவான தியாகத்தையும் செய்யத் தயாராயிருக்கிறோம். அப்படிச் சொல்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களைப் பார்த்து, ராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்வது ஜனநாயக மரபும் அல்ல, நெறியும் அல்ல. அப்படிச் சொல்வது தனிப்பட்டவர்களின் விரோத குரோதங்களைக் காட்டுவதே தவிர உண்மையில் அது நெறியாக ஆகாது.

திண்டுக்கல் தேர்தலை வைத்துக்கொண்டு, மக்கள் தீர்ப்பு கொடுத்துவிட்டார்கள், ராஜினாமா செய்யுங்கள் என்று சொல் கிறார்கள். இது என்ன வேடிக்கையான வாதம்? 1952க்குப் பிறகு நடந்த இடைத் தேர்தலில் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் அருப்புக்கோட்டை இடைத்தேர்தல் வந்து, அதில் ஆளும் கட்சி தோற்கடிக்கப்பட்டது. அப்போது அவர்கள் ராஜினாமா செய்திருந்தால் அல்லது அதற்குப் பின்னால் 1962-ல் பண்டித நேரு அவர்களின் தலைமையில் மத்திய ஆட்சியில் அமைச்சரவை அமைந்ததற்குப் பின்னால் நடந்த இடைத் தேர்தல்களில் அது பரோதபாத் தொகுதியாக இருந்தாலும் சரி, அம்ரோகா தேர்தலாக இருந்தாலும் சரி அவற்றில் ஆளும் கட்சி வேட்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டபோது அவர்கள் அப்போது ராஜினாமா செய்திருப்பார்களேயானால், நியாயமான அடிப் படையில் அவர்கள் அப்படிச் செய்திருப்பார்களேயானால் இப்போது அப்படிக் கோருவது நியாயமாக இருந்திருக்கக்கூடும். சொல்லப்போனால் அப்படிப்பட்ட மாபிளைக்கூட உருவாக்கி யிருக்கக் கூடும். ஆனால் அப்படி எந்தக் காலக்கட்டத்திலும் நடக்கவில்லை. அப்படியிருக்க இப்போது நடந்து முடிந்த ஒரு இடைத் தேர்தலை வைத்துக்கொண்டு ராஜினாமா செய் என்கிறார்கள்.

1973 ஆகஸ்ட் 9] *[திரு. எல். கணேசன்]*

நான் கேட்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்களை மனிதர்களுக்கு மருத்துவம் செய்யும் டாக்டர் என்றுதான் கருதிக் கொண்டிருந்தேன். ஆனால் அவர்கள் இப்போது பேய் டாக்டராக மாறிவிட்டிருக்கிறார்கள். அடிக்கடி அவர்கள் உயிர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். உண்மையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர் எங்கே இருக்கிறது? ஏதோ கூடுவிட்டுக் கூடு பாய்வதுபோல் அவர்கள் இன்றையதினம் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபு. அவர்களுக்குப் புதிது திராவிட முன்னேற்றக் கழக வரலாறு. அவர்களுக்கு இன்னும் தெரிந்து கொள்கிற ஆசை இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாரம்பரியத்தை அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்களேயானால் முன்னேற்றக் கழகத்தின் உயிர் எங்கே இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள். பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இன்றையதினம் ஆலும் கட்சியாக மாறி இருக்கிற நிலையில் ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைக் கண்டல் செய்தவர்கள் அவர்கள். ஒரு காலத்தில் அல்ல. வெகு அண்மைக் காலம் வரையில் கண்டிக்கல் தேர்தல் வரையில் என்று கூடச் சொல்லலாம். திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளைக் கேலி செய்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபை அறியாதவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற தானைத் தலைவராக இருந்த எங்கள் இதய தெய்வம் அண்ணா அவர்களைக் கண்டல் செய்தவர்கள் இன்றையதினம் எது உண்மையான திராவிட முன்னேற்றக் கழகம் என்று நற்சான்று வழங்கும் நீலைக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் தமிழகத்தில் இருக்கிற வேடிக்கை.

இன்னொரு விதைதம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கூட அறியாதவர்கள், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றை, அண்ணா அவர்கள் சொல்லிக் கொடுத்ததை கடைசி மட்டத் தொண்டன் கூட அறிந்திருக்கிற ஒன்றைக் கூடத் தெரிந்து வைக்காமல் இன்று அவர்கள் சவால் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் இன்றையதினம் பழைய காங்கிரஸ்

[திரு. எல். கணேசன்] [1972 ஆகஸ்ட் 9

தோழர்கள் உணவுப் பற்றாக்குறையைப் பற்றிப் பேசுகிறார்கள். 'Public memory is very short' என்று சொல்வார்கள். அதில் அவர்கள் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். பசி என்று சொன்னோம் ஒரு வேளை பட்டினி கிடங்கள் என்றார்கள். மீண்டும் பசி ஒருவேளை பட்டினி கிடங்கள் என்றார்கள். மீண்டும் பசி என்றோம். இரண்டு வேளை பட்டினி கிடங்கள் என்றார்கள். அன்று ஆளும் கட்சியாக இருந்த பழைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு, பசிக்கிறது, கூழ் கூடக் கிடைக்கவில்லை குடிப்பதற்கு என்று சொன்னபோது—பிரான்ஸ் நாட்டு மன்னன் ஓயி சொன்னதுபோல்—பாலும் பழமும் பருகுங்கள் என்று சொன்னார் பக்தவத்சலம் அவர்கள். பிரான்ஸ் நாட்டு மக்கள் சாப்பிட ரொட்டி கிடைக்கவில்லை என்று சொன்னபோது மன்னன், அப்படியானால் பிஸ்கட் சாப்பிடுங்கள் என்று சொன்னது போல், கூழ் கிடைக்கவில்லையென்றால் பாலும் பழமும் சாப்பிடுங்கள் என்று சொன்னவர்கள் இப்போது பற்றாக்குறை, பற்றாக்குறை என்று சொல்லி வருகிறார்கள். சொல்லப்போனால் மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும் பற்றாக்குறை, பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். அவர்கள் ஆட்சி செய்கிற கேரளாவிற்குக் கூட இங்கிருந்துதான் உணவைப் பெற்றுச் செல்லும் நிலைமை இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் உணவுப் பற்றாக்குறை, பட்டினிச் சாவு என்று சொல்லப்படுகிற நேரத்தில், உணவுப் பற்றாக்குறையைப் போக்க முடியவில்லை என்று சொல்கிற நேரத்தில், உணவுத் துறையில் தன்னிறைவு பெற்ற ஒரே ஒரு மாநிலம் என்பது மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் உணவு வழங்குகிற நிலையில் உள்ள ஒரே ஒரு மாநிலம் தமிழகம்தான்.

பற்றாக்குறை என்பதில்லாமல் உணவில் தன்னிறைவு பெற்றுத் திகழ்கிறது நம் மாநிலம். தன்னிறைவு என்பது மட்டுமல்ல, வேறு மாநிலங்களுக்கும் வழங்கக்கூடிய நிலைக்கு நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதோடு மட்டுமல்லாமல், ஏழைகளுக்காக, அவர்கள் நல்வாழ்விற்காகப் பல திட்டங்களைத் தீட்டியுள்ளது கழக அரசு. பாட்டாளிகள், தொழிலாளிகள், உழைப்பாளிகள் இவர்களின் நலன்களுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டியுள்ளது கழக அரசு. ஏழைகளின் மறுமலர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி

1973 ஆகஸ்ட் 9] [திரு. எல். கணேசன்]

புள்ளது கழக அரசு. அது தேசியமயமாக்கும் கொள்கையாக இருந்தாலும் சரி, ஏழைகளுக்குப் பட்டா வழங்கும் திட்டமாக இருந்தாலும் சரி, கண் ஒளி வழங்கும் திட்டமாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பெரியவர்கள் இவைகள் பூர்ஷ்வாக்களுக்காகப் பயன்படுகிற திட்டங்கள் என்று சொல்ல முடியாத அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு சோஷலிஸ அரசாக, சமதர்ம சமுதாயத்தை அமைக்கிற அரசாக விளங்கும் இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்வார்களேயானால், அவர்கள் 'பிற்போக்குவாதிகள்' என்று தங்களுக்குத் தாங்களே முத்திரை பதித்துக் கொள்கிறார்கள் என்பதை கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தியக் துணைக்கண்டத்திலேயே உள்ள மிகப் முற்போக்கான அரசை எதிர்க்கிற ஒரே காரணத்தினால் அவர்கள் தங்களைப் பிற்போக்குவாதிகள் என்று மக்கள் முன்னால் அறிமுகம் செய்யப்பட இருக்கிறார்கள். மூப்பது, நாற்பது ஆண்டுகளாக இதே மண்ணில் அவர்கள் வேரூன்றவில்லை என்றால், வேரே விட முடியவில்லை என்றால் காரணம் எல்லாக் காலக் கட்டத்திலும் அந்தந்த நேரத்தில் அவர்கள் எந்தப் பிற்போக்கு சக்தியையாவது அணைத்துக்கொண்டு முற்போக்காளர்களை பிரட்டுகிற வகையில் ஈடுபடுகிறார்கள். எனவே முழுக்க முழுக்க முற்போக்கு அரசாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது நம்பிக்கை இல்லை என்றால் அப்படிச் சொல்கிறவர்கள் பிற்போக்காளர்கள் தான். அப்படிப்பட்ட பிற்போக்காளர்கள் தமிழ் மண்ணில் வெற்றி பெற முடியாது. எனவே, இந்தத் தீர்மானங்களை முழுக்க முழுக்க நான் எதிர்த்து எனது கருத்துக்களைச் சொல்லி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே எங்கள் கட்சியின் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் 'இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை' என்ற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய ஒரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, இன்று தமிழகத்தில் இருக்கும் எல்லாத் தரப்பு மக்களின் ஆதரவையும், நம்பிக்கையையும் இந்த அரசு இழந்து விட்டது என்று கூறிக்கொள்கிறேன். இந்த அரசு சாமானிய

[திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்] [1973 ஆகஸ்ட் 9

மக்களுக்காக, சாமான்யர்களால் ஆளப்படுகிற அரசு என்று அடிக்கடி பறைசாற்றிக்கொள்கிறது. ஆனால் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கும், அத்தியாவசியமான உணவுப் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கும் இந்த அரசு தவறி விட்டது என்று கூறிக்கொள்கிறேன். இன்றைக்கு விலைவாசி மிகவும் பயங்கரமாக ஏறியிருக்கிறது. எண்ணெய் விலை மிகவும் பயங்கரமாக ஏறியிருக்கிறது. கோதுமையைக் கண்ணால் பார்க்க முடியவில்லை என்ற நிலை இருக்கிறது. அதற்கெல்லாம் இந்த அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

இப்படி உணவு தானியங்கள் விலை அதிகமாக ஆவதற்குக் காரணம், தமிழகத்தில் ஏற்பட்ட மின்சாரத் தட்டுப்பாடு என்று சொல்லப்படுகிறது. மின்சாரக் கட்டுப்பாடு இருந்தபோது, தொழிற்சாலைகள் இயங்குவதற்காக டீசல் இன்ஜின்கள் போன்றவற்றை வைத்துக்கொண்டு வேலை செய்தார்கள். அதன் காரணமாக ஏற்பட்ட அதிகச் செலவையும் சேர்த்துவைத்துப் பண்டங்களின் விலையை ஏற்றி வைத்து இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு தாராளமாக மின்சாரம் தரப்பட்ட பின்பும் அந்த விலைவாசிகள் குறைக்கப்படவில்லை. அதற்காக இந்த அரசாங்கம் எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்ற காரணத்தால், இந்த அரசு சாமான்ய மக்களின் நம்பிக்கையை இழந்து இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் படிக்கிறாரா அல்லது பேசுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : குறிப்பை வைத்துக்கொண்டு பேசுகிறேன்.

இன்று மது விலக்கு ரத்து செய்யப்பட்டுவிட்ட காரணத்தால், பெண்கள் மத்தியில் இந்த அரசு நம்பிக்கையை இழந்து இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் வேலையில்லாத் திண்டாட்டத்தை எடுத்துக் கொண்டால், இன்று படித்த பட்டதாரிகளிடையே வேலையில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட 4—5 லட்சம் பேர்

1973 ஆகஸ்ட் 9] [திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்]

வேலையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பத்திரிகை வாயிலாகப் பார்த்திருக்கிறோம். அவர்களுக்கு இந்த அரசு எப்படி வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்போகிறது என்று தெரியவில்லை. சாதாரணமாக எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் கூட 1 ஆண்டு 1½ ஆண்டுகாலம் வேலைக்காகக் காத்துக்கொண்டிருக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் குறைந்தது 2-3 ஆண்டுகாலம் வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. சமீபத்தில் மின்சாரத்துறையில் 2,000 இடங்களுக்கு 1,50,000 பேர் அப்ளை செய்தார்கள் என்று கணக்குச் சொல்கிறார்கள். இன்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்ஸ் டிபார்ட்மெண்ட்டிலே 7 அசிஸ்டென்ட் டைரக்டர் பதவிகளுக்காக 2,000 பேர் மனு செய்து கொண்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இதையெல்லாம் பார்க்கிறபோது எந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலே வளர்ந்து இருக்கிறது என்பதை நம்மாலே நன்றாக உணர முடிகிறது. இன்று டாக்டர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்ற சொன்னால் உடனடியாக 110 சீட்டைக் குறைத்து விடுகிறார்கள். ஆசிரியர்களுக்கு வேலை இல்லை என்று சொன்னால் ஆசிரியர் பயிற்சியை நிறுத்தி விடுகிறார்கள் 2-3 ஆண்டுகளுக்கு. இப்படி பட்டதாரிகளுக்கு வேலையில்லை என்று சொன்னால், கல்லூரிகளைக் கூட மூடிவிடும் சூழ்நிலை வந்து விடுமோ என்று அச்சப்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த அரசு மீது படித்தவர்கள் நம்பிக்கை இழந்து இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

தொழில் துறையை எடுத்துக்கொண்டால், சிம்சனில் கதவடைப்பு, அடிசனில் அடிதடி, டன்லப்பில் உண்ணாவிரதம் என்று இருப்பதைப் பார்க்கிறோம். தமிழகத்தில் தொழில் தகராறுகள் அடிக்கடி ஏற்படுகின்றன என்பதைப் பார்க்கிறோம். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று கொள்கையளவில் சொல்கிறார்கள். இப்படிக் கூறிவிட்டு, அவர்களே தொழிற்சங்கங்களை ஆரம்பிக்கிறார்கள். . .

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கனம் உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சிம்சனில் கதவடைப்பு, அடிசனில் அடிதடி, டன்லப்பில் உண்ணாவிரதம் என்று சொன்னார்கள். இப்போது அந்த மூன்று கம்பெனிகளிலும் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

[திரு. க. ராசாராம்]

ஓரே கம்பெனி முன்பாக மட்டும் உண்ணாவிரதம் நடந்து கொண்டிருக்கிறது. அங்கேயும் தொழில் அமைதி காக்கப்பட்டு வருகிறது. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று சொன்னார்கள். அது எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து கூடிப்பேசி எடுக்கப் பட வேண்டிய ஒரு முடிவு. அரசு ஆணை போட்டு அதைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: அந்த இடங்களில் வேலை நடந்து கொண்டிருந்தாலும், அந்த மாதிரி தொழில் தகராறுகள் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் இந்த அரசு தொழில் அமைதியைக் காக்க முடியவில்லை. ஆகவே, தொழிலாளர்கள் மத்தியிலும் இந்த அரசு நம்பிக்கையை இழந்து விட்டது என்று சொல்லிக்கொள்கிறேன். இங்கே தொழில் அமைதி கெட்டு இருப்பதால் வெளி மாநிலங்களிலிருந்து இங்கே வந்து தொழில் நடத்த தொழில் அதிபர்கள் பயப்படுகிறார்கள். இங்கேயிருக்கிற பணக்காரர்களும் பணத்தை மூதலீடு செய்து புதிதாகத் தொழில் ஆரம்பிக்க முன்வரத் தயங்குகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அரசு அதிகாரிகளை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் மந்திரிகளும் மக்களுக்கு நல்ல தொடர்பு இல்லாமல் இருக்கிறது. அரசு அதிகாரிகளிடத்தில் சென்னை கண்ணெழி வழங்கு திட்டத்திற்கு நிதி, பூம்புகார் திட்டத்திற்கு நிதி, ரிக்ஷா வழங்கு திட்டத்திற்கு நிதி, எங்கள் மாவட்டத்தில் நடந்த சாரல் விழாவிற்கு டிக்கட் என்ற முறையில் நிதி கேட்பதால் அவர்களிடத்தில் பொதுமக்கள் செல்வதற்கும் பயப்படுகிறார்கள். அவர்கள் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாக சிமெண்ட் வாங்கச் சென்னால், ரூ. 50 கொடுத்து சாரல் விழா டிக்கெட் வாங்குங்கள் என்று சொல்கிறார்கள். இப்படி ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்கி பர்மிட் வாங்குவதை விட வெளி மார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து சிமெண்ட் வாங்கிவிடலாம் என்று மக்களுக்குத் தோன்றுகிறது. இதனால் மக்களுக்கும், அதிகாரிகளுக்கும்

1973 ஆகஸ்ட் 9] [திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம்]

இடையே இருக்கிற நல்ல தொடர்பு போய்விடுகிறது என்று கூறி, இதனால் மக்களுக்கு இந்த அரசின் மீது நம்பிக்கை இழந்து விட்டது என்று கூறிக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், மத சம்பந்தமான விஷயங்களில் இந்த அரசு குறுக்கிடுகிறது. இந்து அறநிலைய அலுவலகத்திலிருந்து எல்லா ஆலயங்களுக்கும் வந்த சுற்றறிக்கையில் கடவுள் வணக்கம் பாடக்கூடாது, தமிழ்த்தாய் பாடல்கள்தான் பாடவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது மத வழிபாடுகளில் அரசின் தேவையற்ற தலையீடாகும். அரசுக்கும் அமைச்சர்களுக்கும் கடவுள், மத நம்பிக்கைகள் இல்லாமல் இருக்கலாம். அதை மக்கள் மீது திணிக்க முயல்வது கூடாது. அரசின் இச்செய்கை மக்களின் மனதைப் புண்படுத்துவதாக உள்ளது. முஸ்லீம் மதத்திலும், கிருஸ்தவ மதத்திலும் அரசு குறுக்கிடுவது இல்லை. அதைப்போல் இந்து மதத்திலும் தலையிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, மதத்தின் மீது நம்பிக்கை உள்ள மக்களின் நம்பிக்கையையும் இந்த அரசு இழந்து விட்டது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

இப்போது அடிக்கடி அமைச்சர்களின் இலாகாக்களை மாற்றுவதால் அவர்களுக்கு அந்த விஷயங்களைப் புரிந்து கொள்ளும் திறன் இல்லாமல் போய் விடுகிறது. நிர்வாகத்தில் சீர்கேடுகள் ஏற்பட்டு, குறைகள் ஏற்படுகின்றன. நாடு இருக்கும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் இத்தகைய குறைபாடுகள் தவிர்க்கப் படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களைப்போன்ற எதிர்க்கட்சிகள் கொண்டுவரும் நல்ல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றத் தவறிவிட்ட காரணத்தால், எங்களைபோன்ற எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையையும் இந்த அரசு இழந்து இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். 1967 முதல் இன்று வரையில் எங்கள் தொகுதியில் 'மூக்கூடல்-சீரவ நல்லூர்' பாதையில் ஒரு பாலம் தாமிரபரணியாற்றின் குறுக்கே கட்ட வேண்டுமென்று பல சந்தர்ப்பத்தில் இந்த சபையில் கரடியாகக் கத்திக்கொண்டு இருக்கிறோம். கேட்கப்பட்டிருந்தும் இது வரை அதைக் கட்டுவதற்கான எந்த முயற்சியையும் இந்த அரசு

[திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்] [1973 ஆகஸ்ட். 9

எடுத்துக்கொள்ளவில்லை. 1968-69-ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட, தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தும், இந்த அரசு அதன் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படிப்பட்ட பல காரணங்களால் இந்த அரசு மக்களின் நம்பிக்கையை இழந்து இருப்பதால் மேலும் நீடித்து ஆட்சியில் இருப்பதற்கு எந்தவிதமான நியாயமோ, நீயநியோ இல்லை, இந்த அரசு உடனடியாக ராஜினமா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே நடைபெறக்கூடிய இந்த ஆட்சியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்பதையும், கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருப்பதையும் கடுமையாக எதிர்த்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்துவிட்டு ஏதாவது காரணம் கிடைக்காதா, சட்ட மன்றத்தைவிட்டு நாம் வெளியேறிவிடலாமா என்று எதிர்க்கட்சியினர் இடையிடையே முயற்சிசெய்து கொண்டிருப்பதை நாமெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுப்பதற்கு ஒரு கொள்கையின் அடிப்படையிலே கொடுத்து, ஆளுகின்ற ஆட்சி மீது ஆதாரத்தோடு குற்றச்சாட்டுகளை எடுத்து வைத்து, அந்தக் கொள்கையை மக்களுக்குச் செய்ய விடவில்லை என்பதை வலியுறுத்தக்கூடிய வகையிலே தீர்மானம் கொடுத்திருப்பார்களேயானால் அவர்களுடைய கடமையை ஓரளவுக்காக, செவ்வனே நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால், அந்தக் கொள்கை அடிப்படையில் இல்லாமல் வயிற்றெரிச்சல் காரணமாக இவர்கள் ஆள்கிறார்களே என்ற அந்தப் பொறுமையின் காரணமாக தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு தாங்கள் இவர்கள் மீது என்ன குற்றச்சாட்டைச் சொல்வது என்று அவர்களுக்கே புரியாமல் வெளிநடப்புச் செய்வதற்கு அவர்கள் சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்

1973 ஆகஸ்ட் 9] [திரு. எஸ். ஆறுமுகம்]

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்த சுதந்திரா கட்சியின் கொள்கை தமிழக மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்பதை இன்றைக்கு நாம் எல்லோரும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் கொள்கை தமிழக மக்களுக்கு, சமதர்மக் கொள்கையை ஏற்றுக்கொள்ளக்கூடிய மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்குப் பயன்படாத ஒரு கொள்கை என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருந்து இந்திய அரங்கில் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதைப்போல இந்திய கம்யூனிஸ்டு கட்சி சமதர்மக் கொள்கையை நிலையாகக் கொண்டு அவர்கள் கட்சியை நடத்தி மக்களுக்கு வாழ்வு தர முயற்சி செய்திருக்கிறார்களா என்று சொன்னால், அவர்களும் தங்கள் நிலையிலிருந்து மாறி மிதவாதிகளுக்குத் துணையாகச் சென்று கொண்டிருக்கக்கூடிய காரணத்தினால் தமிழ் நாட்டில் கூட அவர்கள் ஒரு நிலையான இடத்தைப் பெறமுடியாமல் இன்றைக்கு அந்தக் கட்சியில் உள் கட்சி சண்டை ஏற்பட்டு, இந்திய தமிழ் நாடு கம்யூனிஸ்டு கட்சி என்ற அளவுக்கு ஒரு புதிய கட்சியைத் துவங்கவேண்டிய கட்டத் திற்கு வந்துவிட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அனை வரும் பார்க்கிறோம்.

அதைப் போல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி சமதர்மக் கொள்கை வழியில் தொழில்கள் தேசியமயம், நில உச்ச வரம்பு, உழுபவனுக்கே நிலம் சொந்தம், பஸ் தேசியமயம், தொழிலாளர் களுக்குத் தொழிலில் வரக்கூடிய லாபத்தில் பங்கு, குடியிருப்பு மனை குடியிருப்பவனுக்குச் சொந்தம் ஆகிய சட்டங்களையும் இயற்றி, தமிழ் நாடு என்று பெயர் மாற்றியதோடு, தமிழ் மொழி தான் எங்களுடைய ஆட்சி மொழி என்று கிட்டவட்டமாக வலியுறுத்தப்பட்டு சட்டமன்றத்தில் உறுதி தந்துவிட்டது. ஆகவே, இந்த ஆட்சி தமிழகத்திலுள்ள மக்களுக்கு எல்லா நன்மை களையும் செய்துவிட்ட காரணத்தினால், எதிர்க்கட்சியினருக்குத் தாங்கள் எப்படி அரசியலை நடத்துவது என்று புரியாத காரணத்தினால் தி.மு.க.வை ஒட்டு மொத்தமாக எதிர்க்க வேண்டியக் கட்டத்தில் எதிர்க்கட்சியினர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சட்டம், ஒழுங்கு இந்த மாநிலத்தில் சீராக உள்ளது என்பதை இன்றைக்குப் படித்த

[திரு. எஸ். ஆறுமுகம்] [1973 ஆகஸ்ட் 9

மக்கள் உண்மையான அரசியல் வாதிகள், மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் போற்றுகிறார்கள், பாராட்டுகிறார்கள், தமிழ் நாட்டை எண்ணிப் பார்க்கிறார்கள். ஆனால் மற்ற மாநிலங்களிலே தடி எடுத்தவன் தண்டல்காரன் என்ற அளவுக்கு அரசியல் சூழ்நிலை வளர்ந்துள்ளது என்பதைப் பார்க்கிறோம்.

இன்றைக்கு, தி.மு.க. உள் கட்சியில் பதவிக்காகப் போராடியவர்கள், தங்களுடைய சுயநலத்திற்காகக் கட்சியைக் காட்டிக் கொடுத்த எட்டப்பர்கள் எங்கள் மீது புகார் கூறுகிறார்கள். அவர்கள் கொடுத்த குற்றச்சாட்டுகளை, புகார்ப் பட்டியலை 32 குற்றச் சாட்டுகளையும் இந்த அவையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவைகள் அனைத்தையும் நாங்கள் படித்துப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பத்தை எங்களுக்கு அளித்ததற்காக முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். 32 குற்றச்சாட்டுகளிலும் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்தால் நம்பப்படுகிறது பேசப்படுகிறது, தெரிகிறது, விசாரணையில் உண்மை தெரியும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுக்குத்தான் அது புரியும் போல் இருக்கிறது. அப்படிப்பட்ட பதங்களைப் போட்டுப புகார்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புகார்களுக்கு நாம் பதிலைக் கொடுத்துவிட்ட பிறகு, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக ஆதாரத்தோடு, உள்ள உறுதி இருக்குமானால், நீங்கள் குற்றம் சுமத்துவது உண்மையானால், அதை நிரூபிக்க முடியும் என்றால், சட்டமன்றத்தில் நான் கொடுத்த பதிலுக்கு அந்தப் பதில் சரியில்லை என்று இங்கே வாதாட வாருங்கள், வாருங்கள், என்று அழைப்பு விட்டார்கள். ஆனால், அவர்கள் இன்று வரையில் வரவில்லை. வராது இருப்பது மட்டுமல்ல. சட்டமன்றத்திற்கு வந்து தன்னுடைய வாதத்தை எடுத்து வைப்பதற்குத் தயாராக இல்லாமல் இன்றைக்கு வெளி நாட்டில் சுற்றிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். வெளி நாடுகளில் இன்றைக்குப் புரட்சித் தலைவர், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதே நேரத்தில் மற்ற வர்கள் யாரையெல்லாமோ அழைத்துக்கொண்டு கூட போகிறார்கள். அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. அது அவர்

1973 ஆகஸ்ட் 9] [திரு. எஸ். ஆறுமுகம்]

களுடைய சொந்த விவகாரம். அதில் நாம் தலையிடக்கூடாது, தலையிட விரும்பவும் இல்லை. ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டு பெருவாரியான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஓர் ஆட்சியின் மீது குற்றம் சொல்லக்கூடிய ஒரு சட்டமன்ற உறுப்பினர் இங்கே வந்துதான் இந்த மன்றத்தில் தங்களுடைய வாதத்தை எடுத்து வைக்கவேண்டுமே தவிர, இங்கே வராமல் வெளியே கூட சட்டமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற பதிஞ்சுக்கு இது சரியில்லை என்று கூட வாதாடுவதற்குத் திறமை இல்லாதவர்கள் தி.மு.க. கட்சியின் மீதும், தி.மு.க. ஆட்சியின் மீதும் குற்றம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுல், இதை நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

தி.மு.க. ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய நேரத்தில் இடைத் தேர்தலில் தோற்றதினுல் இந்த அமைச்சர் அவை ராஜிநாமா செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். அதை வாதத்திற்கு ஆளும் கட்சி சார்பில் நான் ஏற்றுக்கொண்டால் கூட, நாகர் கோவில் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் நாங்கள் ஒரு கட்சியை ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய நேரத்தில் ஆதரித்தோம். அதைப்போல பாண்டிச்சேரியில் அரியாங்குப்பம் இடைத் தேர்தலில் தி.மு.க. சார்பாக நிறுத்திவைக்கப்பட்ட வேட்பாளருக்கு நாங்கள் எங்களுடைய உதவியைச் செய்தோம். இரண்டு தேர்தல்களிலும் நாங்கள் யாரை ஆதரித்தோமோ அவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அப்படித் தோற்கடிக்கப்பட்ட நேரத்தில் இன்றைக்கு இந்த அமைச்சர் அவை ராஜிநாமா செய்ய வேண்டும் என்று சொல்லக்கூடியவர்கள், அன்றைக்குச் சொன்னார்களா? ஏன் சொல்லவில்லை? அன்றைக்கு மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் இங்கே அமைச்சராக இருந்தார். மூத்த சாமி அவர்களும் அமைச்சராக இருந்தார். அப்பொழுது அவர்கள் நாகர்கோவில் இடைத்தேர்தலில் தோற்றபோது இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்யவேண்டும் என்று அவர்கள் சொல்லியிருந்தால், அவர்களுக்கு மந்திரி, பதவி போய்விடும், ஆகவே, சொல்லக்கூடாது என்று பதவிக்காக ஆசைப்பட்டுக் கொண்டு அன்றையதினம் சொல்லவில்லை என்று இப்பொழுது தெரியவருகிறது. பதவிக்காகப் போராடி, பதவி உங்களுக்குக் கொடுக்கப்பட மாட்டாது, உங்களால் கழகத்திற்கும், ஆட்சிக்கும்

[திரு. எஸ். ஆறுமுகம்] [1973 ஆகஸ்ட் 9

கெட்ட பெயர் என்று முதல் அமைச்சர் அவர்களாலும் இந்த அமைச்சர் அவையாலும் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து, தூக்கி எறியப்பட்டவர்கள் இன்றையதினம் எங்கள் பேரில் குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏதோ மக்களுக்காக அவர்கள் வாதாடுவது போல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது. ஆடு நனைகிறது என்று ஓநாய் கவலைப்பட்டதாம். அதைப் போலத்தான் இன்று அவர்கள் மக்களுக்காகக் கவலைப்படுகிறார்கள். அவர்கள் மக்களுக்காகக் கவலைப்படுவதெல்லாம் பதவி கிடைக்காத காரணத்தினால் தான் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இங்கே இந்த நேரத்தில் ஒரு சம்பவத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சம்பவத்தைச் சட்டம் ஒழுங்கு பற்றி தி.மு.க. வில் இருப்பவர்களுடைய ஒழுக்கத்தைப்பற்றி தாழ்ப்பட்ட முறையில் விமர்சனம் செய்பவர்கள் கூர்ந்து கவனிக்கவேண்டும். சேலத்தில் ஒரு வாரத்திற்கு முன்பு அந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அதைப்பற்றி நான் ஆதாரத்தோடு பொறுப்பேற்றுக்கொண்டு இங்கே பேசுகிறேன். தொழிலாளர் நல மருத்துவ மனை ஐந்து ரோடு, சேலம் பக்கத்தில் இருக்கிறது. தொழிலாளர் நல மருத்துவ மனைக்கு ஒரு தொழிலாளர் உடல் நலம் பாதிக்கப்பட்ட தன்னுடைய தங்கையைச் சிகிச்சைக்காக அழைத்துக்கொண்டு வந்தார். பஸ் இரவு 8-30, 9 மணி அளவில் அங்கே வந்து நிற்கிறது. சூரமங்கலம் வழியாக ஒரு கார் அங்கே வருகிறது. அந்தக் கார் வந்ததும் அந்த இடத்தில் நிறுத்தித் தொழிலாளரைத் தள்ளிவிட்டு, அந்தப் பெண்ணைக் கடத்திக் கொண்டு அவர்கள் போகிறார்கள். உடனே சத்தம் போட்டு அந்தக் காரைச் சிலர் பின்தொடர்கிறார்கள் அந்தக் கார் ஓமலூர் வழியாகப் போய் சுண்ணாம்புமேடுக்குப் பக்கத்தில் கரும்புத் காட்டில் போய் நிற்கிறது. அந்தப் பெண்ணை பலாத்காரமாகச் செயல்பட்டு அந்தப் பெண்ணின் கற்பை சூறையாட அவர்கள் துவங்கியிருக்கிறார்கள். அந்தப் பெண்ணினுடைய கதறலைக் கேட்டு அந்தப் பகுதியில் வாழக்கூடிய மக்கள், பக்கத்தில் இஸ்லாமியக் கல்லூரி இருக்கிறது, அந்தக் கல்லூரி மாணவர்கள் எல்லாம் ஓடிவந்து பலாத்காரமாக அந்தப் பெண்ணை கற்பழிப்பதற்கு

1973 ஆகஸ்ட் 9] [திரு. எஸ். ஆறுமுகம்]

மூயன்றவர்களைப் பிடித்தார்கள். அவர்களைப் பிடித்து, அதற்குப் பின்னாலே சூரமங்கலம் காவல் நிலையத்திற்குத் தகவல் அனுப்பினார்கள். பிறகு காவலர் அங்கே சென்று இரண்டு பேர்களையும் அழைத்து வந்து அந்தப் பெண்ணைக் கற்பழிக்க முயற்சித்தற்காக அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு, சேலம் எஸ். எஸ். எம். இரண்டாவது கோர்ட்டில் அவர்கள் ஆஜர் செய்யப்பட்டு அவர்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு பேர்களும் யார்? ஒருவர் அ.தி.மு.வைச் சேர்ந்தவர், வக்கீல் ரவிச்சந்திரன். இன்னொருவர் லோகநாதன், அவரும் அ.தி.மு.கவைச் சேர்ந்தவர். இப்படிப்பட்ட ஒழுக்கம் கெட்டவர்கள் எங்களைப் பார்த்து, தி.மு.க. வினரைப் பார்த்து, ஒழுக்கம் இல்லாதவர்கள் என்று பேசுகிறார்கள் என்று சொன்னால், நாடு இதை மறந்துவிடும், அவர்களுக்கு வாழ்வு தருவார்கள் நாட்டு மக்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களா?

இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை ஆயிரம் ஆயிரமாகத் தாங்கிக் கொண்டிருப்பவர்கள்தான் புதிய கட்சியை அமைத்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். எந்தக் கொள்கை அடிப்படையிலே இந்த ஆட்சி மக்களுக்குத் தேவையில்லை என்று சொல்கிறார்கள் என்பதை அவர்கள் தெளிவாகச் சொல்லவில்லை; அவர்களால் தெளிவாகச் சொல்லவும் முடியாது.

அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இன்றைக்கு தேர்தலிலே நின்றால் டெப்பாசிட் பெறமாட்டார்கள் என்று சொன்னார்கள். இந்த நேரத்தில் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லும்போது எங்களுடைய கட்சித் தலைவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் என்னுடைய பதவியை இராஜினாமா செய்து சபாநாயகரிடத்தில் இன்றே கொடுத்துவிடுகிறேன். அவர்கள் ஒரு வாரத்திற்குள் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்து சபாநாயகரிடத்தில் கொடுத்துவிட்டுப், இருவரும் என்னுடைய லீடர்பாண்டி தொகுதியிலே போட்டியிடுவோம். அப்படிப் போட்டியிட்டால் அவர்கள் டெப்பாசிட் பெறமாட்டார்கள் என்பதை (காலொலி) அழுத்தம் திருத்த

[திரு. எஸ். ஆறுமுகம்] [1973 ஆகஸ்ட் 9

மாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு இதை ஒரு சவாலாக விடுகிறேன். இந்தச் சவாலை அவர்கள் எற்றுக்கொள்ளத் தயாரா? இந்தச் சவாலை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்கள் தெரிவிக்கட்டும்; இருவரும் இராஜினாமா செய்துவிட்டு தேர்தலிலே நிற்போம்.

அடுத்தபடியாக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது இந்த ஆட்சி மக்களுக்காக என்ன செய்திருக்கிறது என்று கேட்டார்கள்.

(4) நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவையில் சவால் விடுவதாகச் சொல்வது சரிதானா என்பது குறித்து.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். சட்டசபையில் சவால் விடுகிறேன் என்று சொல்வது சரியா? சரியில்லை என்று நான் கருதுகிறேன். சவால் விடுவது சரியல்ல என்று நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, சவால் விடும் பழக்கத்தை நிறுத்த வேண்டும். கனம் உறுப்பினர் சொன்ன அந்த வார்த்தைகளை வாபஸ் பெறவேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம்: ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் இன்றைக்கு சவால் விடுகிறேன் என்று சொன்னவுடனே, வாபஸ் பெற வேண்டும் என்கிறீர்களே. நேற்றைக்கு ஹாண்டே சவால் விட்டாரே. அப்போது நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே. இப்போது மட்டும் என் வாபஸ் பெறவேண்டுமென்று சொல்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சவால்விட்டுப் பேசக்கூடாது என்று நேற்று சொன்னேன். உறுப்பினர்கள் சவால் விடாமல் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம்: நான் அறைகூவல் விடுகிறேன் என்று திருத்திக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், நேற்றுதான் சட்டசபையில் சவால் விடக்கூடாது என்று சொன்னீர்கள். அப்படி ஒரு ரூலிங் கொடுத்த பிறகும் கனம் உறுப்பினர் 'சவால் விடுகிறேன்' என்று

1973 ஆகஸ்ட் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இப்போது சொன்னர். அப்படி சொன்னது சரியா? சரி என்றால் தங்கள் தீர்ப்பை மீறியதல்லவா? எல்லோரும், சவால் விடுகிறேன் என்று பேசக்கூடாது என்ற தங்களுடைய தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டுமென்றால் இப்போது அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகளை சபைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 'சவால் விட்டுப் பேசுகிறேன்' என்று சொல்வது கூடாது என்று சபாநாயகர் அவர்கள் உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கினர்கள். அதற்காக அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடவில்லை. அதுதான் இன்றைக்கு எல்லாப் பத்திரிகைகளிலும் பெரிதாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

(3) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் (தொடர்ச்சி).

திரு. எஸ். ஆறுமுகம்: திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவும் அதனுடைய ஆதரவாளர்களுக்காகவும்தான் இன்றைக்கு இந்த ஆட்சி வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் பெருவாரியான மக்களின் ஆதரவைப் பெற்று இந்த ஆட்சியை அமைத்திருக்கிறது. அந்தப் பெருவாரியான மக்களுக்காக, அந்தப் பாட்டாளி மக்களுக்காக, அந்தத் தொழிலாளி மக்களுக்காக, அந்த உழைப்பாளி மக்களுக்காக இந்த ஆட்சி பயன்படாமல் வேறு யாருக்குப் பயன்பட வேண்டுமென்று நினைக்கிறார்கள் என்றுதான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். திண்டுக்கல் தோல்வியை வைத்துக்கொண்டு, தி.மு.கழக ஆட்சி இராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திண்டுக்கல் தமிழகத்தின் ஒரு பகுதிதான். திண்டுக்கல்லே தமிழகம் அல்ல. ஆகவே, திண்டுக்கல் தீர்ப்பு தமிழகம் முழுவதற்குமான தீர்ப்பல்ல. முன்சீப் கோர்ட்டில் ஒரு தீர்ப்பு வந்தால், அதற்குப் பின்னால் மாவட்ட நீதிமன்றம்,

[திரு. எஸ். ஆறுமுகம்] [1973 ஆகஸ்ட் 9

அதற்குப் பின்னால் உயர்நீதி மன்றம், அதற்குப் பின்னால் சுப்ரீம் கோர்ட் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, முன்சீப் கோர்ட் தீர்ப்பே இறுதியான தீர்ப்பல்ல. அதைப்போலத்தான் திண்டுக்கல் தீர்ப்பு தமிழகம் முழுவதற்குமான தீர்ப்பல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஒரு ஜனநாயக நாட்டில் தோல்வி தொடர்ந்து வருவதுமில்லை; வெற்றி நிரந்தரமானதும் அல்ல என்பதை நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்கள் நன்கறிவார்கள். அவர்களுக்கு ஒரு வரலாற்று உண்மையை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் வாழ்ந்த ஏராளமான குறுநில மன்னர்களில் ஒருவன் மலையமான் திருமுடிக்காரி என்பவன். அவன் தென்னாற்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்து வந்தான். அவன் சிறந்த ராஜ தந்திரி; கொடை வள்ளல்; படை ஆற்றல் மிக்கவன். அவன் சேரனோடு சேர்ந்தால் சேரன் வெற்றிபெறுவான்; சோழனோடு சேர்ந்தால் சோழன் வெற்றி பெறுவான். அந்த அளவுக்குப் போராற்றல் மிக்கவன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலையும் ஆரம்ப காலத்தில் அதுதான் என்பதை நண்பர்கள் நன்றாக அறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் யாரை ஆதரிக்கிறதோ அவர்கள்தான் வெற்றி பெறுவார்கள்; கடந்த காலத்தில் அவர்கள்தான் வெற்றிபெற்றிருக்கிறார்கள். காமன் வீல் கட்சியை ஆதரித்தோம்; அவர்கள் வெற்றி பெற்றார்கள். உழைப்பாளர் கட்சியை ஆதரித்தோம்; அவர்கள் பெற்றி பெற்றார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரித்தோம்; அவர்கள் வெற்றி பெற்றார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியை ஆதரித்தோம்; அவர்கள் வெற்றி பெற்றார்கள். இதை எல்லாம் அவர்கள் மறந்துவிட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். புதிய கட்சிக்காரர்கள் வேண்டுமென்றால் இந்த விபரங்களை மறந்திருக்கலாம். அவர்கள் எல்லாவற்றையுமே மறந்துவிட்டுதான் இருக்கிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

மலையமான் திறம்பட ஆட்சி புரிந்து, புகழேணியின் உச்சியை எட்டிப்பிடித்துக்கொண்டிருந்தான். அதைக் காணப்பொறாத மற்ற குறுநில மன்னர்கள் அவரை எதிர்த்தார்கள். அந்தக் குறுநில மன்னர்களுக்கு பெரும் கொடை வள்ளலான அதியமான்

1973 ஆகஸ்ட் 9] [திரு. எஸ். ஆறுமுகம்]

தலைமை தாங்கினுன். வள்ளல் என்று சொன்னுல், இங்கே தருவ தாகச் சொல்லிவிட்டு தராமல் இருக்கும் வள்ளலைப்போல அல்ல; உண்மையிலேயே பெரும் வள்ளல்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், மக்களாட்சி நடை பெறும் இந்த காலத்தில் மன்னர்கள் கதையைப்பற்றிப் பேசுவது சரியானதல்ல.

திரு. எஸ். ஆறுமுகம்: திருக்கோவிலூரில் போர் முரசு ஒலித்தது. இறுதியில் அதியமான் வெற்றிபெற்றுன். எதிர்பாராத விதமாக திருமுடிக்காரி தோல்வியடைகிறுன். தோல்வியடைந்த திருமுடிக்காரி படை திரட்டி, பக்கப்பலம் தேடிக்கொண்டு போர் முரசு தட்டுகிறுன். அவனுக்கு சேரல் இரும்பொறை உதவி புரிகிறுன். அதியமான் தோற்கடிக்கப்பட்டு, மலையமான் திருமுடிக் காரி மீண்டும் வெற்றிபெறுகிறுன். ஆகவே, ஒரு ஆட்சியில் வெற்றி தோல்வி என்பவை நிரந்தரமானவையல்ல. அதைப்போலவே தீண்டுக்கல் தேர்தலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிரந்தர தோல்வியல்ல என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமாகி விட்டது. முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஆறுமுகம்: இன்னும் ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டு முடித்துவிடுகிறேன்.

இன்றைய அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பின்னடைந்த மக்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்துகொண்டு வருவதைக் காணப்பொருதவர்கள்தான் இன்றைக்கு இந்த அரசை எதிர்க் கிறார்கள். நீண்ட காலமாகவே, நந்தன் காலத்திலிருந்தே கோவில் களில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழையக் கூடாது என்றிருந்த நிலையை மாற்றி, தாழ்த்தப்பட்ட மக்களும் கோவில்களில் அர்ச்சனை செய்யலாம் என்ற நிலையை உருவாக்கியிருக்கிற அரசு இந்த அரசு. (மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

திரு. ஓ. என். சுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அரசாங்கத்தின்மீது கொண்டுவரப்பட்டிருக்கின்ற நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை ஒட்டி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஓ. என். சுந்தரம்] [1973 ஆகஸ்ட் 9

இத்தச் சட்டமன்றத்திலே ஆளும் கட்சி உறுப்பினர்கள் மெஜாரிட்டியாக இருப்பதால் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டாலும் கூட, இந்த திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்பதற்கான அபிப் பிராய நோக்கங்களை, பல்வேறுபட்ட கருத்துக்களைப் பல எடுத்துக் காட்டுகள் மூலம் இங்கே பலர் பேசியிருக்கின்றார்கள். நான் திண்டுக்கல் தொகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையில் திண்டுக்கல் தேர்தலைப்பற்றி முக்கியமாகக் குறிப்பிட விரும்பு கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய அபேட்சகரை நிறுத்தியிருந்தபோது அதற்கு எதிராகப் பல கட்சிகள் வேட்பாளர் களை நிறுத்தியிருந்தன. அப்படிப் பலருடைய போட்டி இருந்தாலும் கூட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிராக நான்கு லட்சத்திற்கு அதிகமான வாக்குகளை மக்கள் அளித்திருக் கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆளும் கட்சிக்கு அங்கே பெருத்த தோல்வி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மக்கள் மத்தியிலே இருந்து இன்றைய அமைச்சரவை விலகிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு எதிர்க் கட்சிகள் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றனர் என்று சொன்னால் மக்களுடைய எண்ணத்தைப் பார்த்த பின்னால்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கின்ற முதலமைச்சர் கருணாநிதியின் தலைமை யிலான இந்த அமைச்சரவை இனிமேலும் மக்களுக்குத் தேவை யில்லை என்ற கண்ணோட்டம் திண்டுக்கல் தேர்தல் மூலம் வெளிப் பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மு. ப. 10-00) அவர்கள் வெளியில் பேசுகின்றபோது இனிமேல் இந்த ஆட்சி மாறும் என்று சொன்னால் ஒரு பச்சைத் தமிழன் கையில்தான் போய்விடும் என்று சொல்லியிருக்கிறார்கள். வருங்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரவில்லை என்று சொன்னாலும், வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இங்கே

1973 ஆகஸ்ட் 9] [திரு. ஓ. என். சுந்தரம்]

வர முடியாது என்று சொல்கிறபோது, வருங்காலத்தில் தாங்கள் இனி வர முடியாதோ என்கிற அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது, இவர்களே தன்னம்பிக்கையை இழந்து வருகிறார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இந்த அரசின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன என்றாலும் ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்லி என் உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, இன்றைக்கு தமிழ்நாட்டில் 1969-க்குப் பின்னால் உணவு நிலைமையைப் பொறுத்தவரையில் உற்பத்தி பெருகியிருக்கிறது, தன்னிறைவு ஏற்பட்டிருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொள்கிறோம். 57.72 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 1970-71—இல் 70.30 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது, 1971-72 இல் 73 லட்சம் டன்னாக இருக்கும் என்கிற நிலையில்தான் இன்றைக்கு நம் மாநிலத்தில் உணவுப் பொருள்கள் விலை நான்கு மடங்கு, ஐந்து மடங்காக உயர்ந்திருக்கிறது. ஆளும் கட்சியில் உள்ள பல முக்கியஸ்தர்களும், உறுப்பினர்களும் இதை ஒத்துக்கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள்.

எந்த வகையில் விலையைக் கட்டுப்படுத்துவது என்பதுபற்றி விவசாயிகள், வியாபாரிகள், அதிகாரிகள், அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்து அமர்ந்து நீர ஆலோசித்தாகவேண்டிய நிலைமை உருவாகிவிட்டது. 1971-ம் ஆண்டு தேர்தலில் 183 அங்கத்தினர்களாக நீங்கள் வந்திருக்கிறீர்கள். உங்களிடம் விலைகளைக் கட்டுப்படுத்த உடனே நடவடிக்கை எடுங்கள் என்று கேட்காமல் வேறு யாரிடம் சென்று கேட்பது? இன்றைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற விலையும் அவர்களுக்குக் கட்டுப்படியாகவில்லை. எதிர்க்கட்சியில் இருக்கும்போது விலைவாசிப் போராட்டம் என்பதாக நீங்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பெல்லாம் மறியல் செய்து இந்த ஆட்சியைக் கைப் பற்றினீர்கள். இன்றைக்கு ஆட்சி உங்கள் கையில் இருக்கும் போதே விலைவாசிகள் நான்கு மடங்கு, ஐந்து மடங்காக உயர்ந்து கொண்டே போகிறது. அதைப் பார்த்து மக்கள் வேதனைப்படுவது மாத்திரம் அல்ல, இந்த ஆட்சி உடனடியாக நீங்கியாகவேண்டும் என்கிற நிலையில் இருக்கிறார்கள்.

[திரு. ஓ. என். சுந்தரம்] [1973 ஆகஸ்ட 9

வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்கள். அமைச்சர் மாதவன் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது 5 லட்சம் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மத்திய அரசின் உதவியோடுதான் அவர்களுக்கு எல்லாம் வேலையளிக்கும் திட்டத்தை உருவாக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு எதிராகக் கொடி உயர்த்தும்போது இந்த மாநில அமைச்சரவையே தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்துவிட்டு மத்திய அரசுதான் பொறுப்பு என்றால் அவர்களுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்த ஏன் முன்வரக்கூடாது என்று கேட்கிறேன். வேலையில்லாத் திண்டாட்டத்தினால் இன்றைக்கு எத்தனை ஆயிரம் இளைஞர்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது நான் சொல்லித் தெரியவேண்டிய அவசியம் இல்லை. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தச் சர்க்கார் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளத் தவறிவிட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்குப் பிரச்சினை. 1967 இல் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது திருவாளர் அண்ணாதுரை அவர்கள் 30—3—1967 இல் 'மதுவிலக்கை ரத்து செய்வது அல்லது அதைக் கைவிடுவது என்கிற உத்தேசம் இந்த அரசுக்கு நிச்சயமாக இல்லை' என்று தெளிவாகச் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் மதுவிலக்கை ஒத்திவைத்து விட்டார்கள், நாட்டின் வருவாயைப் பெருக்க. பல்லாயிரக் கணக்கான மக்களின் வாழ்வுக்கு உதவியாக இருந்த, தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வுக்கு உதவியாக இருந்த மதுவிலக்கை ரூ. 48 கோடி, ரூ. 50 கோடி வருவாய் கிடைக்கும் என்று ரத்து செய்து விட்டார்கள். அது சரியான கொள்கை அல்ல. அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். கள்ளுக்கடைகளை மூட உத்தரவு செய்துவிட்டோம் என்று சொல்லலாம். இது பாதிக் கிணறு தாண்டிய நிலைதான். இக் கரையும் இல்லை. அக் கரையும் போய்ச் சேரமாட்டார்கள். ஆக, இந்தப் பிரச்சினையில் அக்கறை இல்லாத காரணம் தான் சாராயக் கடைகளை, பிராந்திக் கடைகளை மூடாமல் கள்ளுக்கடைகளை மூடிவிட்டோம் என்று சொல்வது. இது மிகப் பரிதாபத்திற்குரிய

1973 ஆகஸ்ட் 9] [திரு. ஓ. என். சுந்தரம்]

நிலையாகும். சாராய, பிராந்திக் கடைகளின் மூலம் அதிக வருவாய் வரலாம். அதற்காக அவற்றை மூடாது கள்ளுக் கடைகளை மூடிவிட்டு, வருவாய் குறைந்துவிட்டது போல தமாஷா வரியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் பெரிதும் பாதிக்கப் படக்கூடியவர்களும் கீழ்நிலையில் உள்ள மக்கள்தான்.

பெட்ரோல், டீசல் வரியைப் போட்டிருக்கிறார்கள். இதனால் என்ன ஆயிற்று? ஒரு மூட்டைக்கு ஒரு ரூபாய் சாமான்களின் விலை போக்குவரத்துச் செலவில் கூடிவிட்டது. சென்னை நகரத்தில் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்குப் போக மீட்டர் சார்ஜுக்கு மேல் ஒரு ரூபாய், 2 ரூபாய் கொடுக்க வேண்டியிருக் கிறது. ஒவ்வொரு நிலையிலும் புகார் செய்து கொண்டே இருப் பார்களா? இந்த அரசின் தவறான கொள்கையினால்தான் விலை வாசி ஏறேயடியாக உயர்ந்துவிட்டது.

பூரணமாக மதுவிலக்கை இந்த அரசு கொண்டுவரவில்லை என்றால் எங்கள் கட்சியின் சார்பாக உறுதியாக ஒரு போராட்டத் தையே நடத்த வழிவகை செய்துகொண்டிருக்கிறோம். நீங்கள் இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாக இந்த மதுவிலக்குக் கொள்கையை, பூரண மதுவிலக்குக் கொள்கையை அமுலாக்கத் தவறினீர்களென்று சொன்னால், ஒரு பெரிய போராட்டமே நடை பெறும். அப்படிப் போராட்டம் என்று சொல்லும்போது, நான் சொல்லத் தேவையில்லை—தினசரிப் போராட்டங்கள் என்று அறிவித்துவிட்டு ஓடிவிடுபவர்கள் அல்ல நாங்கள்—போராட்டம் என்று சொன்னால் இலட்சக்கணக்கான மக்கள் அந்த அணியிலே திரண்டு கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டம் மதுவிலக்குக் காக மட்டும் அல்ல, அதனுடைய இணைப்பாக விலைவாசி ஏற்றம், மக்களுடைய உள்ளத்திலே உள்ள பல பிரச்சினைகள், முக்கியமான ஜீவாதாரமான பிரச்சினைகளை இணைத்து இலட்சக்கணக்கிலே, இன்றைக்கு அப்படிப்பட்டப் போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உடனே அப்படிப் பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறினீர்களென்று சொன்னால் அப்படிப்பட்ட போராட்டங்களின் மூலமாகத்தான் நீங்கள் ராஜினாமா செய்வீர்களென்று சொன்னால், அதையும் நீங்கள் சந்திக்கத் தயாராக இருக்கவேண்டும்.

[திரு. ஓ. என். சுந்தரம்] [1973 ஆகஸ்ட் 9

நீங்கள் நாட்டு மக்களுடைய வாழ்க்கையைக் கருத்தில் கொள்ள வேண்டும். இன்றைக்குப் பெரியவர்கள் அப்படி மதுபானம் அருந்துகிறார்கள் என்பது மட்டுமல்ல. நான் பார்க்கின்றேன், பல இடங்களில் இளைஞர்கள், மாணவர்கள், இவர்களெல்லாம் கெட்டு விடுகிறார்கள். பகிரங்கமாக, ஓட்டலிலே, ரூம்களிலே, உட்கார்ந்து மதுபானம் சாப்பிடுகிற ஒரு நிலையை உண்டாக்கிவிட்டீர்கள். இதற்கு நீங்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். அதை உடனடியாக நிறுத்தி, இப்படிப்பட்ட விவகாரங்களைத் தீர்க்கவேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க நீங்கள் ராஜினமா செய்ய வேண்டும். (குறுக்கீடு) ஆக, அப்படிப்பட்ட பிரச்சினைகளில் சபாநாயகர் அவர்களே, இந்த அமைச்சரவை (குறுக்கீடு) நான் பேசுவதெல்லாம் சபாநாயகர் மூலமாகத்தான். நேற்று டாக்டர் ஹாண்டே சொன்னதைப் போல், நான் எங்கு பார்த்து பேசினாலும் It will reflect on you, Sir. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினைகளை முடிவாக, திட்டவட்டமாக, ஏற்கனவே 1967-ல் பொறுப்பேற்ற முதல்வர் அண்ணாத்துரை அவர்கள் கொள்கையை. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஒன்று கேள்விப் பட்டேன். வர இருக்கிற பாண்டிச்சேரி பொதுத் தேர்தலின்போது காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றால், கள்ளுக்கடைகளை எல்லாம் மூடி விடுவோம் என்று நீங்கள் தேர்தல் பிரகடனம் செய்யப் போவதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா?

திரு. ஓ. என். சுந்தரம் : அப்படி ஆட்சி கைக்கு வந்தால், அங்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டிலும், மதுவிலக்கை அமுலாக்குவோம். இரண்டுவிதமாக இருக்க மாட்டோம். மதுவிலக்கை அமுல் செய்வோம் என்று மிகத் தெளிவாக. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தியாவிலே பல மாநிலங்களில் பழைய காங்கிரஸ் கட்சி ஆண்டபொழுது, மைசூர் மாநிலத்திலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட நிலைமையும், தமிழ் நாட்டிலே மதுவிலக்கு இருந்த நிலைமையும் இருந்ததே, அதற்கு என்ன காரணம் ?

திரு. ஓ. என். சுந்தரம் : நான், இப்பொழுது தமிழ்நாடு சட்ட மன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே எங்களுடைய—என்னுடைய—அபிப்

1973 ஆகஸ்ட் 9] [திரு. ஓ. என். சுந்தரம்]

பிராயத்தைச் சொல்லி இருக்கிறேன். மூதல்வர் எங்கோ என்னை வளைத்து சிக்க வைக்க வேண்டுமென்று நினைக்கவேண்டாம். நான் அவ்வளவு பெரிய தலைவர் அல்ல. என்னுடைய எண்ணத்தைச் சொல்கிறேன். நீங்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தைப் பொறுத்த வரையிலும், இங்கே உள்ள மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று சொன்னால் அதைக் கடைப்பிடியுங்கள். இல்லையென்றால், இறுதியாக நான் சொல்கிறேன், இதனுடைய விளைவை சந்திக்கத் தயாராக இருக்கவேண்டும். இதனுடைய முடிவு என்ன ஆகும் என்பதை வருங்காலம் தெரிவிக்கும் என்று பணிவாகத் தெரிவித்து இந்த சந்தர்ப்பத்திலே பேசுகின்ற வாய்ப்பு கொடுத்ததற்கு சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: போவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே மாற்றுக் கட்சி நண்பர்கள் கலைஞர் அரசு மேல், அமைச்சரவை மேல் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் நான் கண்டித்து ஒருசில கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் நடைபெறும் கலைஞரின் ஆட்சி பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி வகுத்த கொள்கையிலே நடந்துகொண்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டிலே உள்ள தொழில்களையெல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்ற ஒரு உன்னத கொள்கையைக் கொண்டிருந்தார்கள். அந்த வழியில் தான் கலைஞர் அவர்கள் குறிப்பாக இந்த நாட்டில் 5 ஆண்டுக்குள் பஸ் தொழிலையெல்லாம் தேசியமயமாக்கவேண்டுமென்ற ஒரு நல்ல கொள்கையைத் திட்டம் தீட்டி செயல்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டிலே குடியிருக்க வீடில்லா ஏழை எளிய மக்களுக்கு, பல இலட்சக்கணக்கான மக்களுக்கு, வீட்டு மனைப் பட்டா போட்டுக் கொடுக்கவேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள். அவர் காலத்திலேயே ஏழை மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டது. அதே மாதிரி கலைஞர் ஆட்சியில் பல இலட்சக்கணக்கான ஏழை மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதே மாதிரி ஏழை விவசாயிகள், நிலம் இல்லாதவர்களுக்குப் பல இலட்சக்கணக்கான ஏழை விவசாயிகளுக்கு நிலப் பட்டா கொடுக்கப்பட்டு வருகிறது.

[திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்] [1973 ஆகஸ்ட் 9

அது மட்டுமல்ல, இந்த நாட்டிலே கைத்தறி நெசவுத் தொழிலாளி நூல் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான். வாழ்க்கையிலே அவதிப்படுகிறான். இந்தக் கஷ்ட காலத்தில் அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்கவேண்டுமென்று நல்லதொரு திட்டத்தைக் கொண்டுவந்து ஏழை கைத்தறி நெசவுத் தொழிலாளிக்கு, ஆள் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் வட்டியில்லாக் கடன் இன்றையதினம் தமிழ்நாட்டிலே கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் தமிழக அரசு, தமிழக அமைச்சரவை செயல்படுத்திக் கொண்டு வரும்போது, மாற்றுக் கட்சி முகாமிலே உள்ள நண்பர்கள் எதிர்க்கின்றார்கள். நம்பிக்கையில்லை, ராஜினமா செய்யவேண்டுமென்றெல்லாம் கேட்டுக்கொள்கிறார்கள். ஆனால், அந்த நண்பர்கள் வெளியே பேசும்பொழுது, பொதுவுடைமைத் தோழர்களாக இருந்தாலும் அல்லது சோசலிசம் பேசக்கூடிய கட்சிக்காரர்களாக இருந்தாலும் இந்த நாட்டிலே ஏழைகள் வாழ வேண்டும், தொழில்களை தேசியமயமாக்கவேண்டும், ஏழைகளுக்கு ஆதரவு கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்லக்கூடிய கருத்தை இந்த ஆட்சி செயல்படுத்திக் கொண்டு வருகிறது. இப்படி வரும்போது ஏன் எதிர்க்க வேண்டுமென்றே தெரியவில்லை.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் இந்த இந்திய நாட்டிலே தமிழகத்தில்தான் உணவின் விலை, குறிப்பாக, அரிசியின் விலை குறைவாக இருக்கிறது. கேரளத்தில் ஒரு படி அரிசி ரூ. 5-க்கு விற்கப்படுகிறது. அங்கே ஆளக்கூடியவர்கள் பொதுவுடைமைக் கட்சியின் தோழர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்களுமாவார்கள். மற்ற மாநிலங்களிலே பம்பாய் போன்ற மாநிலத்திலே ஒரு லிட்டர் ரூ. 5.50 என்று இருக்கிறது. அங்கே ஆளுவது திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. அங்கே ஆளக்கூடிய சட்சிக்காரர்கள், இங்கே ரூ. 2-க்கு அரிசி விற்பதைக் கண்டிக்கிறார்கள். ரூ. 2-க்கு அரிசி கொடுக்கக்கூடிய அரசை ராஜினமா செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். நீங்கள் சொல்வதையெல்லாம் மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். மாற்றுக் கட்சி முகாமிலே இருக்கக்கூடியவர்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறதா, நியாயம் இல்லாமல் கட்சி வாதத்திற்காகப் பேசுகிறார்களா என்று பார்க்கிறார்கள்.

1973 ஆகஸ்ட் 9] [திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்]

அதே நேரத்தில் ஒரு சில பொருள்களின் விலை கூடுதலாக இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். அப்படி ஒத்துக்கொள்ளுகிற நேரத்தில் அந்தப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துகிற உரிமை தமிழக ஆட்சிக்கு இல்லை. எண்ணெயினுடைய விலை, நெல்லின் விலை, செயற்கைப் பட்டின் விலை எல்லாம் இப்படித்தான். இந்தத் தமிழகத்திலே ஏறக்குறைய ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு மேலாக செயற்கைப் பட்டைப் பயன்படுத்துகிறார்கள். அந்த செயற்கைப்பட்டு தமிழகத்திலே உற்பத்தி ஆகிறது. அந்த செயற்கைப் பட்டை வினியோகிக்கிற உரிமை தமிழக ஆட்சியிடம் இல்லை. அந்த உரிமையை மத்திய ஆட்சி தன் கையிலே வைத்திருக்கிறது. இன்றையதினம் தமிழகத்திற்கு வேண்டிய செயற்கைப் பட்டை விநியோகிப்பது யார்? தூரத்திலே இருக்கிற, யாரோ ஒரு மேத்தா—அவர் பஞ்பாபைச் சேர்ந்தவர். அவர்தான் பம்பாயிலே உட்கார்ந்து கொண்டு இன்றையதினம் தமிழகத்திற்குப் பட்டைப் பிரித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். பட்டு, செயற்கைப் பட்டு, சரியான முறையிலே தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை. அதைப்பற்றி இன்றையதினம் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கவலைப்படுவதில்லை. எத்தனையோ மகஜர்கள் அனுப்பிவிட்டோம். சின்னாளப்பட்டியிலே உள்ள கைத்தறி நெசவாளர்கள் செயற்கைப் பட்டு கிடைக்காமல் இன்றையதினம் தபால் ஆபீசின் முன்பு மறியல் செய்கிறார்கள், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக. தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக அல்ல, மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகத்தான் அவர்கள் இன்றையதினம் மறியல் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இதையெல்லாம் ஆளுங்காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அம்மையார் அவர்கள் இந்திரா காந்தி அவர்களுக்கு இதையெல்லாம் எடுத்துச் சொல்லவேண்டும். தனிப்பட்ட முதலாளிகள் கோடிக்கணக்காகக் கொள்ளை அடிக்கிறார்கள். அதை யெல்லாம் அவர்கள் கவலைப்படுவதில்லை, ஆலை இங்கே இரண்டு ரூபாய்க்கு அரிசி விற்கிறது என்றால் இதைக் கண்டிக்கிறார்கள், இந்த அரசு ராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள்.

[திரு. வ. எம். டி. நாச்சியப்பன்] [1973 ஆகஸ்ட் 9

இந்த அவையிலே நேற்றைய தினம் ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு பெண் ஒரு நோட்டீஸை விட்டெறிந்தார்கள். இந்த கருணாநிதி ஆட்சியிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மைகள் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு பல நன்மைகளைச் செய்து இருக்கிறது.

குறிப்பாகத் தமிழகத்திலே ஆலயங்களுக்குள்ளே அரிசன மக்கள் செல்லமுடியாது இருந்த நிலைமையை மாற்றியது இந்தத் தமிழக அரசுதான். அது மட்டுமல்ல, கடவுளுக்கு அபிஷேகம் செய்வதற்கு ஒரு அரிசனக் குடிமகனுக்கு உரிமை உண்டு என்று கூறி அதற்கு எற்பாடு செய்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை மறந்துவிட்டார்கள். அது மாத்திரமல்ல, ஆலயங்களிலே டிரஸ்டிகள், கட்டாயமாக ஒரு அரிசன மகனையாவது அறநிலையப் பாதுகாவலராக இருந்தாக வேண்டுமென்ற முறையிலே ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டுவந்தவரும் டாக்டர் கலைஞர் அவர்கள் தான் என்பதை மறந்துவிட்டார்கள்.

இதைத் தவிர, இன்றையதினம் இன்னும் பல நற்காரியங்களை இந்த அரசு செய்துகொண்டுதான் இருக்கிறது. இருபது ஆண்டுக் காலத்திற்கும் மேலாக காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள். அந்தக் காலத்திலே ஒரு உயர்நீதிமன்ற நீதிபதிகூட அரிசன மக்கள் நியமிக்கப்படவில்லை. ஆனால் கலைஞர் ஆட்சியிலே தான் ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி அரிசனக் குடிமகன் நியமிக்கப் பட்டிருக்கிறான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த நாட்டிலே அரிசன மக்களுக்கு சுமார் 80 ஆயிரம் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. வீட்டுமனை இருந்தாலும் அவர்களால் வீடுகள் கட்டிக் கொள்ள முடியாது என்ற நிலைமையை உணர்ந்து நம்முடைய கலைஞர் அவர்கள் அந்த வீடுகளையும் குறிப்பாக பத்தாண்டுக் காலத்திற்குள் கட்டி முடிப்பதற்கான ஒரு திட்டத்தையும் தீட்டி இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுறுத்த விரும்புகிறேன். இதற்காகத்தான் கலைஞர் அவர்களும் அவர்களுடைய அமைச்சரவையும் ராஜினாமாச் செய்ய வேண்டுமா? முடிவாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 9] [திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்]

திண்டுக்கல், திண்டுக்கல் என்று மாற்றுக்கட்சி முகாமிலே உள்ளவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திண்டுக்கல் தேர்தலிலே தி. மு. க. அபேட்சகர் தோல்வியடைந்து விட்டார், ஆகவே ராஜிநாமா செய்யவேண்டுமென்றும், உங்களுக்கு டெபாசிட் வராது என்றும் சொல்கிறார்கள். திண்டுக்கல் தேர்தலிலே கொள்கையடிப்படையிலே மக்கள் ஓட்டுப் போட்டார்களா? சேவையின் அடிப்படையிலே மக்கள் ஓட்டுப் போட்டார்களா? இல்லவே இல்லை அங்கே ஓட்டுப்போட்டது சினிமா மாயை. அந்த சினிமா மாயையை நீங்கள் ஏற்கிறீர்கள். ஒரு தொகுதியிலே சினிமா மாயையிலே மக்கள் ஓட்டுப் போட்டுவிட்டால் இந்த நாடு மூழுவதும் அப்படி ஓட்டுப்போடுவார்கள் என்று நம்பவேண்டாம். திண்டுக்கல் தேர்தலைக் காட்டி ராஜிநாமாச் செய்யவேண்டுமென்றும் டெபாசிட் வாங்கமுடியாது என்றும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். நான் நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். இன்றைய தினம் திண்டுக்கல்லிலே திராவிட மூன்னேற்றக் கழகம் மட்டும் எதிர்த்து நிற்கவில்லை, ஸ்தாபன காங்கிரஸ் கட்சி நின்றது, ஆளும் காங்கிரஸ் கட்சி நின்றது. அங்கே ஆளும் காங்கிரஸ் கட்சியின் நிலை என்ன? டெபாசிட் போனது. அதை வைத்துக் கொண்டு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், திண்டுக்கல் தொகுதியிலே டெபாசிட் போய்விட்டது, ஆகவே நீங்கள் ராஜிநாமா செய்யவேண்டும், இந்தியாவிலுள்ள மக்கள் அனைவரும் உங்கள் பக்கம் இல்லை, ஆகவே ராஜிநாமா செய்யுங்கள் என்று வாதம் செய்தால் அதைப் பார்த்து அரசியல் தெரிந்த அறிஞர்கள் கை கொட்டிச் சிரிப்பார்கள். இன்றைய தினம் மாற்றுக் கட்சி முகாமிலே உள்ளவர்கள் உண்மையிலேயே ஏழை மக்கள் வாழ்வில் அக்கறை கொண்டிருப்பார்களானால் அவர்கள் இந்த அரசை ஆதரிக்கவேண்டும், ஆகவே இந்த அரசின்மீது கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் வன்மையாகக் கண்டித்து முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றையதினம் சபையிலே நடந்துகொண்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானம் சம்பந்தமாக நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1973 ஆகஸ்ட் 9

நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது இன்றைய தினம் ஒரு அர்த்தம் இல்லாத நிகழ்ச்சியாகிவிட்டது. அரசாங்கம் ஒரு பெரிய தவறை இழைத்தபிறகு அந்தத் தவறை எடுத்துச்சொல்கின்ற அளவிற்கு இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அரசாங்கத்தைக் கீழே இறக்கக்கூடிய அளவுக்கு நிலைமைகள் உருவானபிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது பொருத்தமாக முடியும். இன்றைய தினம் எதற்கெடுத்தாலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து சபையினுடைய நடவடிக்கைகளை மக்கள் பார்த்து ஒன்றும் அர்த்தம் இல்லாத அளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தினுடைய உணவுக்கொள்கை சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற கண்டனத் தீர்மானம் நியாயமான விஷயம் ஆகும். உணவு விஷயத்திலே மிகப் பெரிய தோல்வி ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே உபரியாக உணவு உற்பத்தி செய்யக்கூடிய இந்த நாட்டிலே ஏன் பற்றாக்குறை ஏற்பட வேண்டும்? ஒரு பகுதியிலே உள்ள மக்கள் தங்களுக்கு உணவு கிடைக்கவில்லை என்று ஏன் கஷ்டப்படவேண்டும் என்பதை யோசிக்கவேண்டும். மக்களுக்கு அத்தியாவசியமாகக் கிடைக்க வேண்டிய உணவுப் பண்டங்களின் விலை அதிகமாக எறிக்கொண்டிருக்கிறது. தேவையான அளவுக்கு அவை கிடைக்காத நிலை இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அரசாங்கம் இதிலே தீவிரமாக இருந்தாக வேண்டும். உணவைப் பதுக்குகிறவர்கள்மீதும் கள்ளமார்க்கட்காரர்கள்மீதும் ஏதோ சில பேர்கள்மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. உண்மையிலேயே பதுக்கல்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் பல்லாயிரக்கணக்கான பதுக்கல்காரர்களைக் கைது செய்திருக்க வேண்டும். இப்படித் தீவிரமாக நடவடிக்கை எடுத்தால்தான் அதைக் கட்டுப்படுத்தமுடியும். தனி நபர்களிடம் உணவு தானிய வர்த்தகத்தை விட்டதனால்தான் அரசாங்கத்திற்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் ஆரம்பத்திலேயே சொன்னோம். உணவு தானிய வர்த்தகத்தை அரசாங்கம் மேற் கொண்டு விநியோகம் செய்வதன் மூலமாகத்தான் வாங்கிப் பயன் படுத்துகின்ற மக்களின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய

1973 ஆகஸ்ட் 9] [திரு. ஆ. கு. சுப்பையா]

முடியும். அதைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் தயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் தமிழகத்திலே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே அதிக விலைக்கு உணவு வாங்கி பயன்படுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. பகிரங்கமாகவே மார்க்கட்டிலே மூன்றரை ரூபாய்க்கு அரிசி விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு படி அரிசி ஒரு இடத்திலே 80 பைசாவும் இன்னொரு இடத்திலே ஒன்றரை ரூபாயும் விற்கக்கூடிய சூழ்நிலையெல்லாம் இருக்கிறது. இது ஏன் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அப்படி யோசித்துப் பார்த்தால் உணவு நெருக்கடியைத் தீர்க்கமுடியும். அப்பொழுதுதான் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும். இல்லாவிட்டால் மக்கள் இந்த அரசாங்கத்தின்மீது அதிருப்தியைத் தெரிவிக்கக்கூடிய நிலைமை வரும். சாதாரணமாக விவசாயிகள் மாடுகள் வைத்திருக்கிறார்கள். அந்த மாடுகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தப்படும் புண்ணாக்கு ஒரு மூட்டை 100 ரூபாய் என்று விற்கிறது.

அதைப்போலவே சிமெண்டும் நியாயமான விலைக்குக் கிடைக்க வில்லை. இப்படி அத்தியாவசியமான, தேவையான பண்டங்கள் அதிக விலைக்கு விற்கின்றன. அதற்குக் காரணம் தனி நபர்கள் தங்களுடைய லாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு பதுக்கி வைத்து வருகிறார்கள். புண்ணாக்கு கிடைக்கவில்லையா, கிடைக்கிறது. அதைப்போலவே சிமெண்ட் கிடைக்கவில்லையா, கிடைக்கிறது. ஆனால், அதிகமாக விலை கொடுத்தால்தான் கிடைக் கிறது, நியாயமான விலைக்குக் கிடைப்பதில்லை.

எனவே, தேவையான உணவுப் பண்டங்களை அரசாங்கமே நேரடியாக விநியோகம் செய்வதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். அதில் சிரமங்கள் இருக்கத்தான் இருக்கும். ஆனால், அதுபோல் மற்ற மாநிலங்களில் ஏற்பட்டிருப்பதால் நம்முடைய மாநிலத்திலேயும் அதுபோல் செய்து விலையைக் கட்டுப்படுத்த முடியும். பீஹார் மாநிலத்திலே சர்வ கட்சி கமிட்டி என்று ஒரு கமிட்டியை அமைத்து அதன்மூலம் உணவுப் பொருள்களின் விலையைக் குறைத்திருக்கிறார்கள். அதுபோல் நம்முடைய மாநிலத்திலேயும் செய்யமுடியும். சகல மட்டத்திலேயும் சர்வ கட்சி கமிட்டிகளின் மூலம் விநியோகம் செய்யும் முறையை ஏற்படுத்து வதன் மூலம்தான் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியுமே

[திரு. ஆ. சூ. சுப்பையா] [1973 ஆகஸ்ட் 9

தவிர, அரசாங்கம் மட்டும் அதிகாரிகளே நம்பிக்கொண்டிருந்தால் மட்டும் இந்த விநியோகப் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும்.

ஆகவே, இன்றையதினம் குமரியில் நடந்த கிளர்ச்சியில் காங்கிரசின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிறகு, மற்ற கட்சியினரும் ஒவ்வொரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் தொடர்ந்து கிளர்ச்சியை நடத்துவதாக அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய யோசனைப்படி சகல கட்சியினரையும் அழைத்துப் பேசுங்கள். மாநில அளவிலே எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசுங்கள். அவர்கள் கூறுகின்ற ஆலோசனைகளைக் கேட்டு அதன் அடிப்படையிலேயே தமிழகத்திலுள்ள உணவுப் பற்றாக்குறையை உணவு நெருக்கடியைத் தீர்க்க ஆலோசனை செய்வதன் மூலம் தீர்வு காண முடியும்.

இன்றைக்கு கறுப்புப் பணப் புழக்கம், கள்ள மார்க்கெட் போன்ற காரியங்களால்தான் உணவுப் பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன என்று சொல்வது நியாயத்திற்குப் புறம்பாகத்தான் இருக்கும். அதையே காரணமாக வைத்து இந்த விஷயத்திலே நாம் மிதமாக இருக்கக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்த முறையிலே கார்டுகள் வழங்கும் முறை இருக்கிறது. சீனிக்குக் கொடுத்த கார்டுகளைக் கொண்டு அரிசி வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். பெரிய மனிதர்கள், பெரிய பணக்காரர்கள் அதிக அளவில் வாங்கக்கூடிய அளவிற்கு சீனி கார்டுகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கார்டுகளின் மூலம் வாங்கப்படும் அரிசி கள்ள மார்க்கெட்டிலே விற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, கார்டுகள் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவரவர்களின் வருமானத்திற்குத் தகுந்தாற்போல் அளந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய வருமானம் படைத்தவர்களுக்கு மட்டுமல்ல, வசதி படைத்தவர்களுக்கு மட்டுமல்ல, சாதாரண மக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கிலோ அளவிலே 89 இலட்சம் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எல்லோருக்கும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

1973 ஆகஸ்ட் 9]

திரு. ஆ. கு. சுப்பையா : உணவு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், சகல பேர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது என்று. சீனி கார்டுகளை வைத்துக் கொண்டும் அரிசி வாங்கலாம் என்றிருக்கிறது. அதேபோல் சீனி கார்டுகளை வைத்துக்கொண்டு மண்ணெண்ணெய் வாங்கலாம் என்று இருக்கிறது. வசதியானவர்கள் தங்கள் கார்டுகளை மற்றவர்களுக்குக் கொடுத்து அதிக விலைக்கு விற்க வேண்டிய நிலையில் இருக்கிறது என்று நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆகவே, குமரி மாவட்டத்திலே ஏற்பட்ட விவகாரத்தைத் தீர்ப்பதற்காக சகல கட்சிகளையும் அழைத்துப் பேச வேண்டும். இப்பொழுது ஒரு கட்சியினர் மட்டும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மட்டும் போராட்டத்தை வாபஸ் பெற்று விட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற கட்சிகள் தொடர்ந்து போராடுவோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்கள் அன்றைக்குப் பேசும்பொழுது எல்லோருடனும் பேசத் தயார் என்று சொன்னார்கள். ஆகவே, இங்கே சட்டமன்றத்திலே பழைய காங்கிரசைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்தார்கள். அதை ஒப்புக் கொண்டார்கள். அதைப்போலவே அவர்களும் சொல்லியிருந்தால் அதைப்பற்றியும் முதலமைச்சரவர்கள் சொல்லியிருப்பார்கள். எனவே, யாரையும் தனியாகக் கூப்பிட்டு இந்த முடிவை எடுக்கவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : சட்டமன்றத்தில் சில கட்சிகளின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். சில கட்சிகளின் பிரதிநிதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, சட்டமன்றத்தில் உள்ள கட்சிகளை மட்டும் கலந்து பேசி கோரிக்கைகளை ஏற்போம் என்று சொல்வது வெளியிலே உள்ள, சட்டமன்றத்திற்கு வர முடியாமல் இருக்கும் கட்சிகளை அரசாங்கம் புறக்கணிப்பது போலாகும் என்றுதான் சொன்னேன். சகல கட்சிகளையும் கலந்துபேச ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லாக் கட்சிகளையும் கொண்ட சர்வ கட்சி கமிட்டியை நம்முடைய மாநிலத்திலே அமைக்க வேண்டும். பீஹார் மாநிலத்திலே அப்படிச் செய்திருக்கிறார்கள் அப்படிச்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1973 ஆகஸ்ட் 9

செய்வதால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் இன்றுள்ள பிரச்னையைத் தீர்ப்பதற்கு சிறந்த ஆலோசனையைச் சொல்ல முடியும்.

அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்திலே விளவங்கோடு, பைங்குளம், மிடாலம், கீழ் மிடாலம் போன்ற பகுதிகளில் கார்டுகள் கொடுக்கப்படவில்லை என்று தகவல் வந்திருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு உடனே கார்டுகள் கொடுக்கப்பட வேண்டும். எனவே, இங்கேயுள்ள நெருக்கடிகளுக்கு மத்திய அரசுதான் காரணம் என்று சொல்வது வாதத்திற்குப் பொருத்தமாக இருக்குமே தவிர பிரச்னைகளுக்குத் தீர்வாக அமையாது. எனவே, என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று ஆராய்ந்து சில காரியங்களைச் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே மதுவிலக்கு சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் கள்ளுக்கடைகள் மூடப்பட்டு விட்டன. அதிலே மரமேறிகளாக இருந்தவர்களின் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் எங்களுக்கு என்ன வேலை தருகிறீர்கள், என்ன நிவாரணத்தைத் தருகிறீர்கள் என்று கேட்கும் அளவில் நிலைமை உருவாகி இருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் செய்தாக வேண்டும். இல்லையென்றால் அவர்களைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, கூட்டுறவு மூலமாகத் தொழில்கள் ஏற்படச் செய்வதன் மூலமாக அந்த மரமேறும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கொடுத்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கள்ளுக்கடைகளை மட்டும் மூடுவது போதாது. கிராமப்புறங்களில் கள்ளுக்கடைகள் அதிகமாக ஏற்பட்டிருந்தன. அதனால், அவர்களின் பொருளாதாரத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. அதைப்போலவே, சாராயக் கடைகளையும் மூட வேண்டும். படிப்படியாகச் செய்கிறோம் என்று சொல்வது சரியல்ல. அரசாங்கத்திற்கு அதனால் எவ்வளவு ரூபாய் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை. இம்மாதிரி தீமையான காரியங்களிலே ஏழை மக்கள் ஈடுபட்டு தங்களுடைய பொருளாதாரத்தைச்

1973 ஆகஸ்ட் 9] [திரு. ஆ. கு. சுப்பையா]

சேதப்படுத்தும் நிலையை நாம் அனுமதிக்கக் கூடாது என்ற அடிப்படையிலே மது சம்பந்தப்பட்ட சகல கடைகளையும் மூடியாக வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, பல இடங்களில் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதிகாரிகள் எந்த அளவிற்கு நியாயமாக நடக்கிறார்கள் என்று நம்மால் சொல்ல முடியவில்லை. அதிகாரிகளே இந்தக் காரியங்களுக்குத் தூண்டுகோலாக இருக்கிறார்கள். தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களிலே, பெரிய குப்பத்திலே உள்ளே புகுந்து ஜனங்களை கன்னபின்ன என்று அடித்திருக்கிறார்கள். இது போன்ற சிறு சம்பவம் என்றாலும் அடிப்பது, துன்புறுத்துவது போன்ற காரியங்களால் சர்க்காருக்குத்தான் கெட்ட பெயர் ஏற்படும் நிலை இருக்கிறது. அரசாங்கம் முழு அளவிலே அதிகாரிகளை நம்பிக்கொண்டு அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு நடத்து கொண்டால் அரசாங்கத்திற்கு அவர்கள்தான் விரோதமாக இருக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவே, அரசாங்கம் உடனடியாக உணவு விஷயத்திலே தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நெல்லுக்கு நியாய விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று பெரிய இளர்ச்சி நடக்கிறது. நெல்லுக்கு நியாயமாக விலை நிர்ணயம் செய்வது மிக மிக அவசியம். விவசாயிகளுக்கு சாகுபடி செலவு அதிகமாகி இருக்கிறது. உற்பத்தி செய்பவர்களுக்கு பெரிய நஷ்டம் வருகிறது. அந்த அளவில் நஷ்டம் வராமல் இருக்கும் அளவில் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு, நியாயமான விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே பொருள்களை வாங்கி உபயோகிப்பவர்களுக்கும் நியாயமான விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். இப்படி இரண்டு பகுதியினருக்கும் பாதுகாப்பு செய்ய வேண்டும். அப்படி நடவடிக்கை எடுப்பது என்றால் அதற்கு அரசாங்கமே பொறுப்பை ஏற்கவேண்டும். கொள்முதல் செய்யும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்க வேண்டும். விநியோகம் செய்யும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்க வேண்டும். இந்த இரண்டையும் செய்வதால்தான் உணவு சம்பந்தமாக ஏற்பட்டு இருக்கும் நெருக்கடிகளைத் தீர்க்க முடியும். அப்படியில்லாமல் தனி நபர்களை நம்பினால்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1973 ஆகஸ்ட் 9

நெருக்கடி இன்னும் அதிகரிக்கும். இன்னும் அதிக லாபம் சம்பாதிக்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்ப்பார்கள். அதனால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு சர்வ கட்சி கமிட்டிகளைக் கிராமங்களிலேயிருந்து சகல மட்டத்திலேயும் அமைப்பதுதான் சரியாக இருக்கும் என்று சொல்லி இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Chairman Sir, I am drawn to the painful necessity of supporting the No-Confidence Motion that has been moved and also the Censure Motion that has been moved by my friends. Sir, it is not a pleasure for any parliamentarian to speak on such subjects. Unfortunately, the Ruling Party has reduced itself to this position of being not only provoking the members to move No-Confidence Motion but also a Censure Motion.

Sir, this Government is now called by the public as a Government ruled by cycle-chains, sharp knives, pistols, spears and many other weapons. That is the opinion among the general public.

Taking from the inception of the new Government from 1971, almost all the sections of the public have been affected. First, the busmen-medical college students clash started . . .

திரு. மு. சின்னசாமி : அங்கத்தினர் என்ன பேசுகிறார் என்றே சரியாகப் புரியவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : I know that this interruption will come. Such a thing is general and common from the Ruling Party. I cannot help it.

Now from the busmen-medical college students clash, it went to Annamalai University and from Annamalai University it went to various places. I can mention certain important places. Recently, it started from Clive's Hostel and went to Palayamkottai and from there it went to Erode and from there it came to Madurai. Last year more number of students were outside the schools than inside the schools. There were a number of holidays than working days. This is the unfortunate state of affairs that

prevailed. It reflects on the functioning of the Education Department in this State. I do not want to expand more this point. Therefore, I am sure the State Government is not worth existing to-day.

Coming to the labour point . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஸ்டுடன்ட்ஸ் அண்டு பஸ்மென் கிளாஷ் நடைபெற்றதாகச் சொன்னார்கள் அது 1971-க்குப் பிறகா அல்லது அண்ணு அவர்கள் ஆட்சிக்காலத்திலா?

THIRU K. M. SUBRAMANIAM : I have got bad memory because I am 66 years. I leave it to him to decide about it. The Clive 's Hostel incident, the Hon. Chief Minister can understand and his heart will tell him about it.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பஸ் தொழிலாளர் களுக்கும் மாணவர்களுக்கும் இடையே பல்வேறு மோதல்கள் ஏற்பட்டன, அது மோசமானது என்று சொன்னார்கள். அது நடந்தது எப்போது என்று கேட்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : The Hon. Chief Minister will know what has happened last year in the Clive's Hostel, what has happened in Palayamkottai, what is happening in Erode and what is happening in Madurai. I can only give certain generalisations. I cannot go into all the details of the incidents. We know that the Education Department in the State has been extremely bad and the parents are really afraid of sending their children and they are also thinking whether they can send their children to schools and some to Colleges, or not.

Coming to the labour problems, I would like to say this. There has been very serious attempts on the part of the Ruling Party to get hold of all the labour unions in the State unleashing violence in various factories and also closure of factories. It has affected the mass production in factories and also loss of wages to many workers. I need not go into all the actual details.

The workers of Simpson and other Companies have been handled very badly by this Government. Now the new Minister may say that he has come only recently and he will handle it

better. But the general and common responsibility of the Cabinet is always there. Last year, there has been very serious loss of production, loss of wages to workers, etc. I think Tamil Nadu stands first in all such things. I think the position may improve next year, perhaps, if the Government continues in office next year.

Coming to the most important point, namely, the Dindigul election, I would like to say this. I have had occasion to go to Dindigul during the recent election. I am not going to ask for the resignation of the Ministry for its defeat in the recent election or for its failure in many fields, but I only want to refer to certain things that were written on the walls. It is very very bad for any Ruling Party or any other party. What has happened is this. It is easy for them to explain that the defeat was due to cinema glamour. For their own satisfaction, they might have explained in such a way.

On the political side, we must see what has happened in Dindigul. I went from village to village. I have covered nearly 24 villages. When I asked them during my tour as to whom they are going to vote, they have said that they will vote for the new party other than ruling party. Even after 27 years of Independence—20 years of rule by the Congress Party to which I belonged and seven years afterwards—the people are living in the same hut and they are having the same 'kanji'. The ladies are wearing the same saree. There is no economic improvement in villages. There is great political awareness among the public and I am very glad about it. The Dindigul election has clearly shown that democracy can function well in this country. It has not only shown that democracy will function but also shown the peoples' attitude towards the political situation and given the verdict that they can also prevent bad handling of any situation in the country.

What they have said during my tour is this. Our income is Rs. 3 per day, that is, Rs. 90 per month. From this, the Government can very well understand whether any economic improvement has been made during the last 27 years. It has not touched even the fringe of the problem.

1973 ஆகஸ்ட் 9] [திரு. கே. எம். சுப்பிரமணியம்]

Similarly I made some enquiries with regard to handloom weavers. Their income is Rs. 96 per family of five members. It comes to Rs. 20 per individual and it amounts to Rs. 240 per year. Is this not bad for an individual to get Rs. 240 per year? It clearly shows that it is a political defeat and not cinema glamour. It may be 10,000 people who may have cinema glamour. What about two lakhs of people who have voted for that party? These 2 lakhs did not have cinema glamour. They are all the persons who have no house to live in. They are all the persons who have no cloth to wear. They are all the persons who have no food to eat. They are living in the same old hut. There are ladies who are wearing the same saree with the same upper choli. They have no sympathy for the ruling party.

Coming to the labour front, I think the only show-piece that this Government is exibiting during the last three years is the Housing Board and Slum Clearance Board. They are only a show-piece and nothing else. If you go into the accounts of the Housing Board or Slum Clearance Board, you will find that there will be no accounts. The Chairman of the Housing Board does not know what are the arrears, what are the amounts to be paid, and what are the amounts that were taken from the people, etc. I know there is one place near Appavu Nagar. In Appavo Nagar, acquisition was dropped by the Government. Then private negotiations came and payment was raised from Rs. 75,000 to Rs. 1 lakh and odd. What is the position now? I am afraid the title deed has not gone to the Housing Board because some of the people are interested in it. I request the Ministry to enquire into that matter and see what has happened. This is the way in which the Housing Board is working and also the Slum Clearance Board is going on.

திரு. இராம. அரங்கண்ணல்: அப்பாவு நகருடைய சொத்து அந்த டைட்டில் டீட் சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது என்பது திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரியும். அந்த சொத்து யாருடைய சொத்து? ஏற்கெனவே, தாங்கள் சட்ட மன்றத்தில் பேசிய நேரத்தில் அப்பாவு முதலியாருக்காக வாதாடிய

தாகக் கவனம். அந்தச் சொத்து யாருடைய சொத்து? அந்தத் தொகுதி உறுப்பினர் என்ற முறையில் அவருடைய கருத்து என்ன?

THIRU K. M. SUBRAMANIAM: I am not prepared to do it now because it is a day for discussing the No-Confidence Motion and Censure Motion. I know all the details. I will come and explain to you. I take the full responsibility for the statement and come and explain to you since the hon. Member is the Chairman of the Slum Clearance Board. As Chairman of the Slum Clearance Board he knows all the details as to whom the property belongs and how they have been given. I do not want to go into all those questions now.

Now the country is facing a very big crisis. The administration is breaking down. The senior officers are afraid to punish their junior officers because the junior officers have contact with the Ministry and MLAs. If this is the position, how can there be discipline in the administration? The senior officers have no powers or guts to tell the Ministry because they are afraid of the dangers. If there is no discipline in the administration, the administration will collapse.

The other day, my hon. Friend Dr. Hande explained as to how the Police stations are controlled by local men belonging to the Ruling Party.

Now, Sir, with regard to prices of essential commodities, whenever there is an increase in prices, we just show our hand to the Centre and say that the Centre are responsible and there is deficit financing which is to the extent of Rs. 800 crores today. But the total taxation of the State Governments and the Local Bodies will amount to Rs. 10,000 crores and against Rs. 10,000 crores the sum of Rs. 800 crores is not big deficit financing. Also without deficit financing, can there be developmental progress in the country? In a developing country, deficit financing is very essential. But what is to be done if there is deficit financing? It must be expended on the production of essential goods and on goods that are needed by the people and not on fly-overs, Cooum improvement and circular roads around the City. Money should

be spent on the production of food, cloth and other essential things. Now you are spending it as a capitalist country would do. You are wasting it on things that can wait for some more time.

In this connection, I wish to point out that Thiru P. C. Mathews, I.C.S., had written a beautiful article in 'The Hindu' about it a few days ago. To-day Prof. D. C. Kurian has also written an article about it. They have stated that it is not deficit financing which is so bad but it is the misuse of deficit financing that is killing the country. So, can this Government not spend it on essential articles instead of spending it on showy materials? In the last three months in Tamil Nadu alone the cost of living is the highest. Though the price of rice is low when compared to other States, the cost of living is the highest. What does it mean? It means that all the essential articles are very costly. How does it come about? It is because the administration is not allowed by the vested interests to tackle it. Has any serious thought been given to the cornering of essential articles and the hoarding and blackmarketing of goods? I can quote hundreds of instances in that regard.

Has there been any raid of the places where they have been hoarded in Madras City. Why the officials are hesitant to take action in the matter is because the people involved pay money for the birthday celebrations of Ministers, for the Free Eye Camp and for the rehabilitation of beggars. That is the reason why they have not been prosecuted. Let us put an end to that state of affairs and let us go ahead with prosecution those people.

In this connection, I wish to inform the House that the sugar intended for Bangla Desh was sold in the Madras market at black market prices and also in the railway stations. Also essential articles are moving in the night in the lorries and yesterday I gave information about the movement of two lorries to the Hon. Thiru Rajaram. These are things which are happening. There should be a separate department to tackle it on an emergency basis. There should be a separate Civil Supplies Department to make goods available to the consumers. During the war-time, 1940–42 we had Thiru Arunachalam, I.C.S. who used to go in

cognitio with ' thundu ' (upper cloth) to the blackmarket shops and prosecute the people there. But what is happening to-day? Nobody cares about it and the only thing that is done, is that the Hon. Ministers give replies. Replies may satisfy me but they cannot satisfy the belly of the people. In this connection, I wish to point out that the cost of groundnut oil is higher than gingelly oil. Formerly groundnut oil used to be mixed up with gingelly oil but now it is the reverse.

Now about fodder, what was the cost of fodder three months ago? To-day it is three times. I am having cows and I know the difficulty about it. Of course, fortunately wheat bran is sold at controlled prices. What about other articles like ' Punnakku ' which is sold at blackmarket prices? It is high time that we should put a stop to that.

Now, the electricity cut has been restored. But in Tambaram even after the restoration of the cut, from 12 Noon to 6 p.m. the cultivators do not get electricity. Why this invidious distinction has been shown in their case. Is it because the Anna D.M.K. M.L.A. represents them? I am very sorry to say that on this ground alone, this Government do not deserve to exist. It is only Macaulay who has stated that road-roller majority which is servile to the Cabinet cannot govern the country and they must have an image to go to the public and see that their image is not tarnished. So, they cannot get that, unless they decide that they should do the right thing for the people. There is no use of finding excuses.

The Centre can do many things and the State also can do many more things. Groundnut oil does not come from Delhi. Cocoanut oil does not come from Delhi. Milk does not come from Delhi. Like that, many other things do not come from Delhi. Sir, unless and until this Government decide to put down black marketing, they cannot save this State from collapse They can tarnish the image of MGR and others but the people are not prepared to listen to it. What they want is, that they should be provided with food for their daily life and also good education and housing.

1973 ஆகஸ்ட் 9] [திரு. கே. எம். சுப்பிரமணியம்]

About the provision of housing for Harijans in villages, I know that the money has been misspent and the contractors who have been entrusted with this work, have gone away without completing it. Also, many Panchayat Unions which have been entrusted with this work, have not carried it out. Why? Because there is no drive by the persons concerned. The entire drive or energy is directed against killing the Opposition. This is not democracy. Excuse me for saying that this is absolute autocracy. They must get out of it for Heaven's sake. That is all I wanted to say.

(4) நடைமுறைக் கேள்விகள் (தொடர்ச்சி).

(ஆ) பேரவைத் துணைத் தலைவர் அவைக்கு வராமை குறித்து.

திரு. முனு ஆதி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, தாங்கள் இல்லாத நேரத்தில் பானல் ஆப் சேர்மன்-ல் திரு. வீராசாமி அவர்கள் மட்டுமே இருந்திருக்கிறார்கள். மற்ற பானல் ஆப் சேர்மன்-ல் யாரும் இல்லை. இன்னொன்று சொல்லப் படுகிறது. துணைத் தலைவர் அவர்களால் ராஜினாமாக் கடிதம் கொடுத்து விட்டதால் சபைக்கு வரவில்லையா என்பது இந்த அவைக்குத் தெரியவேண்டும் என்று நான் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

திரு. இராம அரங்கண்ணல்: நானும் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். எனக்கு ஒரு சந்தேகம். நண்பர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சபையில் இருந்து ராஜினாமா செய்துவிட்டதாக ஒரு தகவல் எனக்கு. அது உண்மையா?

திரு. கே. எம். சுப்பிரமணியம்: மினிஸ்ட்டர்களின் போர்ட் போலியோக்கள் மாறியிருக்கின்றன. யார் யாருக்கு என்னென்ன போர்ட்போலியோஸ் என்று தெரியவில்லை.

(3) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் (தொடர்ச்சி).

திரு. ப. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையின்மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த அவையில் ஒரு நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட நேரத்தில் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் ஆளும் கட்சியின் மீது என்னென்ன குறைகளைச் சுமத்தினார்களோ அதே குறைகளைத்தான், அதே குற்றச்சாட்டுக்களைத்தான் இன்றையதினம் இங்கு கூறியிருக்கிறார்கள். ஆக, இன்றைய தினம் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தில் புதுக் கருத்துக்கள் எதுவும் இல்லை என்பது மாத்திரமல்ல, இங்கு பேசப்பட்ட நேரத்தில் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தவர்களுக்கு நன்கு தெரியும். பேசிய வார்த்தைகளில் கடுமை இருந்திருக்குமே தவிர, வாதங்களில் உண்மை இல்லை. அது மாத்திரமல்ல. இந்த அரசை கொள்கையற்ற கொள்கையை உடைய ஒரு அரசு என்று கூறினார்கள். இந்தத் தீர்மானத்தை கொள்கையற்ற தீர்மானம், உண்மைக்குப் புறம்பான தீர்மானம் என்று முதலில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள்—இப்போது அவையில் இல்லை—பேசிய நேரத்தில் இந்த அமைச்சரவையைப் பார்த்து, ஆளும் கட்சியில் இருக்கும் அத்தனைப் பேர்களையும் பார்த்து 'மோசம், மோசம்' என்று கூறினார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எற்கெனவே அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் சுதந்திராக்கட்சியின் தலைவராக இருந்தவர்கள். எங்களையெல்லாம் விட மிக அதிகமாக ஓட்டு வாங்கி வெற்றி பெற்றவர்கள். அப்படிப்பட்ட நல்ல தலைவராக இந்தச் சட்டமன்றத்தில் இருந்தார்கள். அந்தத் தொகுதி மக்களும் அப்படிப்பட்ட ஒரு நல்ல தலைவரைத் தேர்ந்து எடுத்து அனுப்பினோம் என்று மகிழ்ச்சியோடு இருந்தார்கள். ஆனால் இன்று அவர் ஒரு அங்கத்தினராகப் போய் வேறு கட்சியில் உட்கார்ந்து இருக்கிறாரே என்று அந்தத் தொகுதியில் இருக்கும் மக்கள் அவரைப் பார்த்து 'மோசம், மோசம்' என்று சொல்கிறார்கள். ஆனால் அவர் இங்கே இருக்கும் அமைச்சர்களைப் பார்த்து, இங்கேயிருக்கும் ஆளும் கட்சி

1973 ஆகஸ்ட் 9] [திரு. ப. முத்துசாமி]

உறுப்பினர்களைப் பார்த்து கூறுகிறார்கள் 'மோசம், மோசம்' என்று. அதைப்பற்றி கவலைப்படவில்லை நாங்கள். அவர் புதிதாக எந்த ஒரு கருத்தையும் சொல்லிவிடவில்லை. இந்த அரசு ஏழைகளுக்கு நன்மை செய்யவில்லை, இந்த அரசு செலவிடும் தொகை ஏழை எளியவர்களுக்குப் பயன்படவில்லை, அண்ணு வகுத்த வழியிலிருந்து விலகிச் சென்றுவிட்டது, தவறிச் சென்று விட்டது என்று சொல்லியிருப்பார்களானால், அதைப்பற்றி சிந்திக்க கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் பேரறிஞர் அண்ணு அவர்கள் என்ன கருத்தைச் சொன்னார்களோ, எந்த சோசலிஸ்டிக் கருத்தை வகுத்துக் கொடுத்தார்களோ, எந்த ஏழை எளிய பாட்டாளி மக்களுக்காகப் பாடுபட வேண்டுமென்று சொன்னார்களோ, அந்தக் கொள்கையிலிருந்து இந்த அரசு, கலைஞர் அரசு மாறவில்லை, அந்த வழியில்தான் செயலாற்றி வருகிறது என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும் விவசாயிகளின் கஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் விவசாயிகள் கஷ்டப் படவில்லை என்று வாதிட விரும்பவில்லை. 67-க்கு முன்னால் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே விவசாயிகளின் பிரச்சினைகள் எந்த அளவுக்கு இருந்தன என்பதை இப்போது குறிப்பிட விரும்புகிறேன். 1967-க்கு முன்பு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நிலவள வங்கி இருக்கும். அங்கே லோன் வாங்குபவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்றால், அந்த வங்கியின் தலைவராக இருப்பவர்களுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பார்கள், வேண்டியவர்களாக இருப்பார்கள். அப்படி லோன் வாங்குகிற நேரத்தில் அவர்கள் நிலத்திற்கு அந்தப் பணத்தைச் செலவிடுவார்களா என்றால் இல்லை. புரோநோட் மூலம், பிணமி கடன் கொடுப்பார்கள். அந்த நிலை இன்றைக்குப் போய், அந்த வங்கியில் சாதாரண உறுப்பினர்களாக இருப்பவர்கள், சிறிய அளவு நிலம் வைத்திருப்பவர்கள் கூட இன்றைக்கு லோன் வாங்கும் நிலை இருக்கிறது. அதை இந்த நாட்டு மக்கள் மறந்து போயிருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

[திரு. ப. முத்துசாமி] [1973 ஆகஸ்ட் 9

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு வங்கி ஆரம்பிக்கப்பட்டு, அங்கேயிருக்கும் மிகச் சாதாரண விவசாயிகள், 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், 3 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், இப்படி ஆயிரக்கணக்கான பேர் இன்றைக்கு கடன்பெற்று, அதன் மூலம் அவர்கள் வைத்து இருக்கும் நிலத்தை முன்னேற்றம் செய்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல காரியத்தைச் செய்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் நிச்சயமாக மறந்து விடமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்த அரசு எந்த வகையில் அக்கறைகாட்டியிருக்கிறது என்பதையும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். முன்பெல்லாம் மின் இணைப்பு பெறுவது என்றால் மிட்டா, மிராசுகளால்தான் முடியும். இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே மிகச் சாதாரண மக்கள், ஏழை எளிய பாட்டாளி மக்கள், 3 ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், கவலை மாட்டை வைத்துக்கொண்டு மாட்டுக்கும் மனிதனுக்கும் வித்தியாசம் தெரியாமல் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் மற்றும் எல்லோரும் மின் இணைப்பு மிக வேகமாக, மிக எளிதில், எந்த விதமான கஷ்டமும் இல்லாமல் சுலபமாகப் பெற்று, அதன் மூலமாகத் தங்களுடைய கஷ்டத்தையும் போக்கிக் கொண்டு, நாட்டிற்கும், மக்களுக்கும் நன்மை செய்யும் வகையில் உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களெல்லாம் இது முன்னேற்றக்கழகத்தின் சாதனை என்பதை மறந்து விடமாட்டார்கள், எதிர்க்கட்சியில் இருக்கும் நண்பர்களும் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், சாதாரண விவசாயிகளுக்கும் பல சலுகைகளை அளித்து இருக்கிறார்கள். இன்று புதிதாகக் கிணறு வெட்டுகிறார்கள் என்றால், ஆயிரம் ரூபாய் இனாம், மாடு வாங்கினால் ஆயிரம் ரூபாய் இனாம் இப்படி நல்ல பல திட்டங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

1973 ஆகஸ்ட் 9] *[திரு. ப. முத்துசாமி]*

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் நிர்வாகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தலையிடுவதாகக் கூறினர்கள். நான் கேட்கிறேன், 67-க்கு முன்னால் எனக்கு நன்றாக நினைவு தெரிந்த மட்டில், ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொருவர் எஜமானர் போல் இருப்பார்கள், அந்தப் பகுதிக்கு அவர்கள்தான் எஜமானர்கள். ஏதாவது ஒரு அதிகாரி அந்தப் பகுதியில் பொறுப்பெடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னால், அவரைப் பார்த்து விட்டுத் தான் பொறுப்பெடுத்துக்கொள்ளவேண்டும். அவர் விருப்பப்பட்டால் தான் அந்த அதிகாரி அங்கேயிருக்க முடியும். அவர் விரும்பாவிட்டால் மாற்றப்பட்டுவிடுவார். அந்த அளவுக்குக் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் மண்டலக் காங்கிரஸ்காரர்கள் இருந்தார்கள். அந்த அளவுக்கு நிலைமை இருந்தது அப்போது. ஆனால் இன்றைக்கு முன்னேற்றக் கழக ஆட்சியில் அத்தகைய நிலை இல்லை என்பதை நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். இப்போதெல்லாம் பொதுப்பிரச்சினைக்காக எங்களைப் போன்றவர்கள் அலுவலகத்திற்குச் செல்கிறார்கள். எந்தத் தனிப்பட்ட பிரச்சினைக் காகவும் அரசு அலுவலகங்களுக்குச் செல்லக் கூடாது என்ற ஒரு ஆணையை முன்னேற்றக் கழக அரசு தன்னுடைய கட்சியினருக்குப் பிறப்பித்து இருக்கிறது. இதைப்போன்ற ஒரு ஆணையை இதுவரை தமிழ்நாட்டில் எந்த அரசும் பிறப்பித்தது இல்லை என்று பெருமை யோடு சொல்லிக்கொள்ளமுடியும். நாட்டுமக்களின் பொதுப் பிரச்சினைக்காக அதிகாரிகளைச் சந்திப்பதற்காகச் செல்வதைப் பார்த்து, முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் நிர்வாகத்தில் தலை யிடுகிறார்கள் என்று சொல்வது அவர்கள் மேலுள்ள வயிற்றெரிச்சல் காரணமாகச் சொல்லும் குற்றச்சாட்டே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்று இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அரிசிப்பிரச்சினை குறித்தும் பல எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கூறினர்கள். ஏற்கெனவே பேசிய கழக உறுப்பினர்கள் அதற்கு மிகச் சிறப்பாகக் காரணங்களைக் காட்டிப் பேசியிருக்கிறார்கள். 1967-ம் ஆண்டில் அரிசிப் பிரச்சினை ஏற்பட்ட நேரத்தில், நாங்கள் மாணவர்களாக இருந்த நேரத்தில், அன்றைக்குக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்குப் புழுத்த அரிசியை ஹாஸ்டலில் போட் டார்கள். அதை யாரும் மறந்துவிட முடியாது. இந்த அரசு

[திரு. ப. முத்துசாமி] [1973 ஆகஸ்ட் 9

வந்ததற்குப் பின்னாலே, அது எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பயனாக விவசாயத் துறையில் இன்றைக்கு நாம் தன்னிறைவு பெற்று இருக்கிறோம். விவசாய உற்பத்தியில் நல்ல பலனை அது ஈட்டித் தந்து இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சிக்காரர்களுக்கு உரிய இடத்தை, உரிய மரியாதையை இந்த அரசு கொடுக்கத் தவறி விட்டது என்ற குற்றச்சாட்டைப் பல பேர் சொன்னார்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். எங்களுடைய ஆட்சியில் எதிர்க்கட்சிகளுக்குக் கொடுத்து இருக்கும் மரியாதை வேறு எந்தக் கட்சி ஆட்சியிலும் கொடுத்து இருக்க முடியாது, வருகிற காலத்திலும் கொடுக்க முடியாது என்று சொல்லிக்கொள்கிறேன். முன்பெல்லாம் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் சொல்கிற கருத்தை—அண்ணா அவர்கள் கூட எதிர்க்கட்சியில் இருந்தார்கள்—ஏற்கமாட்டார்கள். ஆனால் இன்றைக்கு நல்லகருத்து எந்தக் கட்சியிலிருந்து வந்தாலும், அந்த நல்ல கருத்துக்களை ஏற்றுக்கொண்டு—யார் சொன்னார்கள் என்று பார்க்காமல் அதை நிறைவேற்றி வருகிறார்கள் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். வேலைவாய்ப்புப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, கல்லூரியில் அட்மிஷன் விஷயமாக இருந்தாலும் சரி, எல்லாவற்றிலும் எதிர்க்கட்சிகளுக்கு அதிகச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை அவர்களே உணர்வார்கள் என்று நம்புகிறேன். அந்த அளவுக்கு எதிர்க்கட்சிகளுக்கு நல்ல மதிப்பும், மரியாதையும் அளிக்கிறது என்று அழுத்தம் திருத்தமாக நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு நா. வெ. குருசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மதிப்பிற்குரிய உறுப்பினர் எதிர்க்கட்சிகளுக்குச் சரியான மதிப்பையும், முக்கியத்துவத்தையும் கொடுப்பதாகக் கூறினார்கள். மார்ச்சு மாதத்தில் என்னுடைய தொகுதியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

1973 ஆகஸ்ட் 9]

திரு. ப. முத்துசாமி: இந்த அரசைப் பொறுத்தமட்டில், இங்கே விற்றிருக்கும் அமைச்சராக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியில் இருக்கும் நாங்களெல்லாம், இயக்கம் ஆரம்பித்த நேரத்தில் இப்படிப்பட்ட பதவிகளுக்கெல்லாம் வருவோம் என்று இதில் ஈடுபடவில்லை. அப்படிப்பட்டவர்கள் இங்கே வீற்று இருக்கவில்லை என்று நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்வேன். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எவ்வளவு ஆண்டுகள் ஆண்டோம் என்பது இல்லை? எவ்வளவு ஆண்டுகள் ஆண்டோம் என்று வாலாற்று சாதனை சொல்வதற்காக நாங்கள் வீற்று இருக்கவில்லை. என்ன நன்மைகளைச் செய்தோம் ஆண்ட காலத்தில் ஏழை எளிய மக்களுக்காக, என்னென்ன நன்மைகளைச் செய்யவேண்டியிருக்கிறது இன்னும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் வீற்றிருக்கிறோம். இங்கே பல நன்மைகளை எடுத்துச் சொன்னார்கள். குடிசை மாற்று வாரியம், குடிநீர் வாரியம், இப்படிப் பல வாரியங்களை அமைத்து அவற்றின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்து வரும் இந்த அரசை நிச்சயமாக ஏழைகள் பாராட்டுகிறார்கள், நல்லவர்கள் பாராட்டுகிறார்கள் என்று கூறி, இங்கே கொண்டு வந்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: தலைவர் அவர்களே, இந்த அவை முன்பு இரண்டு தீர்மானங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று இந்த அமைச்சர் அவையின் மீது நம்பிக்கையில்லை என்பது. மற்றொன்று அத்தியாவசியமான பண்டங்களின் விலைகள் உயர்வு இருக்கிறதே அந்த உயர்வுக்கு இந்த அரசின் கொள்கைகள் காரணம், எனவே அதைக் கண்டிக்கிறோம் என்பது. இந்த இரண்டு தீர்மானங்களில் முதலாவதாக இந்த அரசின் மீது கொண்டுவந்திருக்கக்கூடிய நம்பிக்கையின்மைத் தீர்மானம் இருக்கிறதே, அதைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்வது அவசியம் என்று கருதுகிறேன்.

நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள் இந்தத் தீர்மானத்தின் மூலமாக இந்த அரசை உடனே மாற்றவேண்டும், மாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையோடு கொண்டு வந்திருந்

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1973 ஆகஸ்ட் 9

கிறார்கள் என்று நாட்டிலுள்ள யாரும் கருதிவிட முடியாது. ஆனால் இந்தத் தீர்மானம் கொண்டு வந்ததன் மூலமாக இந்த அரசு இது வரை கடந்த காலத்தில் செய்த காரியங்கள் என்ன, அந்தக் காரியங்களில் ஏதாவது குறைகள் இருக்கின்றனவா என்பதை எல்லாம் சுட்டிக்காட்டி, இந்த அரசு அப்படி ஏதாவது தவறு செய்திருந்தால், அந்தத் தவறைத் திருத்திக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இதைப் பயன்படுத்துவதாக இருந்தால், அது மிகவும் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். கடந்த திண்டுக்கல் தேர்தலுக்குப் பிறகு இப்படி ஒரு தீர்மானம் வரும் இந்த அவையில் என்று நாம் எல்லோருமே எதிர்பார்க்கக்கூடிய ஒரு விஷயம் தான். இந்தத் திண்டுக்கல் முடிவுக்குப் பிறகு மக்களுடைய நம்பிக்கை பூராவுமே இந்த அரசுக்கு எதிராக மாறிவிட்டது என்பது போலவும், எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் மிகைப்படுத்திப் பேசுவது நாம் எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான். இந்த நேரத்தில் நாங்கள் தோழமைக் கட்சியாக இருந்தாலும் கூட, தோழமைக் கட்சி என்றால், ஒரு தோழன் எந்த உணர்வுடன் நடந்துகொள்ளவேண்டுமோ, அந்தத் தோழன் எப்படி இருக்க வேண்டுமோ, குற்றம் இருந்தால் அதை எடுத்துக்காட்டி அதைத் திருத்திக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தோடு சொல்ல வேண்டும். அந்த முறையில் தான் நான் இந்த நேரத்தில் என் உடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன்.

அவர்களெல்லாம் தி.மு.க. வின் பேரில் ஒரேயடியாகத் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய மக்களின் நம்பிக்கை எல்லாம் போய் விட்டது என்று சொன்னார்கள். நான் ஓரளவுக்கு ஒத்துக்கொள் கிறேன். எதை ஒத்துக்கொள்கிறேன் என்றால், நாட்டு மக்கள் இந்த அரசின் மீது எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தார்களோ, அந்த நம்பிக்கையில் ஓரளவு சரிவு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அந்தச் சரிவு இருக்கிறதே அவர்கள் நினைப்பது போல் 91 சதவிகிதம் அல்லது 100 சதவிகிதம் சரிவு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது மிகவும் தப்பு. மிகைப்படுத்திச் சொல்லக்கூடிய காரியம். ஒரு 10 சதவிகிதம் மக்களுடைய நம்பிக்கையில் சரிவு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இதை எதற்காகச் சொல் கிறேன் என்று கேட்டால் இதை மூடிமறைத்துப் பேசுவதால்

1973 ஆகஸ்ட் 9] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

மட்டும் நாம் அதை அகற்றிவிட முடியாது என்பதற்காகத்தான். இதை நாம் பயன்படுத்திக்கொண்டு அரசு செய்திருக்கிற ஏதாவது கெடுதல் காரணமாகத் தான் இப்படி ஏற்பட்டதா என்பதை நாம் இந்த நேரத்தில் சற்று நினைத்துப் பார்க்கவேண்டும். மக்களுடைய நம்பிக்கையில் சற்று சரிவு ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளக்கூடிய நேரத்தில், இந்தச் சரிவைப் போக்கிக்கொள்ளக் கூடிய ஒரு சரிவு தானு, இந்தச் சரிவைப் போக்கிக்கொள்ள முடியாதா என்பதைப்பற்றி இந்த நேரத்தில் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நிச்சயம் சொல்கிறேன், இந்தச் சரிவு இருக்கிறதே அதை நாம் நிச்சயம் நிவர்த்தி செய்ய முடியும். அதற்கு வேண்டிய திறமையும், தென்பும் மனோ திடமும் நமது அரசுக்கு இருக்கிறது. ஏனென்று கேட்டால், உண்மையாக இந்த அரசுக்கு மக்கள் மீது பாசம் இல்லை, மக்களுக்கு விரோதமாக இந்த அரசு நடக்கவேண்டும் என்று மனதில், உள்ளத்தில் இந்த அரசுக்கு அப்படி ஒரு எண்ணம் இதுவரையில் இருந்தது கிடையாது. அந்த முறையில் இந்த அரசு ஆட்சிக்கு வரவில்லை. அப்படி வந்திருந்தால் இழந்துவிட்ட இந்த சிறிதளவு சரிவை நிச்சயம் நிவர்த்தி செய்ய முடியாது. ஆனால், உறுதியாகச் சொல்கிறேன், இந்த அரசு மக்களுக்கு, ஏழை மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதிலே அதற்கு உண்மையாகவே எண்ணம் இருக்கிறது. எவ்வளவு தூரம் தன்னால் முடிந்ததை எல்லாம் செய்ய வேண்டுமா, அதையெல்லாம் செய்ய வேண்டும் என்ற உறுதியான எண்ணம் இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இந்த உறுதிப்பாடு, உள்ளத்தில் இருக்கிற காரணத்தினால் இழந்துவிட்ட சிறிதளவு சரிவை நாம் நிச்சயம் சரிப்படுத்திவிடலாம் என்று இந்த நேரத்தில் உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு ஒரு சில காரணங்களை மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன் பேசியவர்கள் கூட சொன்னார்கள். மதுவிலக்கை அவர்கள் ரத்துசெய்து விட்டதைப் பற்றிச் சொன்னார்கள். நான் கூட இந்தச் சட்ட மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். இந்த மதுவிலக்கை எடுத்துவிடவேண்டும் என்று முடிவு செய்த நேரத்தில் 'தயவு செய்து பரிசீலனை செய்யுங்கள்' என்று நான் இந்த அமைச்சரவைக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தேன். என்

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1973 ஆகஸ்ட் 9

மனதில் எண்ணம் எப்படியிருந்தாலும் என்னுடைய கட்சித் தலைவர்கள் அதற்கெல்லாம் ஒத்துக்கொண்டு போகவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. இருந்தாலும் என்னுடைய மனதில் அது குறித்து தீர்க்க முடியாத வேதனை இருந்தது. இதனால் தமிழ் நாட்டு மக்கள் கொண்டிருந்த வேதனையையும் நான் கண்கூடாக, நேராகக் காணக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது என் பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு காரியத்தைச் செய்தாலும், அதைப் பிறகு மக்களுடைய நலன் கருதித் திருத்திக்கொள்ளவேண்டும் என்ற நிலைமை வந்திருக் கிறது. நாம் அதைக் காணும்பொழுது நிச்சயம் இழந்துவிட்ட சரிவை நாம் சரிப்படுத்த முயற்சிக்கிறோம் என்று உறுதியுடன் சொல்ல முடியும். இன்னும் கொஞ்சம் அதை வேகமாகச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய கருத்து எப்பொழுதும் மாறுத கருத்தாக இருந்துகொண்டிருக்கிறது. இதன் காரணமாக நமக்கு எவ்வளவோ பணத் தட்டுப்பாடு ஏற்படலாம். நமக்கு அண்ணா அவர்கள் சொல்லிய கொள்கையை நாம் தீவிரமாகக் கடைப்பிடிக்கவேண்டும். அந்தக் கொள்கையை அமுல்படுத்துவதில் நாம் நிச்சயம் அதிகத் தீவிரம் காட்டவேண்டும். இதன் மூலம் நமக்குப் பணக் கஷ்டம் வந்தாலும் கூட, அந்தக் கஷ்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு, அந்தக் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு வேறு வழிகளை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். அதை அல்லாது இதை இன்னும் தள்ளிபோடவேண்டும் என்ற நிலை வரக்கூடாது. எவ்வளவு சீக்கிரம் மதுவிலக்கை மறுபடியும் அமுலுக்குக் கொண்டு வரமுடியுமோ, அதைக் கொண்டுவருவதற்கு நமது அரசு கவனம் செலுத்தவேண்டும். தீவிர கவனம் செலுத்தி அதுபற்றி சீக்கிரமாக ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆரம்பத்தில் நான் சொன்னேன், ஓரளவுக்கு சரிவு ஏற் பட்டிருக்கிறது என்று. அந்தச் சரிவு ஏற்பட்டதற்குக் காரணத்தையும் சொன்னேன். அதைப்போல சில காரணங்கள் இருக்க முடியுமே தவிர, ஒரேயடியாக எல்லாவற்றையும் நாட்டு மக்கள் இந்த அரசின் மீது பூரா நம்பிக்கையையும் இழந்துவிட்டார்கள், நிலைமை ஒரு புரட்சிப் பாதையை நோக்கிப்

1973 ஆகஸ்ட் 9] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

போய்க்கொண்டிருக்கிறது, பெரிய புரட்சியே தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருக்கிறது, உடனே இந்த அரசு விலகவேண்டும், வேறு வழியில்லை என்றெல்லாம் மாயா ஜாலமான ஒரு தோற்றத்தைத்தான் இவர்கள் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் திரையெல்லாம் நிச்சயம் கிழிக்கப்பட்டுவிடும் என்பதை நான் இந்த நேரத்தில் உறுதியாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாம் இந்த நேரத்தில் கடந்த காலத்தைப் பார்த்துக் கொள்வதன் மூலம் அதிலே ஏதாவது தவறுகள் செய்தோம் என்பதை யாராவது சுட்டிக்காட்டினால், அவற்றையெல்லாம் திருத்திக் கொள்வதற்கு நாம் இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அந்த முறையில் நாம் திருத்திக்கொள்ள இதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, உணவுப் பிரச்சினையைப்பற்றியும் ஒரு சில கருத்துக்களை இந்த நேரத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன். அத்தியாவசியமாக இருக்கக்கூடிய உணவுப் பண்டங்களின் விலைகளெல்லாம் அதிகமாகிவிட்டன என்பதை நாம் இப்பொழுது ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். விலைகள் அதிகமாக இல்லை, கூடவே இல்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது. ஆனால், தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்கள், இப்படி இப்படி இந்த அரசினுடைய கொள்கையினால்தான் இந்த உணவு விலைகள் ஏறியிருக்கின்றன என்று சொல்லியிருந்தால் நான் மிகவும் சந்தோஷப் பட்டிருப்பேன். அதைப்பற்றிய கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் வைக்கிறார்களா என்று நடந்த விவாதத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். அப்படி அவர்கள் சொல்லக் கூடிய கருத்துக்கள் நிச்சயம் நல்ல கருத்துக்களாக இருந்தால், அந்தக் கருத்துக்களின்படி இந்த அரசு ஏதாவது தன்னுடைய உணவுக் கொள்கையில் தவறு செய்திருந்தால், அதைத் திருத்திக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கக்கூடும். ஆனால், அத்தகைய கருத்துக்கள் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறதா, வைக்கப்படுமா என்று பார்த்தேன். சர்க்காருடைய உணவுக் கொள்கை இந்த விதத்தில் பாதகமாக இருந்தது, அப்படியிருந்ததன் காரணத்தினால் இப்படி ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை அவர்கள் யாரும் எடுத்துச் சொல்லவில்லை. அதற்காக இந்த விலை

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1973 ஆகஸ்ட் 9

ஏற்றத்திற்கெல்லாம் நம்முடைய அரசு காரணம் இல்லை, மத்திய அரசுதான் காரணம் என்று யார் சொன்னாலும் அதையும் நான் சரி என்று ஒப்புக்கொள்ள முடியாது. நமக்கும் ஒரு பொறுப்பு இருக்கிறது. அதற்காக நம்முடைய பொறுப்பைத் தட்டிக்கழிக்க வேண்டும் என்று சொன்னால் அதுவும் தவறு என்று நான் கருதுகிறேன். நமக்கு இருக்கக்கூடிய பொறுப்பு, நமக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தை வைத்து நாம் இன்னும் எந்த முறையிலே இந்த உணவுக் கொள்கையிலே அதிக கவனம் செலுத்தி, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியுமோ, இவற்றையெல்லாம் பயன்படுத்தி நாட்டு மக்களைப் பாதிக்கக்கூடிய விலைவாசி ஏற்றத்தை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குக் கட்டுப்படுத்த இந்த அரசுக்கு இதை ஒரு வாய்ப்பாகக் கொள்ள வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த நாட்டிலே லஞ்சம், ஊழல் பெருகி இருப்பதால்தான் விலைவாசி ஏறிவிட்டது என்று சொன்னார்கள். ஒரு பெரிய நிர்வாகத்திலே ஆங்காங்கு சில இடங்களில் தவறுகள் நடைபெறுவது இயற்கை. அதற்காக ஒரு ஆட்சியை வேண்டுமென்றே குறை சொல்வது சரியல்ல. எங்காவது தவறுகள் நடைபெற்றால், கரப்ஷன் நடைபெறுவதாகத் தெரிந்தால், ஊழல் நடைபெறுவதாகத் தெரிந்தால், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது அமைச்சர்கள் தவறு செய்வதாகத் தெரிந்தால் ஆங்காங்கே இருக்கின்றவர்கள் அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். மக்களுக்கு இந்த இந்த வகைகளிலே பாதகம் ஏற்படுகிறது; இன்னின்ன தவறுகள் நடைபெறுகின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். அப்படி ஒரு தவறைக் குறிப்பிட்டுச் சொன்னால் அது குற்றச்சாட்டு. அப்படிச் சுட்டிக் காட்டுபவர்களை நல்ல அரசியல்வாதிகள் என்று நான் பாராட்டுவேன். நேர்மையானவர்கள், நாணயமானவர்கள், தங்கள் கடமையைச் செய்கிறார்கள் என்று பாராட்டப்பெறுவார்கள். குறைகளை எடுத்துச் சொல்லியும் ஆட்சியில் இருப்பவர்கள் அந்தத் தவறுகளை நிவர்த்தி செய்வதற்குத் தயாராக இல்லை என்று சொன்னால் இப்படிப்பட்ட தீர்மானங்களைக் கொண்டுவந்து விவாதிக்க

லாம். ஆனால் இன்றைய ஆட்சியில் அப்படி இருக்கிறார்களா என்றால் இல்லை. எங்கே குறைகளைச் சுட்டிக்காட்டுகிறார்களோ உடனே அங்கே அந்தக் குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறார்கள்.

எனக்கு முன்னால் பேசிய திரு. தங்கமணி அவர்கள் ஒரு அதிகாரி செய்த குறையைப்பற்றிச் சொன்னார்கள். உடனே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்த அதிகாரியின்மீது அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டுக்கு மேற்கொண்டும் ஆதாரங்கள் இருந்தால் கொடுங்கள்; அல்லது அவர்கள் குறிப்பிட்ட சில தகவல்களை வைத்தே விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஆகவே, எந்த நேரத்திலும் குறைகளை எடுத்துச் சொன்னால் திருத்திக்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை நாம் அறிகிறோம்.

மற்றவர்கள் சுட்டிக்காட்டட்டுமே என்று அரசாங்கம் சும்மா இருந்து விடக்கூடாது. அரசாங்கமும் எப்போதும் கண்காணிப்பாக இருக்கவேண்டும். தவறு செய்கின்ற அதிகாரிகள் எங்கே இருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கமே கண்டுபிடித்தாலும் சரி, அல்லது வேறு யாராவது சுட்டிக்காட்டினாலும் சரி, தவறு செய்கின்ற அதிகாரிகள் மீது அரசின் நடவடிக்கைகள் கடுமையானதாக இருக்க வேண்டும். நடவடிக்கை எடுப்பார்கள் என்ற உணர்வு அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் ஏற்பட வேண்டும். அப்போதுதான் எந்தக் காரியத்தைச் செய்தாலும் மக்களுக்கு அதனால் பலன் கிடைக்கும்; நன்மை கிடைக்கும்.

இந்த அரசாங்கம் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக்கின்றது. எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் பல எடுத்துக்காட்டுக்களின் மூலம் அவைகளை எல்லாம் விளக்கினார்கள். இருந்த போதிலும் மக்கள் அதிருப்தி அடைகிறார்கள் என்றால் அதற்கு யார் காரணம் என்று பார்க்க வேண்டும். நம்முடைய அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று தெரிந்தால், மேலும் தவறுகள் நடைபெறுத வகையில் திருத்திக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக இந்த விவாதத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். செய்கின்ற நன்மைகளை மக்கள் அறிய

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1973 ஆகஸ்ட் 9

வேண்டும். அரசாங்கம் எவ்வளவோ செய்திருக்கிறது. உதாரணமாக, கண்ணொளி வழங்குதல், கை ரிக்சாக்களுக்குப் பதிலாக சைக்கிள் ரிக்சாக்கள் வழங்குதல், நிலமற்றோர்க்கு நிலம் வழங்குதல், வீட்டு மனை வழங்குதல் இப்படி எத்தனையோ நல்ல காரியங்களை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் மக்கள் அதிருப்தி அடைகிறார்கள் என்றால் எங்கோ தவறு நடைபெறுகிறது; அதைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளை ஆலோசிக்க வேண்டும்.

விலைவாசி ஏற்றத்திற்கு முழுவதும் மத்திய அரசுதான் காரணம் என்று சொல்வதை விட்டு, நாமும் அதற்கு ஓரளவு காரணம்தான் என்பதை ஒப்புக்கொண்டு, நம்மால் முடிந்த நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும். ஒருசில இடங்களில் சிறு தவறுகள் நடைபெற்றாலும் இந்தியாவிலேயே இந்த அரசுதான் சிறப்பாக ஆட்சி புரிகிறது என்று கூறி, இப்படிப்பட்ட ஆட்சியின்மீது இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று தெரிவித்து, இந்தத் தீர்மானத்தைக் கண்டித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன்: பேரவைத் தலைவரவர்களே, இங்கே கொண்டுவந்துள்ள இரண்டு தீர்மானங்களையும்—ஒன்று நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம், இன்னொன்று அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்—எதிர்த்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இங்கே எதிர்க்கட்சியிலுள்ள பெரியவர்கள் இந்த ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நாட்டுக்கும் மக்களுக்கும் தொண்டு செய்பவர்களாக இருந்தால் நிச்சயமாக இதுபோன்ற தீர்மானங்களைக் கொண்டு வரமாட்டார்கள் என்பது என்னுடைய எண்ணம். அவர்களுடைய எண்ணங்களைச் சொல்வதற்கு எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன.

இந்த ஆட்சி கடந்த ஆறு ஆண்டு காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைப்படி மிக மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். எங்களிலே இருந்து சில பேர் பிரிந்து சென்றிருக்கிறார்கள். அது மிகவும்

1973 ஆகஸ்ட் 9] [திரு. எம். ஆர். கண்ணன்]

வருந்தக்கூடியதான ஒரு செயல். நேற்று வரைக்கும் இந்தத் தாய்க் கழகத்தில் இருந்து, அவர்கள் எல்லாம் பல்லாண்டு காலம் உழைத்தவர்கள். ஏதோ சில சலுகைகள் கிடைக்கவில்லை என்ற ஒரே ஒரு காரணத்திற்காக, சிலருடைய தனிப்பட்ட காரணங்களுக்காக—பர்சனல் கிரிவன்ஸுக்காக—பிரிந்துபோய் புதுக் கட்சியைத் தொடங்கியிருக்கிறார்கள். பொதுவான முறையிலே இந்த ஆட்சியிலே அவர்கள் என்ன குறையைக் கண்டு விட்டார்கள்? அண்ணா அவர்களின் கொள்கை இந்தக் கட்சியில் இல்லாமல் போய்விட்டதா? முழுக்க முழுக்க அண்ணாவின் கொள்கைப்படிதானே இந்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது அவர்களுக்குப் பிரிந்துசெல்ல எப்படித்தான் மனம் வந்ததோ தெரியவில்லை. நேற்றுவரையில் இந்தக் கழகத்தில் அண்ணன் தம்பிகளாக இருந்துவிட்டு, தனிப்பட்ட சில காரணங்களுக்காகப் பிரிந்துசென்று இன்றைக்கு இந்தக் கழகத்தைத் திட்டுவதற்கு எப்படி மனம் வந்ததோ தெரியவில்லை. அண்ணா அவர்களின் தலைமையில் அரும்பாடுபட்டு உருவாக்கிய இந்த ஆட்சியை அண்ணாவின் பெயரைச் சொல்லியே இன்றைக்குத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் படாத பாடுபட்டு உருவாக்கியது இந்த ஆட்சி. ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்; தமிழகம் தலைசிறந்து விளங்க வேண்டும் என்ற கொள்கையை அண்ணா அவர்கள் கொண்டிருந்தார்கள். அந்தக் கொள்கையில் சிறிதும் மாறுபடாமல் நடந்து கொண்டிருக்கிறது இந்த ஆட்சி. உண்மையிலே அண்ணாவின் கொள்கையில் நம்பிக்கை உடையவர்களாக இருந்தால், தமிழகம் தலைசிறந்து விளங்கவேண்டுமென்று அவர்கள் எண்ணுவதாக இருந்தால், தங்களது சொந்த விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கி வைத்து விட்டு, தனக்குப் பிடிக்காதவர்கள் ஒரு சிலர் இருந்தால் கொஞ்சம் ஒதுங்கியிருந்து, இந்தக் கழகத்திற்கு உறுதுணையாக இருந்திருக்க வேண்டும். அதுவல்லவா பொது வாழ்க்கை. அப்படி இருக்க மனமில்லாதவர்கள் பொது வாழ்க்கைக்கே தேவைப்படாதவர்கள்.

சொந்தக் காரணங்களுக்காகப் பிரிந்து சென்றவர்கள், எதிர்க் கட்சியாக உட்கார்ந்துகொண்டு, இந்த ஆட்சியை ஒழித்துவிடலாம் என்று எண்ணுவது மிக மிகத் தவறானது என்பதைத் தெரிவித்துக்

[திரு. எம். ஆர். கண்ணன்] [1973 ஆகஸ்ட் 9

கொள்கிறேன். எதிர்க்கட்சிகள் குறை சொல்லக்கூடிய அளவுக்கு இந்த ஆட்சி என்ன தவறு செய்துவிட்டது? அதைச் சொல்ல வேண்டாமா? இதைவிட நல்ல கொள்கைகள் அவர்களுக்கு இருந்தால் சொல்லட்டும். சௌடி சுந்தரபாரதி அவர்கள் பேசும் போது கூட சொன்னார்கள். இந்த இந்த இடங்களிலே இப்படி இப்படி தவறுகள் நடைபெறுகின்றன அல்லது நடைபெற்றன; இந்த இடத்திலே லஞ்சம் வாங்கினார்கள்; இவர்கள் ஊழல் செய்தார்கள் என்று சுட்டிக்காட்ட வேண்டும். அதிலே நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் குறை சொல்ல வேண்டும். எங்கே பார்த்தாலும் லஞ்சம், ஊழல், ரசீது இல்லாமல் பணம் வசூலித்தார்கள் என்று சொன்னால் அரசாங்கம் என்ன செய்ய முடியும்? அரசாங்கத்திற்குத் தெரிந்தால் நடவடிக்கை எடுப்பார்கள். அல்லது பார்த்தவர்கள் சொன்னால் நடவடிக்கை எடுப்பார்கள். அப்படிச் சொல்வதற்கு யாராலும் முடியவில்லை. அப்படிச் சொல்ல முடியாதவர்கள்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இது ஒரு பொருளற்ற தீர்மானம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தாங்கள் எதையோ செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மக்களுக்குக் காட்ட வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் குறை சொல்ல முடியாத அளவுக்கு எங்கள் தலைவர் ஆட்சியை நடத்திச் செல்கிறார். குறையே இல்லை என்று சொன்னால் அவர்கள் அடுத்த தேர்தலுக்கு என்ன செய்வார்கள்? எலெக்ஷன் மானிஃபெஸ்டோவாக எதை வைப்பார்கள்? அதற்காகத்தான் இப்போதிலிருந்தே தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். இதைச் செய்தோம்; அதைச் செய்தோம்; இன்னும் இப்படியெல்லாம் செய்வோம் என்று சொல்வதற்காகத் தான் இந்தத் தீர்மானத்தை கொண்டுவந்து விவாதிக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து.

அண்ணாவின் கொள்கைப்படி நடக்கவேண்டும் என்பதில் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் அயராது உழைக்கிறார்கள். குறையே இல்லாமல் ஆட்சி நடத்த வேண்டுமென்று பெரும்பாடு படுகிறார்கள். எங்காவது குறை என்று சொன்னால் உடனே நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். நிலமற்றவர்

1973 ஆகஸ்ட் 9] [திரு. எம். ஆர். கண்ணன்]

களுக்கு நிலமா? உடனே வழங்குகிறார். வீடு கட்ட மனையா? உடனே வழங்குகிறார். அதையும் குறுகிய காலத்திலேயே செய்து விடுகிறார். சாதாரண மக்களுக்காக அண்ணா அவர்கள் என்னென்ன செய்யவேண்டுமென்று சொன்னார்களோ, அதைக் கலைஞர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர் களுக்கு அதைக் காணப் பொறுக்கவில்லை. இப்படியே போய்க் கொண்டிருந்தால் அடுத்த தேர்தலுக்கு நாம் என்ன செய்வது என்று யோசிக்கிறார்கள். எப்படி மக்களிடம் ஓட்டுக் கேட்பது என்று திட்டமிடுகிறார்கள். எதையாவது செய்யவேண்டுமென்று, எதையாவது சொல்ல வேண்டுமென்று இப்படித் தீர்மானங்களைக் கொண்டுவந்து பேசுகிறார்கள்.

இந்த அரசாங்கம் எதைச் செய்யத் தவறி விட்டது? ஒவ்வொரு துறையிலும் தமிழகம் முன்னேறியிருக்கிறது. உணவுத் துறையை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு நாம் தன்னிறைவு பெற்றிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் வெளி மாநிலங்களுக்கும் உதவி செய்யக்கூடிய அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். அதே போல கல்வித் துறைக்குப் பெருமளவில் பணம் செலவு செய்து, சிறந்த முறையில் கல்வியில் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் இல்லை என்று யாராவது மறுக்க முடியுமா? மறுப்பவர்கள் யாராவது இருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

என்ன தவறு நடந்துவிட்டது என்று கேட்டால், லஞ்சம், ஊழல் என்று சொல்கிறார்கள். எங்கே யார் செய்தது என்று கேட்டால் லஞ்சம், ஊழல் அவ்வளவுதான். இந்தியா ஒரு பெரிய நாடு. அதில் பல மாநிலங்கள் இருக்கின்றன. ஒரு மாநிலத் திலாவது நியாயமான ஆட்சி, நேர்மையான ஆட்சி அல்லது நிரந்தரமான ஆட்சி நடபெறுகிறதா, தமிழகத்தைத் தவிர? யாராவது அப்படி நடக்கிறது என்று சொல்லமுடியுமா? திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற தமிழகத்தில்தான் நேர்மையான ஆட்சி, நிரந்தரமான ஆட்சி நடைபெறுகிறது.

[திரு. எம். ஆர். கண்ணன்] [1973 ஆகஸ்ட் 9

மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட ஒன்றை வேடிக்கையாகச் சொன்னார்கள். முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள டில்லிக்குச் சென்று வருகிறேன். ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு முதலமைசர் வருகிறார். சில மாநிலங்களில் 6 மாதத்தில்கூட முதலமைச்சர் மாறிவிடுகிறார். ஏன் ஒரே நாளில் கூட மாறி விடுகிறார் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் தமிழ்நாட்டில் இல்லாமல் நிரந்தரமான ஆட்சி சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆட்சியில் குற்றங் குறைகள் இருந்தால், அதை எடுத்துச்சொன்னால், அதை கேட்கக் கூடாது என்ற ஆணவத்தில் இருக்கக்கூடிய யாரும் இந்த அமைச்சரவையில் இல்லை. அமைச்சர்களுக்கும் ஆணவம் இல்லை; மெம்பர்களுக்கும் ஆணவம் இல்லை. லஞ்சம் வாங்குகிறார்கள், லஞ்சம் வாங்குகிறார்கள் என்று அடிக்கடி சொல்கிறார்களே, ஒருவரைக் குறிப்பிட்டுச் சொன்னார்களா? வெளியில் இப்படிப் பேசலாம். சட்ட மன்றத்தில் பேசக்கூடிய பேச்சா, இது? இதைக்கண்டுதான் தோழமைக் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் வருத்தப்படுகிறார்கள். இந்த ஆட்சியின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவது மிகமிகத் தவறு. பட்டியல் போட்டு எங்கோ அனுப்பி விட்டு, அவற்றுக்கு இங்கே பதில் வைக்கவில்லை என்று சொல்வது என்ன நியாயம்? பொது வாழ்க்கை என்பது மிக மிகப் புனித மானது. நாட்டின் வளர்ச்சிக்காக வந்திருக்கிறார்கள். பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்கள் யார் தவறு செய்தாலும், தன் சுயநலத்திற்காகச் செயல்பட்டாலும் அவர் பொது வாழ்வில் இருக்கக்கூடாது. அவர்களை மக்கள் பார்த்துக்கொள்வார்கள்.

11-30 மு.ப.

இன்றைக்கு நாட்டில் விலைவாசி உயர்ந்திருக்கிறது என்றார்கள். அன்றுடம் மக்களோடு பழகிக்கொண்டிருக்கிற எந்த உறுப்பினர் தான் இதை அறியாமல் இருக்க முடியும்? என்றைக்கும் இல்லாத அளவு விலைவாசிகள் உயர்ந்துதான் இருக்கின்றன. இதை ஒப்புக் கொள்கிறோம். இங்கே பேசிய எனது நண்பர் திரு. கந்தப்பன் அவர்கள் இந்த விலைவாசி உயர்வுக்குக் காரணங்கள் என்ன என்பதை எடுத்துச் சொன்னார்களே. அந்தக் காரணங்களை யாராலும் மறுக்க முடியுமா? விலைவாசி உயர்ந்து இருக்கிறது என்று சொன்னால் பயன் இல்லை. அதைக் கட்டுப்படுத்தத்தான் நமது அரசு பல வகையில் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

1973 ஆகஸ்ட் 9] [திரு. எம். ஆர். கண்ணன்]

இங்கே சர்க்கரை உற்பத்தியாகிறது, இங்குள்ளவர்களுக்கு வேண்டிய அளவு கொடுக்க. இங்கே சிமெண்ட் உற்பத்தியாகிறது, இங்குள்ளவர்களுக்கு வேண்டிய அளவு கொடுக்க. அதேபோல இங்கே வேண்டிய அளவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகின்றன. ஆயினும் இன்றுள்ள நிலைமை என்ன? இங்கே உற்பத்தியாகிறவற்றை இங்கேயே பயன்படுத்திக்கொள்ள நமக்கு அதிகாரம் இருக்கிறதா? அந்த அதிகாரம் இல்லை. சர்க்கரை இங்கேதான் உற்பத்தியாகிறது. ஆனால் மத்திய சர்க்கார் நமக்கு சர்க்கரை இவ்வளவுதான் என்று ஒதுக்குகிறார்கள். அவர்கள் ஒதுக்கிக்கொடுக்கிறவற்றைத்தான் நாம் எடுத்து விநியோகம் செய்கிறோம். விநியோகம் செய்கிற முறையில் தவறு என்றால் அது அதிகாரிகளுடையது. அந்த அதிகாரிகளை முன்பு இருந்த காங்கிரஸ்காரர்கள்தான் இந்த நிலைக்குப் பழக்கி விட்டுவிட்டார்கள். இன்றைக்கே பாருங்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் என்றால் கொஞ்சம் மரியாதை காட்டுவது. மற்றவர்களிடத்தில் அது கூடக் கூடாது. ஆளும் கட்சிக்காரர்களுக்குக் கைகட்டிவிட்டால் தாம் பிழைக்கலாம் என்ற முறையில் காங்கிரஸ்காரர்கள் அதிகாரிகளை வேலையாட்களைப்போல வைத்துப் பழக்கிவிட்டுவிட்ட காரணத்தினால் இந்த நிலை. நாங்களா சுற்றறிக்கை அனுப்பி எங்களுக்கு மட்டும் மரியாதை காட்ட வேண்டும் என்று சொன்னோம்? அதிகாரிகள் மக்களிடத்தில் மரியாதை காட்டிப் பழகும்படி செய்தார்களா?

எங்கள் அண்ணா வந்தார்கள். மனுநீதித் திட்டத்தைக் கொண்டுவந்து மக்களைத் தேடி அதிகாரிகளைப் போகச் சொன்னார்கள். பொதுவாழ்வில் இருக்கிறவர்கள் மக்களுக்காக ஒரு வகையில் தொண்டு செய்ய முன்வந்திருக்கிறார்கள் என்றால் அதிகாரிகள் படித்து, படிப்பின் காரணமாக ஒரு பதவியில் உட்கார்ந்து மக்களுக்குத் தொண்டு செய்யத்தான் வந்திருக்கிறார்கள். தாங்களும் மக்களுக்குத் தொண்டு செய்யத்தான் வந்திருக்கிறோம் என்ற எண்ணம் அவர்களுக்கு முன்பு இருந்ததா? தொழிலாளர் தினம், மே தின விடுமுறை என்றெல்லாம் கேட்டோமே, அவர்கள் மே தின விடுமுறை அளிக்க முன் வந்தார்களா? நமது மாநிலத்திற்குத் தமிழகம் என்று பெயர் வைக்கவேண்டுமென்று சொன்னோமே, செய்தார்களா? இதை

[திரு. எம். ஆர். கண்ணன்] [1973 ஆகஸ்ட் 9

எல்லாம் எந்த ஆட்சி செய்தது? மொழிக் கொள்கையில் தெளிவான ஒரு கருத்தை அவர்கள் கொண்டிருந்தார்களா? சேரிவாழ் மக்களுக்கு எல்லாம் நல்ல வீடுகள் கட்டித்தரவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது உண்டா? இவ்வளவும் செய்து வந்திருக்கிறோம்.

நீங்கள் சொல்வது எல்லாம் ஒன்று விலைவாசி உயர்வு—இது அகில இந்தியப் பிரச்சினை. வேலையில்லாத் திண்டாட்டம்—இதுவும் அகில இந்தியப் பிரச்சினைதான். ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கக்கூடிய தொழில்துறை மந்தம் என்றால் அதற்குக் காரணம் மாநில அரசா? சிறு தொழில்கள்தான் மாநில அரசின் நிர்வாகத்தில் இருக்கிறது. மற்ற தொழில்கள் சம்பந்தப்பட்டது மத்திய அரசுதான். அவர்களது நிலை நமக்குத் தெரியாதா? நான்காவது திட்டம் எப்படியாயிற்று? ஐந்தாவது திட்டம் எப்படி வரப்போகிறது? யோசிக்கவேண்டாமா? அடுத்து, நிர்வாகத்தில் தலையீடு என்கிறீர்கள். இது மிக மிகத் தவறான எண்ணம்.

இன்றைக்கு ஒரு சாதாரண குடிமகன் ஒரு அதிகாரிக்குக் கடிதம் எழுதினால் அதற்கு உடனடியாக ஒரு பதில்—அது முடியும், அல்லது முடியாது, அல்லது அது பரிசீலனையில் இருக்கிறது என்கிற அளவுக்கு அவர்களுக்குப் பதில் கடிதம் எழுதும் அளவுக்கு அதிகாரிகள் நல்ல முறையில் பயிற்றுவிக்கப் பட்டிருந்தால் அந்தக் குடிமகன் ஏன் எம்.எல்.ஏ-யை அணுகி அந்த அதிகாரியிடத்தில் தாம் எழுதிய கடிதத்தின் நிலை என்ன என்று தெரிந்துகொள்ள நேரில் போகப் போகிறான்? சாதாரண குடிமகனைப் பார்ப்பதுகூட தவறு போன்ற மனப்பான்மை உடையவர்களாக அதிகாரிகள் இருக்கிற வரையில் நாம் என்ன செய்வது? இந்த நிலைமையைத் தெரிந்துகொண்டால் அதிகாரத்தில் குறுக்கீடு என்று சொல்வதற்கு இடம் இருக்குமா?

போலீஸ் நிர்வாகத்தில் தலையீடு—எங்கே? எப்படி? பேசக் கூடாதா? எழுதக் கூடாதா? இப்படிச் சொல்லிச் சொல்லி மக்களிடத்தில் ஒரு தவறான எண்ணத்தை உண்டாக்க முயற்சிக்கிறார்கள். திண்டுக்கல் தேர்தலைப்பற்றிச் சொன்னார்கள். தெளிவான கருத்துடையவர்கள் யாரேனும் அந்தத் தேர்தலின் தீர்ப்பை

1973 ஆகஸ்ட் 9] [திரு. எம். ஆர். கண்ணன்]

நியாயமானது என்று ஒப்புக்கொள்வார்களா? நான் மக்களைச் சொல்லவில்லை. மக்கள் மீது குறையில்லை. ஒரு காற்று அடித்தது. தேர்தலில் வெற்றிபெற்று வந்தார்கள். அந்த வெற்றியை வைத்து தமிழகத்தில் உள்ள மக்கள் அத்தனை பேர்களுமே இந்த ஆட்சிக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்று கேவலமாக மதிப்பிடுவது மிக மிகத் தவறானது ஆகும்.

நிச்சயமாக உணவுத் துறையில் தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். தமிழகத்தில் உணவுத் தட்டுப்பாடு இல்லை. கன்னியாகுமரியில் மட்டும் பிரச்சினை எழுவானேன்? காரணம், அண்டைய கேரள மாநிலம்—உணவுப்பொருள் கடத்தல்—இந்த ஆட்சியின் மீது குற்றம் சொல்லுவானேன்? இது நியாயமான ஆட்சி, நேர்மையான ஆட்சி, மக்களுக்காகச் செயல்படுகிற ஆட்சி, நிச்சயமாக மக்களிடம் இருந்து விலகாது, மக்களும் விலக்கமாட்டார்கள். ஆகவே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து, சின்னச் சின்னப் பிரச்சினைகளை எடுத்துவைத்து வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளத் தேவையில்லை என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தையும், உணவுப் பிரச்சினையைச் சமாளிக்கத் தவறிவிட்டது என்கிற கண்டனத் தீர்மானத்தையும் ஆதரித்து எனது வார்த்தைகளைச் சொல்ல நான் முற்படுகிறேன். இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள மக்கள் எக்கச்சக்கமான விலைவாசி உயர்வினாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டு லஞ்சம் தலைவிரித்தாடு வதாண்டவமாடக்கூடிய பரிதாபகரமான நிலைமையில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை ஆளும் கட்சியினர்கள் உணராது, எங்கே, எப்போது என்பதுபோலப் பேசுவார்களானால் இதன் விளைவை இப்போது அனுபவிப்பதுபோல பல முறைகளும் அனுபவிக்கக் கடமைப்பட்டவர்களாவார்கள் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

நாங்கள் என்ன தவறு செய்துவிட்டோம், எங்கே தவறு செய்துவிட்டோம் என்று கேட்பது பெரிதல்ல. நீங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். எண்ணிக்கை பலமாக

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஆகஸ்ட் 9

இருக்கலாம். எண்ணிக்கை பலத்தை வைத்துப் பேசி வருவீர்களானால், இருக்கக்கூடிய நீலிமையைக் குறைவாக மதிப்பிடுவீர்களானால், நாங்கள் மக்கள் கருத்தை வைத்தே நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம் என்பதை உணரத் தவறுவீர்களானால் அதற்கு நீங்களே பலியாகிவிடுவீர்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அன்றைக்கு விலைவாசிகள் உயர்வுக்காகப் போராட்டமே நடத்தியவர்களுக்கு இன்றைக்குத் தான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் கறுப்புப்பணம்—ப்ளாக் மார்க்கெட் என்கிற ஞானோதயமே எதிர்க்கட்சித் தரப்பில் வந்திருக்கிறது. அன்றைக்குக் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஆட்சியிலே இருந்தபோது எண்ணெய் விலை ரூ. 6 என்று இருந்த போது. . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். ஒரு சின்ன விளக்கம். பிளாக் மார்க்கெட், கறுப்புப் பணம் மற்றவைகளைப் பற்றியெல்லாம் கூறி, இதனால் தான் விலைவாசி ஏறியிருக்கிறது என்று எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இப்பொழுது ஞானோதயம் வந்திருக்கிறது என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். திரு. டி. ஏ. பாய்—எதிர்க்கட்சித் தலைவரா அவர்? இவர்கள் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்தான். அவர்தான் திருச்சிராப்பள்ளியிலே பேசும்பொழுது, கணக்கிலில்லாத பணம் புழக்கத்திற்கு வந்திருக்கிறது. கறுப்புப் பணத்தினால்தான் விலைவாசி ஏறியிருக்கிறது என்று சொன்னார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்பொழுது கள்ளப் பணம், புழக்கத்தில் இல்லாத பணம், இவைகளின் காரணமாகத்தான் விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று இப்பொழுது எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஞானோதயம் பிறந்திருக்கிறது என்றார். ஒருவேளை நீங்கள் அங்கே ஆளும் கட்சிக்காரர்களாக இருப்பதால் எங்களை எதிர்க்கட்சிக் காரர்கள் என்று குறிப்பிட்டீர்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி: பேசுகின்ற ஆளுக்கு என்றைக்குமே எதிர்க்கட்சிதானே: நீங்கள் இங்கே ஆளும் கட்சியாக இருக்கலாம். ஆனால் பேசுகின்ற ஆளுக்கு எதிர்க்கட்சிதானே. இன்றைக்குப் பழி சொல்கிறார்கள். ஆனால் அன்றைக்கு

1973 ஆகஸ்ட் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

நீங்கள் மறியல் செய்தீர்களே, கலெக்டர் ஆபீஸ் முன்னாலே, ரூ. 6 எண்ணெய் விலை என்று, இந்த ஞாயமெல்லாம் அன்றைக்கு உங்களுக்கு இல்லே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்பொழுது விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று நாங்கள் சொன்னபொழுது, அப் பொழுது ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி மந்திரி சபை, இதற்கு மத்திய சர்க்கார் காரணம் என்று சொல்கின்ற துணிவைப் பெற்றிருக்கவில்லே.

திருமதி த. ந. அனந்தநாயகி : உங்களுக்கு இல்லே. நீங்கள் கலெக்டர் ஆபீசுக்குத்தானே போவீர்கள். டெல்லிக்குப் போக வில்லையே. நீங்கள் ஓட்டு வாங்கும்போது என்ன சொன்னீர்கள்? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசிகள் கிடுகிடு என்று இறங்கி விடும் என்று சொல்லவில்லே? விலைவாசிகளுக்கு மத்திய சர்க்கார் தான் பொறுப்பு. அதைத் தெரிந்துகொண்டு ஓட்டுப் போடுங்கள் என்று சொல்லியா ஓட்டு கேட்டீர்கள்? நாங்கள் வந்தால், அதைச் செய்வோம், இதைச் செய்வோம், நாங்கள் அசகாயச் சூரர்கள் என்று சொல்லிவிட்டு ஆட்சிக்கு வந்து, இப்பொழுது எங்களால் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லே, மத்திய அரசாங்கம் நோட்டு அடித்துக் கொண்டிருக்கிறது, கள்ளப் பணத்தைப் புழக்கத்தில் விட்டிருக்கிறது என்று சொல்கிற நீங்கள் உங்களால் செய்யக் கூடியதைக்கூட நீங்கள் செய்ய விரும்பாதவர்களாக இருக் கிறீர்கள் என்பதைத்தான் அது காட்டுகிறது. மத்திய சர்க்கார், டெபிசிட் பினான்சிங், பற்றாக்குறை, கட்டாயமாக வழி காட்டத் தவற. . .

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அம்மை யார் அவர்களுக்கு ஒரு செய்தியை, 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையில் வந்ததை நான்....

(4) நடைமுறைக் கேள்விகள் (தொடர்ச்சி)

(இ) ஓர் உறுப்பினர் பேசும்போது அமைச்சர்கள் அடிக்கடி குறுக்கிடுவது குறித்து.

திரு. கே. ஏ. மதியழகன்: Sir, On a point of order. Is it correct to interrupt a member while she is speaking? ஏதோ தங்களுக்குத்தான் விவரம் புரிந்தமாதிரி மந்திரிகள் பத்திரிகையைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவரை உட்காரச் சொல்கிறீர்களா, இல்லையா? பாயின்ட் ஆப் ஆர்டரில் நிற்கிறேன் நான். யாரோ ஒரு மெம்பர் பேசும்பொழுது, ஒரு மந்திரி டி. ஏ. பாய் பேசுகிறார் என்கிறார், மற்றொருவர் பத்திரிகையைக் காண்பிக்கிறார். மந்திரிகள் ஏதோ விவாதிக்கிறார்கள், அவர்களுக்குத்தான் தெரிந்த மாதிரி, மற்றவர்களுக்குத் தெரியாத மாதிரி. ஒரு மெம்பர் பேசிக் கொண்டிருக்கிறார்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசும்பொழுது அமைச்சரோ, மற்றவர்களோ எழுந்தால் அந்த உறுப்பினர் அதற்கு இணங்கி உட்கார்ந்து விட்டால் மற்றவர்கள் பேசலாம். அதுதான் வழக்கம். மாண்புமிகு அமைச்சர் இராசாராம் அவர்கள் பேச எழுந்தபொழுது, அம்மையார் அவர்கள், அவர் பேசுவதற்கு இடம் அளித்து அமர்ந்து விட்டார்கள். ஆகவே, அமைச்சர் இராசாராம் பேசுகிறார்.

திரு. கே. ஏ. மதியழகன்: I am raising a point of order, Sir. பேரவைத் தலைவர் அவர்கள் பதில் சொல்லட்டும். முதலமைச்சர் ஏன் பதில் சொல்லவேண்டும்? ஒவ்வொரு மெம்பருக்கும் பேசுவதற்கு உரிமையுண்டு. அமைச்சரைப் பேச வேண்டாமென்று சொல்லவில்லை. விவாதத்திலே பங்கெடுத்துக் கொள்ளலாம். ஆனால். அம்மையார் பேசும்பொழுது ஒவ்வொரு வரிக்கும் குறுக்கிடுவதுதான் முறையா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுக்கீடே கூடாது என்கிறீர்களா?

திரு கே ஏ. மதியழகன்: அமைச்சர்கள் இதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். இராசாராமுக்குத் தெரிந்தது அம்மையாருக்குத் தெரியாதா? பாய் பேசியது அவருக்குத் தெரியாதா? நான் இந்த மன்றத்தினுடைய முறையைப் பற்றி கேட்கிறேன்.

1973 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கீடு கூடாது என்று சொல்கிறீர்களா ?

திரு. கே. ஏ. மதியழகன் : கூடாது என்று சொல்லவில்லை. ஒரு சட்டப் பிரச்சினை வருகிறபோது அவர்கள் குறுக்கிடட்டும். உணவைப் பற்றிப் பேசும்போது உணவு அமைச்சர் குறுக்கிட்டு பங்கேற்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கீடு கூடாது என்கிறீர்கள், அப்படித்தானே ?

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விவகாரத்திற்குப் பதில் சொல்லாமல் இருக்கிறீர்களே. நான் தெளிவாகக் கேட்கிறேன், ஒரு உறுப்பினர் பேசுகிறபொழுது, பாயின்ட் ஆப் ஆர்டரில், பாயின்ட் ஆப் கிளாரிஃபிகேஷனிலே வேண்டுமானால் தலையிடில்லாமலே, விவகாரத்தைச் சொல்வதற்கு இதை விளக்குங்கள் என்று அம்மையாரைக் கேட்கலாம். ஏதாவது தவறாக இருந்தால் குறுக்கிடலாம். எதையும் சொல்வதற்கு அமைச்சர்களுக்குப் போதுமான வாய்ப்பு இருக்கிறது. என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டருக்குப் பதில் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரை. . .

திரு. கே. ஏ. மதியழகன் : பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் பதில் சொல்கிறேன். . . .

திரு. கே. டி. கே. தங்கமணி : அமைச்சர்கள் தலையிடுவதைப் பொறுத்தவரையிலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. நான் எழுப்பக்கூடிய ஒரு விஷயத்தைப் பற்றி பின்னால் பதில் சொல்ல வேண்டும். நான் பேசிக் கொண்டிருக்கும்போதே அந்த பாயின்டை எடுத்துக்கொண்டு 5 நிமிஷம் அமைச்சர்கள் பதில் சொல்கின்ற முறை இந்த சட்டமன்றத்தில்தான் புதிதாக இருக்கிறது. தேவையானால், அந்தந்த அமைச்சர்களே பேசட்டும். அவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுங்கள். சிப் மினிஸ்டர்தான் பதில் சொல்லவேண்டுமென்று அல்ல. விவாத காலத்திலே எந்தக் குறிப்பிட்ட இலாகாவைப்பற்றி அதிகமாக விவாதத்திலே வந்ததோ, அதைப்பற்றி அவர்கள் பேசட்டும். மற்ற இடங்களிலே,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 9

அமைச்சர்கள் பேசும்போது நாங்கள் தலையிட்டு கிளாரிஃபி கேஷன் கேட்போம். இங்கு மெம்பர்கள் பேசும்பொழுது அமைச் சர்களுடைய தலையீடு ஜாஸ்தியாக இருக்கிறது. தலையிட்டால்தான் விவாதம் ருசிகரமாக இருக்கும். அமைச்சர்கள் சொல்லவேண்டிய விஷயத்தை ஒரு பிரச்சாரமாக ஆக்கிவிடக் கூடாது என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இங்கே உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் உறுதி அளிக்கிறேன், நீங்கள் தாராளமாகப் பேசலாம், நாங்கள் குறுக்கிட்டு உங்களுக்கு சங்கடத்தை விளைவிக்க மாட்டோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சபாநாயகர் அவர்களே, மிக்க நன்றி. (திரு. ஏ. ஆர். பெருமாள் எழுந்தார்) இப்பொழுது இவரே குறுக்கிடுகிறார்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : உறுப்பினர்கள் பேசிக்கொண் டிருக்கிறபொழுது அமைச்சர்கள் தலையிடுவதைப்பற்றிக் குறிப் பிட்டார். உறுப்பினர்கள் பேசும்பொழுது இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டு சம்பந்தம் இல்லாமல் பேசுகிறார். நேற்றைய தினம் எங்கள் கட்சி உறுப்பினர் கந்தசாமி பேசும்பொழுது, சுப்பு அவர்கள் குறுக்கிட்டார். அவருடைய இணக்கம் இல்லாமலேயே குறுக்கிட்டார். இதுபோன்ற முறைகள் தடுக்கப்பட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாங்கள் கருதிய தெல்லாம் என்னதான் அமைச்சராக இருந்தாலும் அம்மையாரைப் போன்றவர்கள் நாங்கள் கூறுகின்ற பதில்களுக்கு, விளக்கங் களுக்குப் பதில் கொடுக்கக் கூடியவர்கள் என்ற வகையிலேதான் பதில் அளிக்கிறோம். கடுமையும் காரசாரமும் இல்லாமல், விவாதங்களிலே சூடும் சுவையும் இருக்கும், கேட்டுப் பெறுகின்ற விஷயங்களுக்குத் தெளிவு இருக்கும். நாங்கள் கொடுக்கின்ற பதில்களைச் சமாளிக்கின்ற ஆற்றல் இருக்கும் என்ற நம்பிக்கையில் தான் குறுக்கிடுகிறோம். அதைச் சமாளிக்கின்ற வகையில் ஆற்றல் இருப்பதாகக் கருதித்தான் குறுக்கிட்டோம். இப்பொழுது அவர்களே விளக்கிவிட்ட காரணத்தால் இனிமேல் குறுக்கிட மாட்டோம்.

(3) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் (தொடர்ச்சி).

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆளும் கட்சி சும்மா இருக்க முடியாது. ஒரு வீசை எண்ணெய் ரூ. 12-க்கு விற்கிறது. ஒரு லிட்டர் பச்சைப் பருப்பு வாங்கப் போனால் ரூ. 3 சொல்கிறார்கள். அத்தியாவசியப் பொருள்களைக்கூட வாங்கமுடியாத அளவுக்கு விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. இதனால் கடும் இன்னலுக்கு ஆளாகுபவர்கள் பெண்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. காரணம், குடும்பத்தை நிர்வகிக்கின்றவர்கள் நாங்கள். இன்றைக்கு எந்த அளவுக்கு சம்பளத்தை வாங்கினாலும் 20 நாளைக்குச் சோறு போட முடியுமா என்ற நிலையிலே பார்க்கும் போது அங்கே மத்திய அரசாங்கம் நோட்டு அடித்துவிட்டது, அதனால்தான் விலைவாசி ஏறிவிட்டது என்று கூறுவது எப்படி சரியாகும்? எங்கே நோட்டு தயாரிக்கப்படுகிறது என்பதை நாங்கள் புரிந்துகொள்ளாமல் இல்லை. மாநில அரசால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும். அதை நீங்கள் செய்யவில்லை. எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்று கேட்பீர்களானால், 'எசென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட்' என்ற ஒன்று இருக்கிறது. அதன்படி, அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியும்; அந்த அதிகாரம் முழுக்க முழுக்க உங்களிடம் இருக்கிறது. வியாபாரிகளைக் கூப்பிடுங்கள், தமிழகத்திலே இந்தப் பொருள்களை, இந்த விலையிட்டுத்தான் விற்க வேண்டுமென்று கூறுங்களேன். கூட்டுறவு சங்கங்களின் மூலமாக, நியாய விலைக் கடைகளின் மூலமாக எல்லாவித செக்குகளையும் செய்ய முடியும், விலையைக் குறைக்க முடியும். ஆனால், இன்றைக்கு வெளிச் சந்தையிலே, கட்டுப்படுத்த முடியாதது மட்டுமல்ல, கூட்டுறவு விற்பனைக் கூடங்களிலே என்ன நடக்கிறது? வெளிச் சந்தையிலே விற்கின்ற விலைக்குமேல் இவர்கள் விற்கிறார்களே தவிர, அதைக் கட்டுப்படுத்துகின்ற சக்தி அவர்களுக்கு இல்லை. இவர்கள் அதற்குப் பொறுப்பு ஏற்பது கிடையாது. 80 per cent of purchases are made in the open market கூட்டுறவுத் துறையிலே பருப்பு, மிளகாய், புளி என்று வாங்கக் கூடியவர்கள் விலையும் காலத்திலே, விவசாயிகளிடத்திலேயே வாங்கி வைத்துக் கொண்டு இப்படி கடினமான காலத்திலே

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஆகஸ்ட் 9

ஓளவுக்கு லாபத்தை வைத்து விற்கலாம். இராமநாதபுரத்திலே, பிப்ரவரி மாதத்திலே மிளகாய் ரூ. 2-க்குக் கிடைக்கும். அப்பொழுது வாங்கி வைத்துக் கொள்ளலாம். அக்டோபர், நவம்பரிலே ரூ. 5¾-க்கு விற்கிறது. இந்த அவல நிலையில்லாமல் இருக்க அப்பொழுது வாங்கி வைத்துக் கொண்டால், இப்பொழுது நீங்கள் ரூ. 2½, ரூ. 3-க்கு விற்க முடியும். தேவையிருக்கும்போது எக்கச்சக்கமாக விற்றது என்று நியாய விலைகளின் மூலமாக விற்கவில்லையா? இங்கு நீங்கள் நியாய விலைக் கடையைத் திறக்கிறேன் என்று சொல்லி அங்கு ஒரு அநியாய விலையை வைத்து விற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அந்தக் கடைகளை யாருக்குக் கொடுக்கிறீர்கள்? அவர் தி.மு.க. உறுப்பினராக இருக்க வேண்டும், அவர் இரண்டாயிரம் நன்கொடை கொடுக்க வேண்டும். முன்னாலே சேல்ஸ் டாக்ஸ் கட்டக்கூடியவர்களுக்கு எல்லாம் கொடுக்கமாட்டோம், எங்களுக்கு வேண்டியவர்களுக்குத தான் கொடுப்போம் என்று சொல்கிறீர்கள்.

கூட்டுறவு சொஸைடிகளை எடுத்துக் கொண்டால் அதைவிட மோசமான நிலைமைதான் இருக்கிறது. காமதேனுவை எடுத்துக் கொண்டால் அங்கே 8 ஆயிரம் சதுர அடிக்கு 99 லட்சம் ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட ஓவர்ஹெட் சார்ஜ் எல்லாம் யார் தலையிலே விழும்? கன்ஸ்யூமர் தலையிலேதான் சுமத்துகிறீர்கள். பருப்பு விலையை ஏற்றுகிறீர்கள், மிளகாய் விலையை ஏற்றுகிறீர்கள், கஷ்டப்படக்கூடியவர்கள் மக்களாகத்தான் இருக்கிறார்கள். கூட்டுறவு சொஸைடிகளிலே உள்ளவர்கள் பருத்தி வாங்கப் போகிறேன் என்று சொல்லி பத்து முறை பிளேன் சார்ஜஸ் போடுகிறார்கள், புளி வாங்கப் போகிறேன் என்று சொல்லி பத்து முறை பிளேன் சார்ஜஸ் போடுகிறார்கள், கணக்கு எழுதுகிறார்கள். அவர்கள் வாங்குவதைக் காட்டிலும் வாங்கப் போகிறேன், வாங்கப் போகிறேன் என்று சொல்லுகின்ற செலவுதான் அதிகமாக இருக்கிறது.

உற்பத்தியைச் செய்கின்ற விவசாயிகளையாவது தட்டிக் கொடுத்து அவர்களிடம் உற்பத்தியைப் பெருக்கச் செய்கின்ற சாதுர்யமாவது உங்களிடம் இருக்கிறதா, அதுவும் இல்லை, அதற்குப் பதிலாக அவர்களுக்கு எவ்வளவு தொல்லைகளைக்

1973 ஆகஸ்ட் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

கொடுக்க வேண்டுமோ அவ்வளவு தொல்லைகளையும் கொடுக்கிறீர்கள். விவசாயிகள் போராட்டம் என்று சொன்னால் உடனே இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன் என்று சொல்கிறீர்கள். விவசாயிகள் போராட்டம் என்று சொன்னால் 15 ஆயிரம் பேர்களை சிறையிலே அடைப்பேன் என்று சொல்கிறீர்கள். அவர்கள் போராட்டம் நடத்தினால் 30 பேர்களைத் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளுவேன் என்று சொல்கிறீர்கள். அவர்கள் மனுக் கொடுக்க வந்தால் சிறையிலே அடைக்கிறீர்கள், ஒரு வாரம், தண்டிக்கிறோம் என்று சொல்கிறீர்கள். அவர்கள் ஆன்டிசோஷியல் எலிமெண்ட்ஸா என்ன? அல்லது கொள்ளைக் காரர்களா அல்லது கொலைக்காரர்களா? ஏன் அவர்களைச் சிறையிலே அடைக்க வேண்டும்?

நியாயமான கோரிக்கையை மனுவிலே சொல்லி அதைக் கொடுக்க வந்தால் சிறையிலே போட்டுவிடுகிறீர்கள். கேட்டால் அவர்கள் கடன் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதை ஒத்திப் போட முடியாது என்று சொல்கிறீர்கள். காலாகாலத்திலே நாங்கள் கொடுக்கவில்லையென்றால் ரிசர்வ் பாங்க் எங்களைக் கேட்கிறார்களே என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், இரண்டு லட்சம் ரூபாய் கோவையிலே கடன் பாக்கி என்று சொல்கிறார்கள்.

இந்த விவசாயிகளின் கடன்கள்தானே உங்கள் கண்களுக்குத் தெரிகிறது? கூட்டுறவு சொஸைடிகளிலே எவ்வளவு பணம் போகிறது, உங்களுக்குத் தெரியவில்லையா? தர்மபுரி கூட்டுறவு வங்கியிலே ரூ. 66 லட்சம் ஐயப்பாடு உள்ள கடன், ரூ. 10 லட்சம் மீளாக் கடன். ஆக 76 லட்சம் ரூபாய் கடனை எங்கே வாரி இறைத்தீர்கள் என்று தமிழக மக்கள் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஏதோ ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்ற முறையிலே விவசாயிகளைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

அதேபோன்று திருவாரூரிலே சாக்குப் பைகளைக் காணவில்லை என்று புகார் கொடுத்திருக்கிறார்கள், ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மோசடி நடந்திருக்கிறது. பொதுப் பணம், மக்கள்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஆகஸ்ட் 9

கொடுத்த வரிப் பணம் இப்படி வாரி இறைக்கப்படுகிறது திருவாரூரிலே அதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இந்த அரசாங்கம், சும்மா உட்கார்ந்துகொண்டுதான் இருக்கிறது. அங்கே ஒன்றரை கோடி ரூபாய் இங்கே 66 லட்சம் ரூபாய் என்று வாரி இறைத்துக் கொண்டு இருக்கிறீர்களே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? பெரிய பெரிய முதலாளிகளுக்கு எல்லாம் நீங்கள் வஜா செய்கிறீர்கள். ஆனால் அதையே விவசாயகளுக்குச் செய்யமாட்டோம் என்று சொல்கிறீர்கள். சாகூல் ஜெயின், சீதாலட்சுமி மில்ஸ் இவர்களுக்கு எத்தனை லட்சம் வரி வஜா செய்திருக்கிறீர்கள்? அப்படி லட்ச லட்சமாகப் போன இடம் தெரியாமல் இருக்கிறீர்கள். பாவம் விவசாயிகள், கடன்களை ஒத்தி வையுங்கள் என்று கேட்டால்கூட அவர்களைத் துன்புறுத்துகிறீர்கள்.

கூட்டுறவுத் துறையிலே எங்கே பார்த்தாலும் 2 லட்சம் மோசடி 1 லட்சம் மோசடி, இங்கே கைது செய்துள்ளார்கள், அங்கே சூப்பர்சீட் செய்கிறார்கள் என்ற நிலைமை யெல்லாம் இருக்கும் பொழுது, பருவக் கோளாறினால், மின்சார வெட்டினால், விளைச்சல் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்த நல்ல சமுதாயத்திற்கு உங்களால் ஒத்தாசை செய்ய முடியவில்லை, அவர்கள் பெற்ற கடன்களை ஒத்திப் போடக்கூடிய சக்தி கூட உங்களுக்கு இல்லையா? அந்தச் சக்தியில்லாத அரசாங்கம் எங்கே நீடிக்கப் போகிறது? பருவக் கோளாறுகளினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற விவசாயிகளினுடைய பொருள்களை, அசையும் பொருள்களை, பம்புசெட்டுகளை, ஆடுமாடுகளை நிலவாசல்களை யெல்லாம் ஜப்தி செய்கிறார்கள். இது எப்படி நியாயமாகும்? விவசாயிகள்தான் உணவு உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். 30 லட்சம் டன் உற்பத்தி பெருகியிருக்கிறது என்று சொல்கிறீர்கள். ஆனால் ஒரு படி அரிசி 5 ரூபாய்க்கு எல்லியோரங்களிலே இருக்கின்ற இடங்களிலே மாவட்டங்களிலே விற்கக்கூடிய மோசமான சூழ்நிலை இருக்கிறது. அந்தியாவசியப் பண்டங்களின் விலையை உங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை

1973 ஆகஸ்ட் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

காங்கிரஸ்காரன் ஆட்சியிலாவது விலே படிப்படியாக ஏறியது, ஆனல் இன்றைக்கு உங்கள் காலத்திலே எரோப்ளேன் பறக்கிற மாதிரியாக அல்லவா விலேகள் ஏறிக் கொண்டே இருக்கின்றன. இதற்குக் காரணம் உங்கள் கொள்கையிலே இருக்கின்ற தவறு ஆகும். உற்பத்திப் பெருக்கம் ஆகியிருக்கிறது, ஆனல் Something wrong with your distribution விநியோகத்திலே தவறு இருக்கிறது, விநியோகத்திற்கான கருவிகளிலே குருப்பிடித்து இருக்கிறது. அதனலே லஞ்சம், ஊழல் தாண்டவமாடுகிறது. அதனல்தான் உங்கள் ஆட்சியிலே கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு விலே ஏறிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின்சாரப் பற்ருக்குறை. மின்சாரப் பற்ருக்குறையை ஏற்படுத்தியவர்களே நீங்கள்தான். மூன்னேக்குத் திட்டங்களே நீங்கள் போடத் தவறியதன் காரணமாக, திட்டவட்டமான திட்டங்களேப் போட்டுச் செயல்படுத்தாத காரணத்தினல் தான் இப்படிப்பட்ட நிலேமை ஏற்பட்டு இருக்கிறது. நீங்கள் அனுப்பிய திட்டங்கள் எல்லாம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ப்பதற்காகத்தான் தீட்டியிருக்கிறீர்கள். இதற்கு முன்பு திட்டங்கள் தீட்டவில்லே. அதுமட்டுமல்ல, திட்டங்கள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்றுகூட நீங்கள் சோதிப்பது இல்லே.

அன்றைக்கு 36 சதவிகிதம் ஆக இருந்த மின்சாரப் பற்ருக்குறை, 36 சதவிகிதம் மின்சார வெட்டு இருக்க வேண்டிய நிலேமையிலே 75 சதவிகிதம் மின்வெட்டு ஏற்பட்டிருக்கிறது. மின்சாரம் வழங்குவதிலேகூட லஞ்சம் தாண்டவம் ஆடுகிறது. உங்கள் ஆட்சியிலே உணவுப் பொருள்களிலேதான் கள்ளச்சந்தை இருக்கிறது என்று கேட்டுப் பழக்கம் ஆனல் உங்கள் காலத்திலே மின்சாரத்திலே கூட கள்ளச்சந்தை நடக்கிறது என்பதைப் பார்க்கிருேம். 37 சதவிகிதம் வெட்டு இருக்க வேண்டிய இடத்திலே 75 சதவிகிதம் வெட்டு கொண்டுவந்துவிட்டு உங்களுடைய விருப்பப்பட்ட முதலாளிகளுக்கு 100-க்கு 100 மின்சாரம் சப்ளே செய்கிறீர்கள். அட்லாட் அடிஷன்ஸ் என்ற முறையிலே உங்களுக்கு விருப்பப்பட்டவர்களுக்குக் கொடுக்கிறீர்கள். நீதி கிடையாது, நேர்மை கிடையாது. சௌத்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஆகஸ்டு 9

இண்டியன் மில் ஓனர்ஸ் அசோஷியேஷனில் அங்கம் வகிக்கக்கூடிய பஞ்சாலைகளுக்கு எல்லாம் 100 சதவிகிதம் மின்சாரம் கொடுக்கப் படுகிறது. 75 சதவிகிதம் வெட்டு என்றால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டியது 25 சதவிகிதம் தான். ஆனால் அவர்களுக்குக் கொடுத்தது 100 சதவிகிதம் மின்சாரம். ஆனால் தமிழ்நாடு மில் ஓனர்ஸ் அசோஷியேஷனில் அங்கம் வகிக்கின்ற பஞ்சாலை களுக்கு அது கிடையாது. அவர்களுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்? நேற்று அமைச்சர் மாதவன் அவர்கள் சாமார்த்தியமாகச் சொன்னார்கள். பஞ்சாலைகள் நாம் கேட்கிற நூலைக் கொடுக்கவில்லை யென்றால் மின்சாரம் கொடுக்கமாட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் சீதாலட்சுமி மில் என்ன செய்தது? அந்தத் தந்தியைப் படித்துக் காட்டுகிறேன்.

'In spite of faithfully implementing yarn control order and delivering yarn at controlled price through prescribed channels and specific undertaking to the department concerned, additional power supply as to other textile mills from the 10th July has been withdrawn. சீதாலட்சுமி மில், சிவகாமி மில் இவர்கள் நீங்கள் எந்த நூலைக் கேட்டாலும் தர முன்வந்திருக்கிறார்கள், உங்களுடைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆலைக்கு நீங்கள் கொடுத்த மின்சாரத்தை ஏன் வாபஸ் பெற்றீர்கள்? நூற்றிலே 50 சதவீதம் பெரிய, பெரிய மில்களுக்கு மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். பெரிய, பெரிய முதலாளிகள் எப்படிக் காரியத்தைச் சாதிப்பார்கள் என்று தெரியும். நிர்வாகத்திலே நீங்கள் அதற்கு இடம் கொடுக்காமல் நேர்மையாக நடந்தால் தான் நீங்கள் கெட்டிக்காரர்கள். வேண்டியவர்களுக்கு 100 சதவிகிதம், வேண்டாதவர்களுக்கு வெட்டு என்று சொல்வதும், கொடுத்துவிட்டு மறுநாள் வாபஸ் பெறுவதும் இதற்காக சுப்ரீம் கோர்ட்டுக்கு பீட்டிஷன் மில்ஸ் போவதும் அன நிலைமை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டிலே கடைசிப் பாராவிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அதை நான் படித்துக் காட்டுகிறேன்.

'Asked by the Vacation Judge, Mr. Chandrachud if this treatment meted out to the Mills was because of political pressures, the Counsel said that he would not like to say anything on the point.'

1973 ஆகஸ்ட் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஒரு ஜட்ஜ் கேட்கிறார் சுப்ரீம் கோர்ட்டிலே, இது என்ன பொலிட்டிகல் பிரஷர் நடக்கிறதா என்று. உங்களுடைய வக்கீல் அதற்குப் பதில் சொல்கிறார், நான் அதைப்பற்றிச் சொல்வதற்கில்லை என்று. இது அச்சிலே வந்திருக்கிறது. மின்சார வெட்டு இருந்தாலும், பாரபட்சமற்ற முறையிலே தக்க முறையிலே விநியோகம் செய்ய வேண்டும். உங்களுக்கு விருப்பப்பட்டவர் களுக்கு ஒன்று, விருப்பப்படாதவர்களுக்கு ஒன்று என்ற முறை இருந்தால் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? 25 ஆண்டுக் காலச் சரித்திரத்திலே தமிழகத்திலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதே கிடையாது. உங்கள் காலத்திலேதான் நடக்கிறது. ஒரே ஒரு முறை பருவ மழை தவறிவிட்டது என்றால் 75 சதவிகிதம் மின்வெட்டு என்றால் தமிழகத்திலே என்ன பேசப்படுகிறது என்றால் ஒரு ரூபாய் கொடுத்தால் ஒரு யூனிட் கிடைக்கும் என்ற முறையிலே பேசப்படுகிறது. மின்சாரத்தைக்கூட கள்ளச் சந்தையிலே விற்கக்கூடிய அவல நிலை உங்களுடைய ஆட்சியிலே வந்திருக்கிறது, இதைவிட என்ன ஆதாரம் உங்கள்மேல் உள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு வேண்டும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதைப்போலவே பெரிய மில்களிலே சிலவற்றைத் தள்ளியிருக்கிறார்கள். பவானியிலே மீட்டருக்கு 'டிவைஸ்' வைத்து, ஒழுங்காக எவ்வளவு மின்சாரம் விநியோகிக்கப்படுகிறதோ அதைக் காட்டாத அளவிற்குச் செய்திருக்கிறார்கள். அதை இலாக்கா கண்டுபிடித்தும் கடுமையான நடவடிக்கை எடுக்காமல் வெகு சுலபமாக 'டெக்னிக்கல் ஃப்ளா"விலே விட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது எதைக் காட்டுகிறது? இன்றுள்ள அரசாங்கம் மின்சாரத்திலே கள்ளக் கடத்தல் மூலம் எவ்வளவு செய்ய முடியுமோ அதைச் செய்து கொள்வதற்கு ஏதுவாக இடம் கொடுத்துவிட்டது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். பல தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, ஆனால் பலருக்குத் தவறான முறையிலே சலுகை காட்டியிருக்கிறீர்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஃபிஷரீஸை எடுத்துக் கொள்வோம். அரசாங்கப் பணத்தை காண்ட்ராக்டுக்குக் கொடுக்கும்பொழுது ஏதாவது நேர்மையாக, நியாயமாகப் பார்த்துக் கொடுக்கிறார்களா? சென்ற

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஆகஸ்டு 9

ஆண்டு மீன் வளத்தைப்பற்றிப் பேசும்பொழுதே சொன்னேன். குறைந்த டெண்டரை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்கிறீர்கள், அப்படிக் குறைந்த டெண்டரை எடுத்தால் ஒரு மாதத்திற் கெல்லாம் குறைந்த டெண்டர் எடுத்தவரை அழைத்து, எல்லாம் விலை ஏறிவிட்டது, ஆகவே, ரேட்டை ரிவைஸ் செய்ய வேண்டுமென்று சொல்லி 28,000 அல்லது 29,000 ரூபாய்க்குக் கொடுத்த ஆர்டரை 38,000 ரூபாய் என்று அதிகரித்துக் கொடுக்கிறீர்கள். நாங்கள்குறைவாக இருந்த டெண்டரைத் தான் எடுத்துக்கொண்டோம், ஆனால் விலையேறிவிட்டது என்று சொல்கிறார், ஆகவே, 38,000 ரூபாய் கொடுத்து 'போட்' கட்டம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். டெண்டர் போட்டு விட்டால் எல்லாம் முடிந்துவிடுகிறதா? அப்படித்தான் சமயநல்லூருக்குச் சொன்னீர்கள். ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ளதை 59 இலட்சத்திற்கு விற்று விட்டீர்களே என்று கேட்டால், நாங்கள் டெண்டர் கேட்டுத் தான் கொடுத்தோம் என்று சொல்கிறீர்கள். இதையெல்லாம் பார்க்கும்பொழுது தமிழ்நாட்டு மக்களுக்குப் பயமாக இருக்கிறது, எங்கே இவர்கள் தமிழ் நாட்டுக்கே டெண்டர் கேட்டு கொடுத்துவிடுவார்களோ என்று அஞ்சக்கூடிய நிலைமை இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது. டெண்டர் கேட்டு விடுவதாக நீங்கள் சொன்னாலும் அதற்கு வழிமுறை கிடையாதா, அதற்கு நேர்மை கிடையாதா? குறைந்த டெண்டரில் செய்ய முடியவில்லை யென்றால் உடனே அதற்கு அடுத்த டெண்டரைப் பார்ப்பதுதானே. 29,000 ரூபாய்க்குப் படகு செய்ய முடியவில்லை என்று ஒருவர் சொன்னால் அதற்கு அடுத்தபடியாக இருக்கும் டெண்டரைப் பார்த்து, 30,000 ரூபாய்க்குப் போட்ட டெண்டரிடம் கொடுத்து நீங்கள் செய்யுங்கள் என்று கூற வேண்டாமா? அப்படிச் செய்வதை விட்டுவிட்டு, 29,000 ரூபாய்க்கு உள்ள டெண்டரை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, மற்றவர்களின் கண்களிலே மிளகாய்த் தூளைத் தூவிவிட்டு, அதன் பிறகு 29,000 ரூபாயில் முடியாது, 30,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, அதற்கு ஒரு ரேட்டிபிகேஷன் கொடுக்கின்ற நிலைமை இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கிறது. இன்றைக்குத் தமிழ்நாட்டிலேயே படகு செய்பவர்கள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?

1973 ஆகஸ்ட் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அப்படியில்லையென்றால் நீங்கள் கொச்சிக்கும், மகாராட்டிரத்திற்கும் போகலாம். அப்பொழுது யாரும் வேண்டாமென்று சொல்லப் போவதில்லை. நீங்கள் கட்டுவது 32 அடி போட், அதற்கு 55,000 ரூபாய் ஆகிறது. அதையே தனி மனிதன் செய்தால் 39,000 ரூபாய் அல்லது 40,000 ரூபாயில் செய்து கொடுப்பான். நீங்கள் 55,000 ரூபாய் செலவு செய்து கடடுகின்ற போட் அரைநாள்கூடத் கடலில் ஓழுங்காகப் போவதில்லை. The building is so defective. அவ்வளவு 'டிபெக்ட்ஸ்' இருக்கின்றன. இன்றைக்குத் தமிழகத்திலேயே போட் கட்டக்கூடிய அளவிலேயிருந்தாலும், அவர்களுக்குக் கொடுக்க மாட்டேன் என்று கொச்சியிலே இருப்பவர்களுக்குத் தான் போட் கட்ட விடுகிறீர்கள். ' The boat building must be given to the actual boat builders ''. யார் யார் இந்தப் படகு கட்டப் பழக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். போட்களை ஒழுங்காகக் கட்டத் தெரியாவர்களிடம் கொடுத்தால் அவர்கள் ஒழுங்காகப் படகுகளைக் கட்டாமல் உயிருக்கே ஆபத்து உண்டாகக் கூடிய அபாயம் இருக்கிறது. விஜயலட்சுமி பில்டர்ஸுக்கும், எண்ணூர் எண்டர்பிரைசஸுக்கும் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்திலே 39,000 ரூபாய்க்குக் கட்ட வருகிறது என்ற நிலைமையிருக்கும்பொழுது கேரளாவிலே 49,400 ரூபாய் கொடுத்துக் கட்டச் சொல்கிறார்கள். இதில் ஏதாவது நேர்மை இருக்கிறதா, நியாயம் இருக்கிறதா, திறமை இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இந்த அளவிலே நிர்வாகத்திலே எல்லாத் துறைகளிலேயும் கோளாறுகளைச் செய்து, பணத்தைப் பாழடிக்கிறீர்கள். அதனால் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்து நிற்கிறீர்கள். இதை எடுத்துச் சொல்கின்ற என்னைப் போன்றவர்களை, சட்டம் ஒழுங்கை மீறி பயமுறுத்தக் கூடிய நிலைமை இந்த நாட்டிலே இருக்கிறது என்றால், இந்த நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

பெரியகுப்பம் நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டால், நானே நேரில் பார்த்திருக்கிறேன். அங்கேயுள்ள மீனவர்களின் வீடுகளிலே உள்ளே புகுந்து போலீசாரும் குண்டர்களும் நாசம் செய்திருக்கிறார்கள். பாவம், அந்த மக்கள் என்ன பித்தளைப் பாளைகளா வைத்திருக்கிறார்கள்? ஏதோ அவர்கள்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஆகஸ்டு 9

வைத்திருக்கின்ற மண் பாண்டங்களை அடித்து நொறுக்கி இருக்கிறார்கள். அவர்கள் ஒரு சேலையோ இரண்டு சேலையோ வைத்திருக்கிறார்கள், அதை சுக்கு நூறுகக் கிழித்து அவர்களை எவ்வளவு தூரம் அவமானப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு அத்தப் பெண்களை அவமானப்படுத்தி, லத்தியால அடித்து பலருக்குக் காயம் ஏறபடக்கூடிய அவல நிலையில் போலீசார் நடந்திருக்கிறார்கள், அதற்கு ஒத்தாசையாக கட்சிக் காரர்கள் இருக்கிறார்கள் என்றால் சட்டம், ஒழுங்கு எங்கே இருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அதேபோல் ஈசலாபுரம் கிராமத்திலே ஜாதி இந்துக்கள் அங்கேயுள்ள தாழ்த்தப்பட்டவர்களை அடித்துத் துரத்தி வெளியேற்றியிருக்கிறார்கள். இதற்காக அரசாங்க சீஃப் செக்ரட்டரியைப் பார்த்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள் என்று கேட்டோம். அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் விரட்டி விரட்டி அடிக்கப்படுகிறார்கள். அதற்குப் போலீசாரும் ஒத்தாசையாக இருக்கும் சூழ்நிலை இருப்பதால் அங்கே பாதுகாப்புக் கொடுங்கள் எனறு சொல்லுவோம். அதற்கு இதுவரையிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றே தெரியவில்லை. அங்கே இன்றைக்கு அரிசனங்கள் குடியிருக்கும் சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. இதற்கு மேல் கேட்டால் துப்பாக்கிச் சூடு அல்லது வி. பி. சிந்தனுக்குக் கிடைத்தமாதிரி இதைக் கேட்பவர்களுக்கும் உதை கிடைக்கும். அந்த அளவிற்குச் சட்டம் ஒழுங்கு கெட்டு இருக்கிறது.

விலைவாசி ஏற்றம், நிர்வாகத்தில் லஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய காரணங்களால் மக்களின் நம்பிக்கையை இந்த அரசு இழந்து நிற்கிறது. சாதாரண கல்லூரிகளுக்குச் செய்ய வேண்டிய கடமையைக் கூட இந்த அரசு செய்யவில்லை. எஞ்சினியரிங் கல்லூரியில் 200 இடம் காலியாக இருக்கிறது. இடம் கிடைக்குமா இடம் கிடைக்குமா என்று காத்திருந்த நிலைக்குப் பதிலாக இன்றைக்கு 200 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஐம்பது பேர் வெயிட்டிங் லிஸ்ட்டிலே இருக்கிறார்கள், மீதியிடங்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? ஆகஸ்ட் மாதம் வந்து விட்டது, கல்லூரி ஆரம்பிக்க வேண்டிய

1973 ஆகஸ்ட் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

நேரம் வந்துவிட்டது. அதைப்போல் லா காலேஜிலும் ஒரு குழுவைப் போட்டு அதிலே செல்வாக்குப் படைத்தவர்களுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மின்சாரத்தில் கள்ளச் சந்தை என்று இங்கே பேசப்பட்டது. அதற்கு நான் விளக்கம் ஏற்கனவே தந்திருக்கிறேன். இதற்கு ஆதாரமாக அவர்கள் சொல்வது என்ன வென்றால், தமிழ்நாட்டிலே ஏராளமான மின்சாரம் இருந்தும் 75 சதவிகிதம் மின்வெட்டு கூடாது என்ற ஒரு பத்திரிகைக் குறிப்புதான். அதற்கு ஏற்கெனவே விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. 75 சதவிகிதம் மின்வெட்டு என்பது எல்லாத் துறைகளுக்கும் அல்ல, தொழில் துறைக்கு மட்டும்தான். ஆகவே, பல துறைகளுக்கும் மின்சாரத் தட்டுப்பாடு இருந்தாலும் தொழில் துறைக்கு மட்டும் 75 சதவிகிதம் மின்சார வெட்டு என்று வைக்கப்பட்டது. உதாரணமாக மொத்தத் தேவை 22½ மில்லியன் என்றால், சுமார் 16½ மில்லியன்தான் இருக்கிறது என்றால் 36 சதவிகிதம் வரும் என்று சொல்லப் பட்டது. அதற்கு ஏற்கனவே பதில் சொல்லப்பட்டு விட்டது.

டெக்ஸ்டைல் மில்களுக்குக் கொடுப்பதைப்பற்றி ஏற்கெனவே சொன்னேன். மத்திய சர்க்காரின் திட்டப்படி நமக்கு 25 சதவிகிதம் மின்சாரம் வருகிறது. இதற்குமேலே மைசூரிலிருந்தும், கேரளாவிலிருந்தும், மராட்டியத்திலிருந்தும் நமக்குக் கிடைக்கும் மின்சாரத்தை ஆலைகளுக்குக் கொடுத்து, அந்த ஆலைகள் நூல் தந்தால் அவைகளை மத்திய பூலுக்கு—செண்ட்ரல் பூலுக்கு—அனுப்பாமல் நம்முடைய கைத்தறி நெசவாளர்களுக்கே, 5 இலட்சம் பேர்களுக்கு நன்மைகள் தரும் முறையில் வழங்குகின்ற அதிகாரத்தைத் தந்திருந்தது. இதையொட்டி 'சவுத் இந்தியா மில் ஓனர்ஸ் அசோசியேஷனை' பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்தபொழுது அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். அதேபோல் 'தமிழ்நாடு மில் ஓனர்ஸ் அசோசியேஷனை' அழைத்தபொழுது அவர்கள் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள், நாங்களும் கூட மாட்டோம் என்று சொல்லிவிட்டோம். அப்படிச் சொன்னதில் தவறு எதுவுமில்லை.

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்டு 9

வேறு சில ஆலைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். எனக்கு இரண்டு ஆலைகளின் பெயர்கள்தான் கேட்டன. அவற்றில் ஒன்று சீதாலட்சுமி மில். அந்த அறிக்கையிலே அவர்கள் சொல்லியவுடன் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. மற்றொன்று மீனாட்சி மில். அவர்களோடு சொம்ப முயற்சி செய்தோம். அந்த ஆலை வேறு யாருக்கும் சொந்தமானது அல்ல, திரு. கருமுத்து தியாகராச செட்டியாருக்குச் சொந்தமான ஆலை. அவருடைய மகன்தான் அதற்கு மேனேஜிங் டைரக்டராக இருக்கிறார். அவர் சொன்னார், நாங்கள் நூலைக் கொடுக்கிறோம். நீங்கள் மின்சாரத்தைக் கொடுங்கள் என்று. ஆனால் சுப்ரீம் கோர்ட்டிலே ஃபைல் செய்யப் பட்ட அஃபிடவிட்டிலே அவர்தான் கையெழுத்திட்டவர். அவரிடம் மின்சாரத்தைக் கொடுத்துவிட்டு, பிறகு நாங்கள் வெளிமாநிலத் திற்குத்தான் நூலைக் கொடுப்போம் என்று சொன்னால் அதை நாம் தடுக்க முடியாது. ஆகவே, அவருக்குக் கொடுக்க வேண்டா மென்று முடிவு செய்தோம்.

இது தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்காகச் செய்யப்பட்ட காரியம். மராட்டிய மாநிலத்திலேயிருந்து மின்சாரம் கொடுக்கிறார்கள், அதற்குப் பதிலாக நூலைத் திருப்பித் தாருங்கள் என்று கேட்கிறார்கள். கேரளாவும் கொடுக்கிறது, அவர்களும் நூலைத் தாருங்கள் என்று கேட்கிறார்கள். மைசூரும் கொடுக்கிறது, அதற்குப் பதிலாக டயர்களைக் கேட்கிறார்கள். ஆகவே, இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாக, மாநில சுயாட்சியின் அடிப்படையிலே, பொருள்களை உற்பத்தி செய்து, இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கு அதைக் கொடுப்பதோடு, வெளி மாநிலங்களுக்கும் உதவி செய்கின்ற பெருமை இந்த மாநில அரசுக்கு உண்டு. இந்த ஆசையும் தாக்கிப் பேசி, தனிப்பட்ட முதலாளிகள் இந்தச் சர்க்காரை மட்டுமல்லாமல்—எங்களை எதிர்த்துப் போகவில்லை—மத்திய சர்க்காரையும் எதிர்த்து, மத்திய சர்க்காரின் டெக்ஸ்டைல் கண்ட்ரோல் ஆர்டரை எதிர்த்து கொக்கரிக்கின்ற முதலாளிக்கு எதிர்க்கட்சிகள் பரிந்து பேசுகின்ற வெட்கக்கேடான நிலை இந்த நாட்டிலேதான் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: வழக்கு மன்றத்திற்கே போகக் கூடாதா? வழக்கே போடக் கூடாதா? நீதி கேட்பதற்காகத்தான் நீதிமன்றம் இருக்கிறது. அரசாங்கம் தவறே செய்யாதா?

1973 ஆகஸ்ட் 9]

You are not Caesar 's wife to be above suspicion. You cannot say that always the Government is doing correct things.

மீனாட்சி மில்ஸ் வழக்குப் போட்டார்கள், சரி, ஆனால் சிவகாமி மில்ஸ், நாங்கள் தருகிறோம் என்று சொல்லியதே, அதற்கு ஏன் நொழிலமைச்சரவர்கள் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்? அவர்கள் நூல் தருகிறோம் என்று சொல்லியும், ஏன் மின்சாரம் தரமாட்டோம் என்று இவர்கள் சொல்லிவிட்டார்கள்? மகன் நல்லவராக இருக்கலாம். தந்தை ஒரு கட்சியில் இருக்கலாம். மகன் வேறொரு கட்சியில் இருக்கலாம். நேற்று அவர் உங்களுக்கெல்லாம் தண்பராக இருந்தவர்தானே. அவர் திடீரென்று முதலாளியாகிவிட்டாரா? இது எதைக் காட்டுகிறது? ஏதோ ஒரு அசோசியேஷன். . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே சொல்லி இருக்கிறோம். அங்கத்தினர் பேசி முடித்த பிறகு விளக்கம் சொல்ல வேண்டுமென்றார்கள். அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். விளக்கம் சொன்ன பிறகு அமைச்சர் அதற்கு உள்நோக்கம் கற்பிக்கிறார் என்ற முறையில் பதில் சொல்லிக் கொண்டிருப்பது ஏற்கெனவே இருந்த நிலைபோல் மெம்பர், இன்னொரு மெம்பர், அமைச்சர் என்று மாறி மாறி பேச்சில் குறுக்கீடு போன்ற நிகழ்ச்சிகள்தான் நடக்கும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய சர்க்காரை எதிர்த்து ஒரு முதலாளி வழக்குப் போடுகிறார், அவரை ஆதரிப்பதற்காக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி. சிவகாமி ஆலை என்று நீங்கள் பாராட்டிப் பேசுகிறீர்களே. அதுவும் கருமுத்து திராகராச செட்டியாருக்குச் சொந்தமானதுதான். இன்னொரு விளக்கமும் சொன்னார்கள். மகனை உச்சாணிக் கிளையில் வைத்துப் புகழ ஆசைப்படுகிறார்கள். அந்த மகன்தான் அஃபிடவிட்டை சுப்ரீம் கோர்ட்டில் மத்திய சர்க்கார், மாநில சர்க்காரை எதிர்த்துப் போட்டிருக்கிறார். அரசாங்கத்தினுடைய அட்வகேட், எங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள் . என்று சொன்னார். ஒரு வழக்கறிஞர் இப்படி வாதாடத் தொடங்குகிறார் என்றால் கொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. அரசாங்கத்திற்கு நோட்டீஸ் கொடுக்காமல் ஸ்டே வாங்கப்பட்டது. முதலாளிகளுக்காக எந்த

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்டு 9

வழக்கறிஞர் வாதாடினாரோ அவரைக் கேட்டிருக்கிறார்கள். அவர் பதில் சொல்லியிருக்கிறார். அதையாவது படித்திருக்கலாம். அந்த நீதிபதி அருமையான முறையில் பதில் சொல்லியிருக்கிறார். தவறாகச் சொல்லவில்லை. இந்தக் குறிப்பிட்ட முதலாளியின் ஆலை மற்ற 208 ஆலைகளுக்கும் சமமாக இருக்குமானால்— 'Similarly situated Mills' கரன்ட் கொடுங்கள் என்று நீதிபதி கூறியிருக்கிறார்.

THIRUMATHI : T. N. ANANDANAYAKI : That is not the correct explanation.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அம்மையார் அவர்கள் உரத்த குரலில் பேசினார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I object to this.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மெல்லிய குரலாக இருக்கலாம். உரக்கப் பேசினார்கள் என்றுதான் சொன்னேன். படகு கட்டுவதற்காக மீன் இலாகா மூலம் டெண்டர்கள் கோரப்பட்டு கொடுக்கப்பட்டதில் உள்ளபடியே குறைகள் இருக்குமானால் எதிர்க் கட்சியினர் கூறினால் ஆளும் கட்சி ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஆனால், டெண்டர்கள் கேட்டு கொடுத்ததில் தவறு எதுவும் நடந்துவிடவில்லை. கடந்த ஆண்டு கூட அம்மையார் அவர்கள் படகு கட்டுவதற்குக் கேரளாக் காரரோடு ஒப்பந்தம் செய்து கொண்டார்களே என்று கேட்டார்கள். ஏனே தெரியவில்லை இதிலே கேரளாக்காரரைப் பிடிக்கவில்லை, அரசியலில் மட்டும் கேரளாக்காரரை ஏற்றுக் கொள்கிறார்கள். . .

திருமதி த. ந. அனந்தநாயகி : திசை திருப்பிப் பேச வேண்டாம்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திசை திருப்பவில்லை. தமிழ்நாட்டில் தமிழர்களுக்கு மட்டுந்தான் இடம் என்று சொல்லவில்லை என்பதற்காகத்தான் சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : அம்மையார் அவர்கள் ஒரு பிரசங்கமே செய்கிறார்கள். அவர்கள் எதைப் பற்றி விவாதிக்கிறார்கள். .

1973 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. மதியழகன் என்ன இந்த அவையிலே மத்தியஸ்தரா? அவராகவே எழுந்துத் நிர்ப்பு வழங்கிக் கொண்டிருக்கிறார். "ஏண்டி பாட்டி மஞ்சள் பூசிக் குளிக்கிறாய்?" என்றதற்கு "பழைய நினைப்படா பேரா" என்று சொல்வது போல் இன்னும் சபாநாயகர் என்று அவர் கருதிக் கொண்டிருக்கிறாரா?

திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஒன்றும் சபாநாயகர் என்று நினைத்துக் கொண்டிருக்கவில்லை. இன்னொரு பிரசங்கம் பண்ணுகிறாரே என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பேச ஆரம்பித்து ஒரு நிமிடம் கூட ஆகவில்லை.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் கேரளத்துக் காரரைப் பற்றிச் சொல்லக் காரணம் நமது மாநிலத்திலே எந்தத் தொழில் வளரவேண்டுமென்றாலும் மற்ற மாநிலத்துக்காரர்கள் என்று பார்ப்பதில்லை என்பதற்காகத்தான் சொன்னேன். நமது மாநிலத்தைவிட்டு பக்கத்து மாநிலக்காரர்களுக்குத் தரக் கூடாது என்று எதிர்க்கட்சியினர் கூறுவார்களானால் அது அவர்கள் கொள்கையாக இருக்கலாம், நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. டெண்டர் கேட்டு குறைந்தபட்சத் தொகை யார் கொடுக்கிறார்கள் என்று இலாக்கா மூலம் பரிசிலித்து அவர்கள்தான் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். குறைந்த தொகை கேட்டார்கள் என்று அவர்களோடு ஒப்பந்தம் ஆன பிறகு ஒருசிலர் தங்களுக்கு அனுபவம் இல்லை என்றும் ஒப்பந்தப்படி படகுகள் கட்டிக் கொடுக்க முடியாது என்றும் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். அதை இலாக்கா மூலமாக குழு அமைத்துப் பரிசிலித்து, தொகைகளை வரையறுத்து, என்னென்ன படகு கட்டுகின்ற கம்பெனிகள் இருக்கின்றன என்று பரிசிலனை செய்து, இதற்கு முன்னால் படகு கட்டியிருக்கிறார்களா என்று பார்த்து அவர் களுக்குக் கொடுத்து வருகிறோம் என்று பலமுறை இந்த மாமன்றத்தில் கூறியிருக்கிறேன். அந்த முறையில் எண்ணூர் என்டர்பிரைசும், விஜயலக்ஷ்மி போட் பில்டர்சும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். விஜயலக்ஷ்மி படகு கட்டும் தொழிற்சாலைக்கு அரசாங்கமே தொழிற்துறை மூலமாகக் கடன் கொடுத்திருக்கிறது. மீன்துறை இலாக்கா மூலமாகப் படகு கட்டுவதற்காக இடம்

கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே தமிழர்கள், குறிப்பாக மீனவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நிலம் கொடுத்து, கடன் கொடுத்துப் படகைக் கட்டுவதற்கான ஆதரவையும் கொடுத்த பிறகு, அவர்களிடம் படகு கட்டும் பொறுப்பைக் கொடுக்கலாமா என்று அம்மையார் அவர்களுடைய வாதம் விசித்திரமாக இருக்கிறது. ஆகவே, டெண்டர் கூப்பிட்டுக் கொடுத்ததில் எந்த விதத் தவறும் ஏற்பட்டுவிடவில்லை. கடந்த முறையும் கொடுக்கப் பட்டது, இந்த முறையும் தரப்பட்டிருக்கிறது.

ஈசலாபுரத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைப் போக்குவதற்காகத் தலைமைச் செயலகத்தில் இருக்கும் பிரதம செயலாளரிடத்தில் சொன்னதாகச் சொல்லுகிறார்கள். என்னிடத்தில் அந்த மக்கள் வந்தார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல தலைவர்களும் வந்து சொன்னார்கள். அவர்கள் வருவதற்கு முன்னாலேயே பல முறை பல பெரிய அதிகாரி களிடத்தில் சொல்லி நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறேன். பாதுகாப்புக் கொடுக்கச் சொன்னேன். உயர்ந்த ஜாதிக்காரர் களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே சண்டை, தகராறு என்று ஏற்பட்டால்தான் போலீஸ் தலையிட்டுத் தடுக்க முடியும். காழ்ப்புணர்ச்சி காரணமாக அசம்பாவிதங்கள் ஏற்படாத வண்ணம் அந்தந்தப் பகுதியிலுள்ளவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும், அந்த வகையில் ஒத்துழைப்புத் தரவேண்டும். இப்போது ஈசலாபுரத்தில் அமைதி நிலவுகிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, உணவுப் பொருள் விலை உயர்வைப் பற்றி அடிக்கடி விளக்கம் சொல்லியிருக்கிறேன். மறுபடியும் பேசியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் இதற்குக் காரணம் இல்லை, மாநில அரசாங்கந் தான் காரணம் என்று ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொல்லி யிருக்கிறார்கள். மாநில அரசாங்கம் எதையும் கட்டுப்படுத்த முடியாத அளவில் இருக்கிறது. அரிசியைச் தவிர மற்ற எந்தப் பொருளின் விலையையும் நாங்கள் கட்டுப்படுத்த அதிகாரம் இல்லை. கடலை எண்ணெய் பற்றிச் சொன்னார்கள். இந்தியாவில் மற்ற மாநிலங்களில் எல்லாம் கடலை எண்ணெய் விலை இவ்வளவு, நம்முடைய மாநிலத்தில் மட்டுந்தான் அதிகமாக இருக்கிறது

1973 ஆகஸ்ட் 9] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

என்று ஏதேனும் விவரம் தருவார்களா என்று எதிர்பார்த்தேன். அப்படி இதுவரை யாரும் சொல்லவில்லை. கடலை இங்கு உற்பத்தி யாகிறது. ஓரளவுதான் நாம் வாங்க முடியும். அதன் விலையை நிர்ணயிக்க அதிகாரம் வேண்டுமென்று கேட்டு அதுவும் கொடுக்கப்படவில்லை. இதைப் பற்றிச் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே சொல்லியிருக்கிறேன். கடலை இந்த அளவுக்கு விலை விற்கும்போது வெளிநாட்டுக்கு ஏன் மணிலாவை ஏற்றுமதி செய்கிறீர்கள் என்று பாராளுமன்றத்தில் கூடக் கேள்வி கேட்டி ருக்கிறார்கள். மத்திய அமைச்சர் அதற்கு அதிக விலை ஒன்றும் விற்கவில்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து கோதுமையை ஒரு டன் 50 டாலர் வீதம் ரஷ்யா வாங்குகிறது.

ரஷ்யா 50 டாலர், இந்திய சர்க்கார் 140 டாலருக்குக் கொள் முதல் செய்கிறார்கள். நாங்கள் மாநில அமைப்பைக் கட்டுப் பாடாக நடத்த வேண்டுமென்று சொல்லும்போது நாட்டைப் பிரிப்பதாகவும், சுயாட்சி கேட்கிறார்கள் என்றும் குற்றம் சாட்டுவது சரியல்ல.

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சியினர் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது விவாதம் நடக்கிறது. மூன்று நாட்கள் விவாதம் நடந்து முடிந்த பிறகு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லப் போகிறார்கள். அப்படி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, எதிர்க்கட்சி களிலிருந்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறவர்கள் என்னென்ன குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்களோ அவற்றிற்குப் பதில் அளிக்க சம்பந்தப்பட்ட அமைச்சர்களை அதுபற்றிக் கேட்கலாம். அதல்லாமல் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒரு குற்றச்சாட்டு கொண்டு வந்தால் அதற்கு மூன்று அமைச்சர்கள் எழுந்து நின்று ஒவ்வொரு அமைச்சரும் மூன்று நிமிடங்கள் எடுத்துக்கொள்வது என்பது ஆளும் கட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆறு மணி நேரத்திற்குள் ஒவ்வொரு அமைச்சருக்கும் கொஞ்ச நேரம் கொடுத்து அதற்குள் அமைச்சர்களைப் பேசச் சொல்வது நன்றாக

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1973 ஆகஸ்ட் 9

யிருக்கும். இது, எங்கள் நேரத்தை எடுத்துக் கொண்டு சொல்வதாக இருக்கிறது. இதற்கு ஒரு முடிவு எடுக்கும்படி தங்களைக் கேட்டுகொள்கிறேன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொதுவான விவகாரங்களுக்கு அமைச்சர்கள் பதில் சொலலத் தேவை இல்லை. ஆனல் குறப்பிட்டுச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளுக்கு உடனடியாக அமைச்சர்கள் குறுக்கிட்டு பதில சொல்வதுதான முறையானதாக இருக்க முடியும. அந்த வகையிலதான் அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் குறுக்கிட்டு ஏதோ மூன்று மில்களுக்குக் கரன்ட் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்குப் பதில் சொன்னர்கள். அதேபோல் குறிப்பிட்டுச சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். அதற்குக் குறுக்கிடுவதில் தவறு இல்லை. குறுக்கிடக் கூடாது என்ற காரணத்தினல்தான் அவர்கள் பேசி முடிந்த பிறகு சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு, குறிப்பிட்ட குறறச்சாட்டுகளுக்கு ஹரிஜனத் துறை அமைச்சர் அவர்களும், அமைச்சர் திரு. மாதவன் அவர்களும் பதில் சொன்னர்கள். அந்த வகையில்தான் சொல்லப்பட்டது.

அண்ணு வழி நடக்கிற நிலைமையில் சொல்ல வேண்டுமென்றல் அண்ணு அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோதுகூட அண்ணு அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போது அடிக்கடி குறுக்கிட்டுப் பேசினர்கள். இப்போது மாண்பு மிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் எழுப்பியது போல் அப்போதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்டார்கள். அந்த நேரத்தில் அண்ணு அவர்கள் சொன்னது என்னவென்றல், நீங்கள் குறிப்பிட்டுச் சொல்கிற குற்றச்சாட்டுகளுக்கு உடனடியாகப் பதில்கள் அளிக்கவில்லை என்றல் அவைமட்டும் பத்திரிகைகளில் வந்து வெளியே ஒரு பரபரப்பை ஏற்படுத்தி மக்களிடையே, ஏதோ பெரிய தவறுகள் செய்கிறர்கள் என்று கருதக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே உடனடியாக இப்படி அவதாறுகச் சொல்லப்படுகிற விஷயங்களை நாங்கள் திருத்த வேண்டியிருக்கிறது. ஆகவே அமைச்சர்கள் குறுக்கிடுவதில் தவறு இல்லை என்று அண்ணு அவர்கள் சொல்லியிருக்கிறர்கள். ஆகவே அண்ணு வழியைப் பின்பற்றும் நாங்கள் அந்த வகையில் குறுக்கிட்டுச் சொன்னேம். அவ்வளவுதான்.

1973 ஆகஸ்ட் 9]

திருமதி த. ந. அனந்தநாயகி: நாங்கள் சட்டசபையில் வந்து அவதூறுகவா பேசுகிறோம்? அதற்குப் பொது மேடைகள் இருக்கின்றன பேசுவதற்கு. பொது மேடைகளில் அவர்கள் அவதூறுக எது வேண்டுமானலும் பேசலாம். நாங்கள் சட்ட சபையில் பொறுப்போடுதான் பேசுகிறோம். இதே இலாக்கா ரூ. 29,000-க்கு படகைக் கட்டித் தருகிறேன் என்றதை ரூ. 38,000-க்கு கட்டித் தா என்று சொல்லி அது ரிவைஸ் செய்யப்பட்ட உண்மையை அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டார்கள், அதைக் கமிட்டி ஏற்றுக் கொண்டது என்று சொன்னர்கள். அப்படி 'ரிவைஸ்' செய்வது தவறு என்பது என் வாதம். அப்படித் தமிழ் நாட்டில் படகு கட்டுகிறவர்கள் இல்லை என்றால் கேரளாவிற்குப் போங்கள் என்று சொன்னேனே தவிர, கேரளாவிற்குப் போக வேண்டாம் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்கான பதிலுரை அவையில் வைக்கப்பட்டது. அம்மையார் அவர்கள் நேர்மை, ஒழுக்கம், லஞ்சமற்ற தன்மை இவற்றைப்பற்றி யெல்லாம் பேசினர்கள். நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆனல் மதரூஸ் டெனன்ஸி ஆக்ட் என்ற சட்டத்தை இந்த அவையில் நிறைவேற்றி அது மத்திய சர்க்கார் அனுமதி பெறுவதற்காகக் காத்திருந்த நேரத்தில் அது உடனடியாக வரவேண்டுமென்று டெல்லி வரை ஒரு அம்மையார் சென்று அந்தச் சட்டத்திற்கு உடனடியாகக் கையெழுத்து போடுங்கள் என்று அங்கு தவம் கிடந்தார்கள். அந்த அம்மையார்தான் இப்போது நேர்மை நியாயம் பற்றிப் பேசிய திருமதி அனந்தநாயகி அம்மையாராவார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்களாகவே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். டெனன்ட்ஸ்க்காகப் போனேமே தவிர, லான்ட்-லார்ட்ஸ்க்காகப் போகவில்லை. ஆகவே உங்கள் இஷ்டப்படி எப்படி வேண்டுமானலும் பேசுவது சரியல்ல. தயவு செய்து அப்படிப் பேசுவதை விட்டுவிட வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் போனதை ஒத்துக்கொண்ட வரையில் சரி.

திருமதி த. ந. அனந்தநாயகி: இன்றும் போவோம், நாளைக்கும் போவோம் டெனன்ட்ஸ்க்காக. We are for the tenants, not like you for the landlords.

[1973 ஆகஸ்ட் 9

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் வைக்கப்பட்டுள்ள அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதும், தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீதும் என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாலரைக் கோடி தமிழ் நாட்டு மக்களின் நலனைக் கருதி இந்த அரசு செயல்பட வேண்டும், அப்படிச் செயல்படத் தவறி விட்டதால் இந்த நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் வந்துள்ளன. இந்த இரு தீர்மானங்களும் வழக்கம்போல் வருகின்றன என்று சிலர் குறிப்பிட்டார்கள். பிற்போக்கான கொள்கையை, மக்கள் நலன்களுக்கு விரோதமான கொள்கையை ஒரு அரசு கடைப்பிடித்தால் அதை எதிர்த்து வழக்கமாக வரக் கூடிய ஒரே நடைமுறை இதுவாகத்தான் இருக்க முடியும். ஆகவே இத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இதைப்பற்றிச் சொல்லும்போது அரசாங்கக் கொள்கைகளை மையமாக வைத்து எந்த அளவிற்கு அரசு மக்களது நம்பிக்கையை இழந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எதிர்க்கட்சியிலிருந்து குற்றச்சாட்டுகள் தொண்டு வருகிறோம் என்று சொன்னால் எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுகள் மட்டு மல்ல, தமிழக மக்களின் மத்தியில் உள்ள பிரச்னைகளை மையமாக வைத்து அதை எதிரொலிக்கும் வகையில்தான் நாங்கள் இங்கு பேசுகிறோம்.

முன்னதாக, ஆளும் கட்சி அறிவித்திருக்கக்கூடிய ஒரு கொள்கையை மையமாக வைத்து எங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கிறோம். அதாவது, இந்தியா இந்தியருக்கே. தமிழ்நாடு தமிழருக்கே என்று சில இயக்கங்கள் நடத்துவதற்குத் திட்ட மிட்டிருக்கிறார்கள். இந்திய நாடு இந்தியருக்கே என்று சொல்வதில் அர்த்தமிருக்கிறது. India is a sovereign democratic Republic. அந்த அடிப்படையில் இந்தியா இந்தியருக்கே என்று சொல்வதில் அர்த்தமிருக்கிறது. ஆனால் அப்படி இந்தியாவைக் கருதுவதுபோல் தமிழ்நாட்டை ஒரு ஸாவரின் ரிப்பப்ளிக் என்று கருத முடியாது. சில அரசியல் சட்ட வரம்புகள் இருக்க வேண்டும்.

1973 ஆகஸ்ட் 9] [திரு. க. சுப்பு]

தமிழ்நாடு தமிழருக்கே என்ற கோஷம் எதற்காக எழுப்பப் பட்டது? எந்தச் சூழ்நிலையில் எழுப்பப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். எதிர்க்கட்சியினர் என்றல்ல, ஆளும் கட்சியில் உள்ள மதிப்பிற்குரிய கண்ணன் போன்றவர்கள் ஒப்புக் கொண்டுள்ள சில பிரச்னைகள் உள்ளன. அவற்றைத் தீர்க்க என்ன செய்திருக்கிறார்கள்? அவற்றிற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக திசை திருப்பி விடுவதற்காக இந்த முழக்கம் கையாளப்படுகிறது. ஆனால் அது நாட்டின் நன்மைக்கு உகந்ததல்ல. நாலரைக் கோடி தமிழ் மக்கள் என்று சொல்லும் போது இந்த கோஷம் அவர்களுக்கு நன்மை பயப்பதாக இருக்க முடியுமா? இங்கல்ல, இதற்கு அப்பாற்பட்டும் பம்பாயில், டெல்லியில், பர்மாவில், சிலோனில், வெளிநாடுகளில்கூட தமிழர்கள் இருக்கிறார்கள். இவர்களை மையமாக வைத்து, இவர்களின் நன்மையை மையமாக வைத்து நடைபெறவேண்டிய தாகும் தமிழக அரசின் ஆட்சி. அதை மனதில் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு தமிழருக்கே என்ற கோஷத்தின் விளைவு என்ன வாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தமிழ் நாட்டில் இருக்கிறவர்கள் சிலர் வேறு எங்கேயோயிருந்து வந்தவர்கள், அவர்கள் தமிழர்கள் அல்ல, ஆரம்பத்தில் வரலாற்றுப்படி இன்னின்னர்கள் இன்னின்ன தொழில்கள் செய்து வந்தனர் என்று ஆராயத் தொடங்கிவிட்டால் அது கைபர் கணவாயில் இருந்து ஆரம்பித்து திண்டுக்கல் கணவாயில்தான் சென்று முடியும். இப்படியெல்லாம் பேசுவது மக்களிடையே ஒரு சிக்கலைத்தான் ஏற்படுத்தும். இங்கு வேறு யாரும் இருக்கக் கூடாதா? இங்கு மகாராஷ்டிரர்கள் இல்லையா, கேரளாக்காரர்கள் இல்லையா? கன்னடம் பேசுபவர்கள் இல்லையா? எல்லோரும் இருக்கிறார்கள். சட்டமன்றத்தில்கூட இருக்கிறார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் உங்கள் ஜஸ்டிஸ் பார்ட்டியை ஆரம்பித்து வைத்ததே டாக்டர் டி. எம். நாயர்தான். அவர் கேரளாக்காரர். அதேபோல் பனகல் ராஜா, பொப்பிலி ராஜா இவர்கள் இல்லையா? இப்போது அவர்கள் பெரியார் இல்லையா? நான் குறை சொல்வதாக நினைக்கக் கூடாது. இது எந்த அடிப் படையில் வருகிறது என்றால் அது ஷார்ட் ஸைட்டட் பாலிஸி ஆப்

[திரு. க. சுப்பு] [1973 ஆகஸ்ட் 9

தி கவர்ன்மெண்ட்டினுல் ஏற்படுகிறது. இத்தகைய ஒரு குறுகிய நோக்கத்தைக் கொண்ட கொள்கையை அரசு பின்பற்றக் கூடாது. அது அபாயத்தைத்தான் விளைவிக்கும்.

ஒவ்வொரு ஜாதியினரும் ஒவ்வொரு தொழிலைச் செய்து கொண்டிருந்தார்கள். மோசமான தொழிலைச் செய்து கொண்டிருந்த ஒரு ஜாதியினர் இன்று வேறு தொழில்களுக்கு வந்திருக்கிறார்கள். இப்படிப் பின்னுல் செல்வதைக் கண்டித்து முன்னேற்றப் பாதையில் செல்லவில்லை என்ற குற்றச்சாட்டினைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் பிரச்னைகளைத் திசை திருப்பிச் செல்கிறது.

திரு. மாதவன் அவர்கள் ஒன்று சொன்னார்கள். மகிழ்ச்சி. இரண்டு நாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தது வந்து விட்டது. தியாகராசச் செட்டியார் அவர்கள் கைத்தறி நெச வாளர்களின் பிரச்னைகளில் கவனம் செலுத்தவில்லை என்பதால் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதை ஒத்துக்கொள் கிறேன். நேற்று வரை நண்பர்களாக இருந்தவர்கள் என்று அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இன்று நண்பர்கள் இல்லை என்று ஒப்புக்கொண்டதில் மகிழ்ச்சி. மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படும் முறையில் நிர்பந்தங் களுக்கு அடிபணியாமல் இருந்தால் அந்த அமைச்சரவையைப் பாராட்டுகிறேன்.

செட்டியார் கொடுக்கவேண்டிய மின்சாரக் கட்டணப் பாக்கி எவ்வளவு? அதை வசூலிப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள் என்ன? விவசாயிகள் அரசுக்குச் செலுத்தவேண்டியதைச் செலுத்தவில்லை என்றால் ஜப்தி செய்யப்போகிறீர்கள்.

என்ன இன்னொரு குற்றச்சாட்டு என்னவெனில், இவர்கள் கொடுக்கிற வாக்குறுதிகள் ஒன்று, நடைமுறையில் நடப்பது வேறு. அரசு ஒரு ஆணை பிறப்பிக்கிறது, ஆனால் அது தூக்கி எறியப்படுகிறது. ஜூன் 30-ம் தேதி வரை அரசாங்கக் கடன் களுக்காக, கூட்டுறவுக் கடன்களுக்காக ஜப்தி செய்வதில்லை என்று ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால் அதற்கு விரோதமாக எவ்வளவோ இடங்களில் ஜூன் 30-ம் தேதிக்கு முன்னால் ஜப்திகள்

1973 ஆகஸ்ட் 9] [திரு. க. சுப்பு]

நடந்திருக்கின்றன. ஜனநாயகம், ஜனங்கள்தான் எஜமானர்கள் என்றெல்லாம் சொல்கிறோம். ஆனால் இன்றையதினம் அதிகாரிகள் தான் மக்களின் எஜமானர்களாக இருக்கிறார்கள். ஆபீசர்களை அலுவலாளர்கள் என்று சொல்லுங்கள் என்று பாரதி அவர்கள் சொன்னார்கள். நான்கூட அந்த வார்த்தையை ஏற்றுக் கொள்கிறேன். 'ஆபீஸ்' என்று சொல்வதை 'அலுவலகங்கள்' என்று சொல்வது மாதிரி, 'ஆபீசர்கள்' என்பவர்களை 'அதிகாரிகள்' என்று சொல்வதைவிட 'அலுவலாளர்கள்' என்று சொல்வது நன்றாக இருக்கும். அவர்களை அதிகாரிகள் என்று சொல்வதால் அவர்கள் தங்களை மிகவும் பெரியவர்களாகக் கருதிக் கொண்டு விடுகிறார்கள். அந்த மனோபாவத்தை மாற்ற என்ன பரிகாரம் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?

விவசாயிகளிடமிருந்து வரி வசூல் செய்வதை நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். 205 பம்ப் செட் எடுத்து இருக்கிறோம் என்றும் சொன்னார்கள். வரி வசூல் செய்வதை நிறுத்திவைக்க அரசு ஆணை பிறப்பித்து இருந்தும், பல விவசாயிகளைப் பிடித்து உள்ளே தள்ளியிருக்கிறார்கள். பலரிடம் ஜப்தி செய்து இருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல முடியுமா? அந்த மக்கள் மத்தியில் இந்த அரசின்மீது எப்படி நம்பிக்கை யிருக்க முடியும்? இப்படி உழவு மாடுகளை ஜப்தி செய்கிறபோது, பெரிய பெரிய மில் முதலாளிகள் கட்ட வேண்டிய வரி பாக்கிக்கு என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுத்து இருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன். அங்கேதான் கொள்கை வருகிறது.

சர்க்கரை ஆலைகளுக்கு 5 சதவிகிதம் சர்சார்ஜ் போட்டு இருக்கிறோம். அதன் மூலமாகக் கிடைக்கும் வருமானம் ரூ. 5½ கோடி என்று நினைக்கிறேன். அது இன்னும் வசூலாகவில்லை. பொள்ளாச்சி மகாலிங்கம்—பெயரைச் சொல்லக்கூடாது—சக்தி சர்க்கரை ஆலை, அருணை சர்க்கரை ஆலை இவர்களிடமிருந்து ரூ. 5½ கோடி வரி பாக்கி வரவேண்டியிருக்கிறது. ஜப்தி செய்து விட்டோமா? பணக்காரர்கள் என்றால் பரிவும், ஏழைகள் என்றால் ஏறி மிதிப்பேன் என்றும் சொன்னால் அந்தக் கொள்கையைக் கண்டிக்காமல் வேறு என்ன வேலை எதிர்க்கட்சிகளுக்கு என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

[திரு. க. சுப்பு] [1973 ஆகஸ்ட் 9

ஏழை மக்களுக்கும், ஏழை ஹரிஜன மக்களுக்கும் பெரும் திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு முறையிலும் சொல்லி இருக்கிறோம். இப்போது இருக்கிற அதிகார வர்க்கத்தை நம்பி எந்த சோசலிஷ திட்டத்தையும் அமலாக்க முடியாது. ஒரு சில நல்ல அதிகாரிகள் இருக்கலாம். மாண்புமிகு கந்தசாமி அவர்கள்கூட ஒரு அதிகாரி மீது குறைபட்டுச் சொல்லிக் கொண்டார்கள். ஆனால் அதே நேரத்தில் நல்லவை செய்யும் அதிகாரிகளையும் பாராட்டத்தான் செய்கிறோம்.

ஆலங்குளம் சிமென்ட் பாக்டரியில் ஒரு போராட்டம் நடத்தப் போகிறோம் என்று சொன்னார்கள். எங்களையெல்லாம்கூட அழைத்துப் போனார்கள். புரட்சி செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். அங்கே அப்பாயின்ட்மென்ட் விஷயத்தில் தவறு நடந்து இருக்கிறது என்று சொல்லிச் செய்யப் போகிறோம் என்றார்கள். அங்கே சென்று அந்த அதிகாரியைச் சந்தித்துப் பேசிவிட்டுப் புன்னகையோடு வெளியே வந்தோம். புரட்சி செய்யப் போகிறோம் என்று சொல்லிச் சென்றவர்கள் புன்னகையோடு வெளியே வந்தோம். அந்த அளவுக்கு அந்த மானேஜிங் டைரக்டர் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவரைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். அவர் பெயர் ராஜாராம். அப்படிப்பட்ட நல்ல மேனேஜிங் டைரக்டர்கள் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்களுக்குக் கிடைத்து இருக்கிறார்கள். அதை நாங்கள் பாராட்டத்தான் செய்கிறோம். ஆனால் நாம் போடும் நல்ல திட்டங்களை சரியான முறையில் அமல்படுத்துகிறார்களா என்று பார்ப்பதற்கு என்ன திட்டங்களை நாம் வைத்து இருக்கிறோம்? சேலாவில் 'மக்கள் கமிட்டி' என்று வைத்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் நடக்கிறபோது அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். நான் சொல்கிறேன் ஜப்தி நடந்து இருக்கிறது என்று. ஜப்தி செய்யவில்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். இதில் யார் சொல்வதை நம்புவது? சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லத்தான் முடியும். நிரூபிக்க முடியுமா? எங்களிடத்தில் என்ன, அதிகாரிகளா இருக்கிறார்கள்? அமைச்சர்கள் அதிகாரிகள் கொடுத்த ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டு பேசக்கூடாது.

1973 ஆகஸ்ட் 9] [திரு. க. சுப்பு]

நடைமுறையில் எப்படி இருக்கிறது என்பதை அறிந்துதான் பேச வேண்டும். கொள்கைகளை அமல நடத்துவதில் பல கோளாறுகள் இருக்கின்றன என்று கூறுகிறோம். அந்தக் கோளாறுகளைக் கண்டுபிடித்து அவற்றை நிவர்த்தி செய்வதுதான் அரசின் கடமை எனறு சொலலிக்கொள்ள விரும்புகிறேன்.

கிழக்கு இராமநாதநரம் மாவட்டத்தில் நடைபெற்று இருக்கிற ஒரு நிகழச்சியைச் சொல்கிறேன். திருமணத்திற்குக் கொடுத்த சீவரிசையை ஜப்தி செய்து இருக்கிறார்கள். கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறறு இருக்கிறது. வேறு மாவட்டத்தில் நடக்கக்கூடாதா? கல்யாணம் முடித்துக் கொண்டு சீர்வரிசையோடு வருகிறவனைப் போய் நம்முடைய அதிகாரிகள் ஜப்தி செய்திருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய மனோபாவம் இன்னும் மாறவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. தியாகராச செட்டியாரிடத்தில் போகவில்லையே ஏன்? நாம் எவ்வளவு தான் சோசலிசக் கொள்கைகளை உருவாக்கினாலும், அவற்றை நிறைவேற்றுவது என்பது இந்த அதிகாரிகள் கையில்தான் இருக்கிறது. அவர்களுடைய இந்த மனோபாவத்தை மாற்றுவதற்கு அனைவரும் ஒன்றுக இணைந்து செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இனிமேலாவது ஜப்தி செய்கிறபோது கொஞ்சம் நிதானத்தோடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்தியை நிறுத்த வேண்டும், கடன் வசூலைத் தள்ளி வைக்க வேண்டுமென்று நான் அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களைச் சந்தித்துக் கேட்டேன். அவர்களும் உடனே நிறுத்துங்கள் என்று சொல்லி உத்தரவிட்டார்கள். ஆனால் அங்கே வசூல் நடந்து கொண்டிருக்கிறது. கேட்டால் அது போஸ்ட்போன்மென்ட் ஆப் லோனுக்குத்தான் வரும், இது குளோசுடு லோன் கீழ் வருகிறது என்று சொல்கிறார்கள். மெதுவாகப் போய் வசூல் செய்வதும், உடனடியாக வசூல் செய்வதும் அதிகாரிகளின் கையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள், தள்ளிவைத்து இருக்கிறோம் என்று உத்தரவு போட்டாலும், அரசுக்கே தெரியாமல், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கே தெரியாமல் அங்கே வசூல் நடைபெறுகிறது. அந்த நிலைமையில் நாம் இருட்டறையில்

[திரு. க. சுப்பு] [1973 ஆகஸ்ட் 9

உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட அதிகார வர்க்கத்தை நம்பி நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நெருக்கடிக்குப் பரிகாரம் காணுவதற்குப் பதிலாக ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்வது சரியாக இருக்காது என்று சொல்லிக் கொள்கிறேன்.

வன நிலங்களை, தரிசாக இருக்கும் நிலங்களை ஏழைகளுக்குக் கொடுப்போம் என்று சொன்னார்கள். 50,000 ஏக்கர் நிலங்களைக் கொடுப்போம் என்று சொன்னார்கள். காடு இருக்கும் இடங்களில் நாங்கள் உடனே கிளைகளை வைத்தோம். அங்கே போய்ப் பிரசாரம் செய்தோம். அந்த நிலங்களை நிலம் இல்லாதவர்களுக்கு வாங்கித் தருகிறோம் என்று சொல்லி நாங்கள் ஆட்களைச் சேர்த்தோம். ஆனால் கொடுக்கப் போவதில்லை என்று பிறகு அறிவித்து விட்டார்கள். அதற்குக் காரணம் கேட்ட நேரத்தில், அமைச்சர் திரு. ஓ. பி. ராமன் அவர்கள் சொன்னார்கள், மத்திய அரசாங்கத்திலிருந்து திரு. சி. சுப்பிரமணியத்திடமிருந்து ஒரு லெட்டர் வந்திருக்கிறது. அந்த நிலங்களைக் கொடுப்பது சரியல்ல என்று சொல்லியிருக்கிறார்கள்; ஆகவே, அது ஒரு பாலிசி மேட்டர்; நாங்கள் நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னால் என்ன, நாம் நிறுத்திவிட வேண்டுமா? நாங்கள் மீறி செய்வோம் என்று சொல்லி அந்த நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுத்திருக்க வேண்டும். அப்படி நிலத்தைக் கொடுத்து இருந்தால் அந்த மக்கள் எல்லாம் உங்கள் பக்கம் இருப்பார்கள்.

சினிமாக்காரன் பக்கம் போய்விட்டார்கள் இந்த நாட்டில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். நம்முடைய திட்டம் என்ன, இந்த அரசின் திட்டம் என்ன அது நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு இருக்கிறதா, நம்முடைய திட்டங்கள் எந்த அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களை, பிற்படுத்தப்பட்ட மக்களை, ஏழை மக்களைப் போய் தொட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். 10–15 ஆண்டு களில் நிலத்தையெல்லாம் ஆர்ஜிதம் செய்து வீடுகள் கட்ட மனைகள் கொடுப்போம் என்று சொன்னீர்கள். ஆனால் இன்று

1973 ஆகஸ்ட் 9] [திரு. க. சுப்பு]

நிலத்தை ஆர்ஜிதம் செய்திருந்தும் வீடுகள் கட்ட முடியாத நிலைமை இருந்து வருகிறது. மழை வந்தால் அந்தப் பகுதியில் எல்லாம் தண்ணீர் தேங்கிவிடுகிறது. பெரிய பணக்காரன் என்றால் இரண்டு பக்கமும் காம்பவுண்ட் சுவர் கட்டிப் பார்த்துக் கொள்கிறார். இவற்றிற்கெல்லாம் என்ன முறையில் பரிகாரம் காணப்போகிறீர்கள்?

காட்டு நிலங்களை எப்போது கொடுக்கப் போகிறீர்கள்? கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்தார் டேம் வருகிறது என்பதற்காக அங்கேயுள்ளவர்களை வேறு இடத்திற்குப் போகச் சொன்னார்கள். இப்போது அவர்களை வேறு ஒரு இடத்திற்குப் போங்கள் என்று சொல்கிறார்கள். அங்கேயிருக்கும் மக்களை வெளியேற்றுவதற்காக நடவடிக்கைகளை எடுத்துக் கொண்ட போது அமைச்சர் ஓ. பி. இராமன் அவர்களைச் சந்தித்து, இதற்கு உடனடியாக ஸ்டே தாருங்கள், பிறகு வேண்டுமானால் நீங்கள் ஆணை போடுங்கள் என்று சொன்னேன். அவர்கள் அதிகாரிகளைக் கலந்துகொண்டு சொல்கிறேன் என்று சொன்னார்கள்.

இங்கே சொல்கிறார்கள், அரிசன மக்களுக்காக வாழ்கிறோம். ஏழை எளிய மக்களுக்காக வாழ்கிறோம் என்று. ஆனால் அங்கேயுள்ள மக்களைக் கட்டாயமாக வெளியேற்றும்போது ஸ்டே தாருங்கள் என்று சொன்னால் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டு தருகிறேன் என்று சொல்கிறார்கள். அதிகாரிகளைக் கேட்காமலேயே ஸ்டே தர வேண்டும். அமைச்சர் ப. உ. ச. அவர்களிடமிருந்து நான் ஒரு முறை அப்படி வாங்கியிருக்கிறேன். இப்படிப்பட்ட பொதுவான பிரச்னைகளுக்குப் போட்டுக் கொடுங்கள். தனிப்பட்ட பிரச்னைகளுக்குத் தேவையில்லை. அதிகாரிகளைக் கேட்டால் அவர்கள் வேண்டாம் என்றுதான் சொல்வார்கள். காடு இருந்தால்தான் காட்டு இலாகா அதிகாரி தேவை. காடே இல்லையென்றால் அவர்கள் தேவை இல்லை என்று வந்துவிடும் ஆகவே, அவர்கள் வேண்டாம் என்று சொல்வார்கள். நாம் எதற்காக இருக்கிறோம்? சட்ட மன்றத்திற்கு எதற்காக வருகிறோம்? ஒரு கொள்கையைச் சொல்லி வருகிறோம். அந்தக் கொள்கையை நிறைவேற்ற முடியவில்லையென்றால், எப்படி முடியும்? உணவு உற்பத்தியைப் பெருக்க வன நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்போம் என்று

[திரு. க. சுப்பு] [1973 ஆகஸ்டு 9

சொன்னேன். அவர்களுக்கு நிலம் அளித்தால்தான் அவர்கள் உணவு உற்பத்தி செய்ய முடியும். அந்தக் காடுகளில் மரமே கிடையாது. சந்தன மரம் இருக்கிறதா என்றால் இல்லையென்பார்கள். அதை விட்டுவிட்டு மற்றதெல்லாம் அங்கே வைத்திருப்பார்கள். ஒருவன் ஒரு காட்டைக் குத்தகைக்கு எடுத்துவிடுகிறான் என்றால் அங்கேயுள்ள மக்களையெல்லாம் அவன் விரட்டி விடுகிறான். 15 ஏக்கர் நிலத்தை ஒருவன் ரூ. 16 கொடுத்து குத்தகைக்கு எடுத்து விடுகிறான். உடனே அவன் அங்கேயுள்ள ஏழைகளை வெளியேற்ற முயல்கிறான். ரூ. 16 அரசாங்கத்திற்கு வந்தா வாழப்போகிறது? அப்படித்தான் அரசாங்கம் வாழ வேண்டுமென்றால் வாழாமலிருப்பதே நல்லது. ஏழைகளை வெளியேற்றிவிட்டு யாரோ இரண்டு ராஜாக்களை உட்கார வைத்துவிட்டு அதன்மூலம் அரசாங்கத்திற்குக் கிடைப்பது ரூ. 16 என்றால் எதற்காக அந்தப் பணம்? அரசாங்கம் இதையெல்லாம் பார்க்க வேண்டும்.

எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும் நிம்மதி இல்லை. ஆசிரியர்கள் பகுதியை எடுத்துக்கொண்டாலும், மாணவர்கள் பகுதியை எடுத்துக்கொண்டாலும் சரி, நிம்மதி இல்லை. வாங்கிய பணத்திற்குக் கணக்கு கேட்டால், அதைக் கூடக் கொடுக்க முடியவில்லை. நிர்வாகச் சிக்கல் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன், உணர்கிறேன். அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது என்று சொல்லப்படுகிறது. அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது என்று சொன்னால் அதை உடைப்பதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது, மத்திய அரசாங்கம் குறுக்கே நிற்கிறது என்று சொல்லிவிட்டால் மட்டும் தப்பித்துக் கொண்டுவிட முடியாது. நீங்களும் வாருங்கள், எல்லோரும் சேர்ந்து போய் குறுக்கே நிற்பதை உடைத்து எறிவோம் என்று நடவடிக்கை எடுக்க முன்வாருங்கள், பாராட்டலாம்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை எடுத்துக்கொண்டால் அந்தப் பிரச்னை தீராத பிரச்னையாக இருக்கிறது. அதைக் கொஞ்சமாவது தீர்க்கலாம் என்று வயது வரம்பைக் கொஞ்சம் உயர்த்துங்கள் என்று தீர்மானம் கொண்டு வந்தோம். 25 வயது என்ற இருப்பதை 27 ஆக உயர்த்தியிருக்கிறார்கள், பரவாயில்லை. நாங்கள் 30 வயதாக உயர்த்துங்கள் என்று கேட்டோம். வேலை தேடிக்

1973 ஆகஸ்ட் 9] [திரு. க. சுப்பு]

கொள்வதற்கு ஒரு சான்ஸ் கொடுங்கள் என்று தான் கேட்டோம். வேலை வாய்ப்பு கூட கேட்கவில்லை, வேலை தேடுவதற்கு ஒரு வாய்ப்பு என்று தான் கேட்டோம். தீர்மானத்தைக் கைவிடுங்கள், அரசு பரிசிலனை செய்யும் என்று சொன்னார்கள். ஆனால் அங்கும் கிடையாது, இங்கும் கிடையாது, எங்கும் கிடையாது. வேலை தேடி அலைவதற்கு ஒரு வாய்ப்புத்தான் கேட்டோம். அதைக்கூட தரவில்லையென்றால் என்ன பலன் ஏற்படும்?

இன்னொன்று. வாக்குறுதி கொடுக்கிறார்கள். வாக்குறுதி கொடுத்தால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் வாக்குறுதி கொடுக்கக் கூடாது. நிறைவேற்றப் படவில்லை என்றால் வாக்குறுதி கொடுப்பதில் அர்த்தமே இல்லை.

நாவலர் அவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். பல்கலைக் கழக ஆட்சிக் குழுவில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்குத் தனியாக ஒரு மசோதா கொண்டு வருவதாக வாக்குறுதி கொடுத்தார். அந்தச் சட்டம் எப்பொழுது கொண்டு வருவார்கள்? எப்பொழுது வரும்? சிண்டிகேட் காங்கிரஸ் அதற்காகப் போராட்டம் நடத்துவதாகக் கூட அறிவித்திருந்தார்கள். நல்ல வேளை இப்பொழுது அந்தப் போராட்டம் நடக்கவில்லை. அப்படி வாக்குறுதி கொடுக்கப்பட்டும் நிறைவேற்றப்படாத காரணத்தினால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது? நிலைமை மோசமாக இருக்கிறது.

மாணவர் பிரதிநிதித்துவம் இல்லாததனால் பல கோளாறுகள் ஏற்படுகின்றன. பல்கலைக்கழகத்தில் தலையிட்டு அரசாங்கம் கேள்வி கேட்கக்கூடிய நிலையில் இல்லை. எம்.எஸ்.லி சேருவதற்கு 6 பேர் பச்சையப்பன் கல்லூரியிலிருந்து சேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அட்மிஷன் கார்டு இன்னும் வரவில்லை என்று சொல்லப்பட்டது. யுனிவர்லிடி வைஸ்-சான்ஸலரைப் பார்க்கவே முடிவதில்லை. கவர்னர்ஜெனரலைக் கூடப் பார்த்துவிடலாம். மெட்ராஸ் யுனிவர்லிடி வைஸ்-சான்ஸலரைப் பார்க்கவே முடியாது. அவர் சாமான்ய மக்களைப்பற்றிப் பேசுகிறார். அவர் வந்தால் ஒரு மைலுக்கு அப்பால் போக வேண்டும். இந்த நாட்டில் அறிவுப் பஞ்சம் இல்லை. ரிஜிஸ்டிராரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று சொல்லப்படும். பிரின்சிபாலைப் போய்ப்

[திரு. க. சுப்பு] [1973 ஆகஸ்ட் 9

பார்க்க வேண்டும் என்று கூறப்படும். கடைசியில் நான்கு நாள் கழித்துப் போனால் 'உங்கள் பெயர் அடிக்கப்பட்டுவிட்டது' என்று சொல்லப்படுகிறது. இது என்ன நியாயம்? மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருந்தால், இந்தக் கோளாறு வந்திருக்காது. மாணவர்களிடையே இதனால் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. இது மாதிரி விஷயங்களில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருந்தால் அவர்கள் நிலைமைகளை எடுத்துக்கூறிப் போராடியிருக்க முடியும். வைஸ் சான்லலர் இம்மாதிரி நடந்துகொள்வது நல்லது அல்ல. அவர்களைப்பற்றிக் குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காக நான் இதை இங்கே சொல்ல வரவில்லை. உண்மை நிலையை எடுத்துக் கூறுகிறேன். அம்மாதிரிப் போக்கைக் கண்டிப்பதற்குப் பல்கலைக் கழக அமைப்பில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை நாங்கள் இங்கே வற்புறுத்தினோம். அது என்ன ஆயிற்று? அதற்குரிய சட்டத்தைக் கொண்டு வந்திருந்தால் பரிகாரம் கண்டிருக்க முடியும். நானும் சட்டமன்ற உறுப்பினர் அழகர்சாமி அவர்களும் வைஸ்-சான்ஸலரைப் பார்க்கப் போயிருந்தோம். யாராவது இரண்டு பேர்கள் சாட்சிக்கு வேண்டாமா? அவர் எப்பொழுது பார்த்தாலும் மீட்டிங்கில் இருக்கிறார் என்று தான் சொல்லப்படுகிறது. எங்களுக்கே இந்த நிலை என்றால், மாணவர்கள் எப்படிப் போய் அவர்களைப் பார்க்க முடியும்? ஏன் இந்தச் சட்டத்தைத் தாமதப்படுத்த வேண்டும்? சீக்கிரம் கொண்டுவரவேண்டும்.

மக்கள் கொடுக்கக்கூடிய நியாயமான கோரிக்கைகளைப் பார்க்கக்கூடிய பார்வை வேறு மாதிரியாக இருக்கிறது. அவற்றைப்பற்றி அரசாங்கம் என்ன நினைக்கிறது? விவசாயிகள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காக ஜனநாயக முறையில் போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு ஜெயிலில் தள்ளப்பட்டார்கள். தோழர் ஆதிமூலம், நல்லக்கண்ணு, மன்றாடியார் அகியோர்கள் ஜெயிலில் வைக்கப்பட்டார்கள். அவர்களை ஜெயிலில் எப்படி நடத்துவது? ஜெயில் மான்யுவல் என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் அதற்கு அப்பாற்பட்டு, விதிமுறைகளை மீறி நடத்தப்பட்டிருக்கிறார்கள். சாதாரணமாக

1973 ஆகஸ்ட் 9] [திரு. க. சுப்பு]

ஒரு பான் ஆர்டரை டிஃபை பண்ணியதற்காக அவர்கள் அரெஸ்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 'ஸி' கிளாஸில் வைக்கப் பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தோழர்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, பொதுத் தொண்டு செய்பவர்களுக்கு 'ஸி' கிளாஸ். சோதாவாக இருப்பவர்களுக்கெல்லாம் 'பி' கிளாஸ். இது என்ன நடைமுறை? இது மக்களுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய நடைமுறை. சாமான்ய மக்கள் என்றெல்லாம் நாம் பேசுகிறோம். ஆனால் நடப்பது அதற்கு மாறுக இருக்கிறது. இதைவிட ஜெயில் விதிகளே கிடையாது என்று வைத்துக்கொள்ளலாம். அரசியல் நிர்ணயச் சட்டத்தை எரித்தால்தான் குற்றம். ஜெயில் விதிகளை எரிக்கலாம். ஆகவே, ஜெயில் விதிகள் என்ற புத்தகத்தை எரித்துத், தூக்கி எறிந்துவிட்டு நாங்கள் சொல்வதுதான் விதி, அதைக் கேட்க வேண்டியது உங்களுடைய தலைவிதி என்று சொல்லி விடலாம்.

ஜெயிலில் இருக்கும் தோழர் நல்லக்கண்ணுவைப் பார்க்க வேண்டுமென்றால், பார்ப்பதற்குச் சொந்தக்காரர்கள்தான் அனுமதிக்கப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறது. பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு யார் சொந்தக்காரர்கள்? நாட்டிலிருக்கக்கூடிய விவசாயிகள், தொழிலாளர்கள் நலனுக்காகத் தங்கள் வாழ்க்கையையே தியாகம் செய்திருக்கக்கூடியவர்களுக்கு யார் சொந்தக்காரர்கள்? நாட்டு மக்கள்தான், சாதாரண மக்கள்தான் சொந்தக்காரர்கள். அவர்கள்தான் பார்க்க வருவார்கள். வீட்டுச் சொந்தக்காரர்கள் என்றால் அதற்கு சர்டிபிகேட் கொண்டுவந்து காண்பிக்க வேண்டும் என்று சொல்வார்கள். அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்பார்கள். கணக்குப் பிள்ளையிடம்தான் போய் சர்டிபிகேட் வாங்க வேண்டும். கணக்குப் பிள்ளையிடம் காசில்லாமல் சர்டிபிகேட் கிடைக்காது. அதற்குத்தான் கணக்குப் பிள்ளை என்று பெயர். இப்படியெல்லாம் நடைமுறையில் நடக்கிறது. இதற்கெல்லாம் பரிகாரம் காண வேண்டும். (மணி அடிக்கப்பட்டது). இதோ முடித்துவிடுகிறேன்.

தோழர் வி. பி. சிந்தன் ஒரு தொழிற் சங்கத் தலைவர். அவருக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? எந்தக் கட்சியாக இருக்கட்டும், எந்தத் தொழிற்சங்கமாக இருக்கட்டும், பாதுகாப்புக்

[திரு. க. சுப்பு] [1973 ஆகஸ்ட் 9

கொடுக்கப்பட வேண்டாமா? மூன் கூட்டியே அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்திருக்கும்பொழுது, இம்மாதிரி வன்முறையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்றால் அதைவிட லா அண்டு ஆர்டர் இல்லை எனபதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்? ஏற்கெனவே முன்னெச்சரிக்கையாகத் தகவல் கொடுக்கப் பட்டிருந்தும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததற்கு என்ன காரணம்? பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறவர் களுக்குத் தகுந்த பாதுகாப்புக் கொடுக்க வேண்டாமா? அவர் கொள்கை பிடிக்கவில்லை என்றால், அந்தக் கொள்கையை எப்படிக் கண்டிப்பது என்பதற்கு வேறு நியாயமான முறைகள இருக்கின்றன. அதை விடுத்து, ஆளையே தீர்த்துக்கட்டிவிடுவது என்றால் அனிகிலேட் பண்ணிவிடுவது என்றால், அது என்ன பாலிஸி? நக்ஸலைட் பாலிஸியை மோசம் என்று சொல்லக் கூடியவர்கள், அதைவிட அபாயகரமான அனிஹிலேட் பண்ணுவதை, தொழிற்சங்கத் தலைவரை அனிஹிலேட் பண்ணுவதை எப்படித் தடுக்காமல் இருந்தீர்கள்? ஏவ் முன் அறிவிப்புக் கொடுத்திருந்தும், மூன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கக்கூடாது? பணக்காரர்களை நக்ஸலைட்கள் கொலை செய்தால் அவர்களைத் தூக்கிலிட வேண்டும் என்று சொல்பவர்கள் தொழிற்சங்கத் தலைவரை அனிஹிலேட் பண்ணுவதைத் தடுப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? தோழர் சிந்தன் அவர்கள் ஒரு முறை அல்ல, இரண்டு முறை இப்படித் தாக்கப் பட்டிருக்கிறார்கள்.

தோழர்கள் எந்த முறையிலே சிறையில் நடத்தப்பட்டார்கள் என்பதுகுறித்து திரு. தங்கமணி அவர்கள் எடுத்துக் கூறினர்கள். 'ஸி' கிளாஸ் தோழர்கள் எப்படி நடத்தப் பட்டார்கள் என்பதை அவர்கள் ரொம்ப வேதனையோடு எடுத்துச் சொன்னர்கள். சிலருக்கு மட்டும் வெளியிலிருந்து டிபன் காரியரில் எல்லாம் போகிறது, அவர்கள் 'ஸி' கிளாஸில் இருந்தாலும். ஆனால், விவசாயத் தலைவர்களுக்கு ஆப்பிள், ஆரஞ்சு கொடுத்தனுப்பினால், அதையெல்லாம் 'ஸி' கிளாஸ் பிரிஸனர்ஸ் சாப்பிடக் கூடாது, அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். சிந்தனைக் கொலை செய்ய முயற்சித்தவர்கள் மேலே இருக்கிறார்களே, அவர்களுக்குமட்டும் போகலாமா என்று

கேட்டால், அந்த அதிகாரி பேசாமல் போய்விட்டார். இதெல்லாம் சிறிய விஷயங்களாக இருந்தாலும், சிந்திக்க வேண்டிய விஷயங்கள். இப்படி நடைமுறையில் இருக்கக்கூடிய விஷயங்கள் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படக்கூடிய முறையில் இருக்கிறதா என்றால், இல்லை. நடைமுறையில் நம்பிக்கை இல்லை என்றால், திருத்திக்கொள்வதற்கு நாங்கள் தயார், நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னால், பாராட்டுவார்கள், நம்பிக்கை ஏற்படும். ஆனால் இப்போதைக்கு நம்பிக்கை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் கொண்டு வந்திருப்பதைக் கண்டித்து என்னுடைய சில கருத்துக்களை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் அடிக்கடி ஒரு வார்த்தையைக் கேள்விப் படுகிறேன். எதற்கு எடுத்தாலும் அரசாங்கத்தின் கையாலாகாத் தனம், கையாலாகத்தனம் என்று இங்கே பேசிக் கொண்டிருக் கிறார்கள். அரசாங்கத்தினுடைய கையினாலே ஆக்கப்பட்ட காரியங்களை ஏழைகள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள், விவசாயிகள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளிகள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். குடிசைகளில் வாழ்வோர் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சில பேர்களுடைய ஆசைகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றுவதிலே வேண்டுமானால் கையாலாகாததனமாக இருக்கலாமேதவிர, அரசாங்கம் நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டியவைகளை மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே விலைவாசிகளைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். ஏதோ இந்த நாட்டில் மட்டும் விலைவாசி ஏறிவிட்டதைப் போலவும், இன்றைக்கு அகில இந்தியாவில் எங்கு பார்த்தாலும் மலிவாக, இலவசமாக உணவுப் பொருள்கள், மற்றப் பொருள்கள் கிடைத்துக் கொண்டிருப்பது போலவும் இங்கே பேசிக் கொண்டிருந்தார்கள். நான் இங்கே பேசிய அனந்தநாயகி அம்மையார் அவர்களின்

[திரு. நா. வீராசாமி] [1973 ஆகஸ்ட் 9

பேச்சுக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். அம்மையார் கட்சி அகில இந்தியக் கட்சி, டெல்லியில் ஆண்டு கொண்டிருக்கிறது. விலைவாசிகளைப் பொறுத்தவரையிலே எந்த அளவுக்கு இந்த இரண்டு இடங்களுக்கும் வேறுபாடுகள், மாற்றங்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவ்வாறாயினும் அம்மையார் அவர்களுக்குச் சந்தேகம் இருந்தால், வேண்டுமானால் அகில இந்தியாவிலும் ஒரு முறை சுற்றிவிட்டு, மீண்டும் தமிழ்நாட்டிற்கு வந்து பார்ப்பார்களேயானால், பரவாயில்லை தமிழ்நாடு என்று பாராட்டக்கூடிய அளவுக்கு மனதில் மாற்றம் ஏற்பட்டுவிடும் என்று கருதுகிறேன்.

அவர்களுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1972 ஜூலை மாதத்தில் அகில இந்தியாவினுடைய பொது விலைக் குறியீடு 205 புள்ளிகளாக இருந்தது, அதாவது ஜெனரல் இண்டெக்ஸ். அது சென்னை நகரத்தில் 201 புள்ளிகளாக இருந்தது. ஆகஸ்டு மாதத்தில் 207 ஆக இருந்தது, தமிழ் நாட்டில் 201 ஆக இருந்தது. இந்த அளவு இன்றைக்கு நம் மாநிலத்தில் வித்தியாசம் இருக்கிறது. 1973 மே மாதத்தில் அகில இந்தியாவினுடைய ஜெனரல் இண்டெக்ஸ் 228 புள்ளிகள். ஆனால் தமிழ்நாட்டில் 217 புள்ளிகள் உணவு விலைக் குறியீடு. எதிர் காலத்திலும் அகில இந்தியாவோடு நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 1973 ஜூன் மாதத்தில் 273 புள்ளிகள் அகில இந்திய உணவு விலைக் குறியீடு. அது தமிழ்நாட்டில் 224 புள்ளி களாக இருந்தது. இவ்வளவு வித்தியாசங்கள் இருந்தாலும்கூட, நீங்கள் இங்கே விலைவாசி ஏறிவிட்டது என்று கூக்குரல் இட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை இந்த மன்றத்தில் திரு. கந்தப்பன் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நான் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். ஏதோ அரசு மின்சார விநியோகத்தில் தவறு செய்துவிட்டது என்றெல்லாம் கூட சுட்டிக்காட்டப்பட்டது. ஹரியானாவில் 90 சதவிகிதம் மின்வெட்டு இருந்தது அவர்கள் கண்ணுக்குத் தெரியவில்லை. பஞ்சாப் மாநிலத்தில் மில்கள் மூடப்பட்டுக் கிடந்தது அவர்கள் காதுகளில் விழவில்லை. தமிழ்நாட்டில் ஓரளவுக்கு மில்கள் இயங்க வேண்டும், எல்லாவிதமான பணிகளும் நடைபெற

1973 ஆகஸ்ட் 9] [திரு. நா. வீராசாமி]

வேண்டும் என்ற காரணத்தினால், கொஞ்சம் கட்டுப்பாடு வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னோம். அதைப்பற்றி ஒரு பெரிய குற்றச்சாட்டு. எதோ இங்கே ஒரு யூனிட் ஒரு ரூபாய்க்கு கள்ள மார்க்கெட்டிலே விற்றார்கள் என்று சொன்னார்கள். இந்த மன்றத்திலே பொறுப்புள்ள ஒரு உறுப்பினர் அப்படிப் பேசுவது எந்த முறையிலே நியாயமானது என்று எனக்குப் புரியவில்லை. பொறுப்புள்ள உறுப்பினர் ஒருவர் பேசும்போது இன்னார் இன்ன விலைக்கு வாங்கினர் அல்லது இன்னார் இன்ன விலைக்கு விற்றார் என்று சொல்வதுதான் முறையே அல்லாமல் பொத்தாம் பொதுவில் எதை எதையோ சொல்லி விடுவது, அரசின்மீது பழி சுமத்துவது என்று பேசுவது சரியானதல்ல, என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏன் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டது என்று கேட்டார்கள். எதனால் பற்றாக்குறை ஏற்பட்டது என்பதை அவர்களே எண்ணிப் பார்க்க வேண்டும். நான் ஏதாவது சொன்னால் எங்கள் தலைவர் கலைஞர் சொன்னால் அவர்களுக்குக் கோபம் வரும் மத்திய அரசு போட்ட திட்டம்தான் இந்தியா முழுவதும் மின்சாரப் பற்றாக்குறைக்குக் காரணம் என்று கே. எல். ராவ் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பார்த்து பிறகும் இந்த அரசின்மீது குறை சொல்கிறார்கள் என்றால் அவர்கள் வேண்டுமென்றே அபாண்டமாகப் பழிச் சுமத்துகிறார்கள் என்றுதான் பொருளே தவிர வேறல்ல. இந்த நிலைமையை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். இந்த ஆட்சியிலே ஊழல், நிர்வாகத்திலே கோளாறு என்று சொன்னார்கள். ரூ. 29,000-க்கு பாடகு கட்டாமல் ரூ. 38,000-க்குக் கட்டை கொடுக்கவில்லையா என்று சொன்னார்கள் முதலமைச்சர் அவர்களுடைய அப்போது குறுக்கிட்டு பதில் சொன்னார்கள். இங்கே ஒருந்து டில்லிக்குக் கொண்டுபோய் ஒரு பட்டியலைக் கொடுத்தார்கள். அதிலே இருக்கின்ற எல்லா விவரங்களையும்பற்றி நான் பேச விரும்பவில்லை. இங்கே இருக்கின்ற மக்கள்மீது நம்பிக்கை இருந்தால் இங்கே கொடுப்பது தான் நியாயம் என்று அவர்கள் உணர்ந்திருந்தால், அந்தப் பட்டியலை இந்த மன்றத்திலே கொடுத்திருப்பார்கள். அந்தப்

[திரு. நா. வீராசாமி] [1973 ஆகஸ்ட் 9

பட்டியலிலே உள்ள குற்றச்சாட்டுக்களில் ஒன்றைமட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நாமெல்லாம் கடிதம் கொடுத்துத் தானே Madras Tenancy Act கொண்டுவந்தார்கள் என்றுகூடப் பார்க்காமல் இதுவும் ஒரு குற்றச்சாட்டு என்று சொல்லி அங்கே கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அது குற்றச்சாட்டல்ல, அதில் ஊழல் இல்லை—நாங்கள் சொல்லித்தான் அரசு செய்தது என்று இந்த மன்றத்திலே, உண்மையைச் சொல்லியிருந்தால் அவர்களைப் பாராட்டியிருப்பேன். அவர்கள் சிறந்த எதிர்க் கட்சியினர் என்ற பாராட்டைப் பெற்றிருப்பார்கள்.

குற்றச்சாட்டு இதுதான். நிழு குளோப் தியேட்டருக்குள்ள குத்தகை நிலம்பற்றியது. குற்றச்சாட்டு எண் 26. இந்த நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துள்ள வரதராஜுப்பிள்ளை சேலத்தைச் சேர்ந்தவர். கடந்த 30 ஆண்டுகளாகத் திராவிடர் கழகத்தோடு தொடர்பு கொண்டுள்ளவர். இதுதான் குற்றச்சாட்டாகும். இவர் இந்த நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துள்ளார். குத்தகை எடுத்தவரை அந்த நிலத்தின் சொந்தக்காரராக ஆக்கச் சட்டம் ஒன்றை அமைச்சரவை கொண்டுவந்துள்ளது என்பது குற்றச்சாட்டு. இதிலே வேடிக்கை என்னவென்றால், இந்தக் குற்றச்சாட்டைக் கொடுத்துவிட்டு அரசாங்கத்தின்மீது பழி சுமத்துகிறார்கள். அரசு கொண்டுவந்த குத்தகைதாரர் சட்டத்தை ஆதரித்து இந்த அரசுக்கு அவர்களே மனு எழுதியிருக்கிறார்கள். அதில் யார் யார் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்றால், குற்றச்சாட்டுப் பட்டியலை யார் யார் கொண்டுபோய் கொடுத்தார்களோ அவர்கள் எல்லாம் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடாரும் அதில் கையெழுத்துப் போட்டிருக்கிறார். இங்கே வேகம் வேகமாகப் பேசிய திருமதி அனந்த நாயகி அம்மையார் அவர்களும் கையொழுத்துப் போட்டிருக்கிறார்கள். என்மைத் திருவாளர்கள் டென்னிஸ், ஜேம்ஸ், கோபால், ஒ. எஸ். சுந்தரம் ஆகியோரும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள்.

இதைகூட வேடிக்கையல்ல. அந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டபோது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. தங்கமணி அவர்கள் 'கலீவாளர்களே, ஏற்கெனவே அமைச்சரவர்கள் கொண்டுவந்த திருத்தம் நல்லது' என்று இவ்வளவு அழகாகச்

1973 ஆகஸ்ட் 9] *[திரு. நா. வீராசாமி]*

சொல்லியிருக்கிறார்கள். ஹாண்டே அவர்கள் பேசும்போது கொஞ்சம் அதிலிருந்து மாறுபட்டார்கள். அவர்களுக்கு மூதல்மைச்சர்கூட பதில் சொல்லவில்லை. அந்த இலாகா அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள்கூட பதில் சொல்லவில்லை. ஹாண்டே அவர்கள் ஒரு சந்தேகத்தைக் கிளப்பியபோது திரு. பொன்னப்ப நாடார் அவர்களே அதற்குப் பதில் சொல்கிறார்கள்.

" Mr. Speaker, Sir,

In welcoming this Bill, I would like to answer the point that has been raised by my learned Friend, Dr. Hande . . ."

என்று சொன்னார்கள். இப்படி வேடிக்கையாக இருக்கிற ஒரு குற்றச்சாட்டை கொடுத்துவிட்டு, அவர்கள்தான் பேசுகிறார்கள் ஆளும் கட்சியின்மீது நம்பிக்கையில்லை; இது ஊழல் ஆட்சி என்று. உண்மையிலே இந்தக் குற்றச்சாட்டில் உண்மையிருக்குமானால், அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொல்வதைப்போல, மனசாட்சி என்று ஒன்று இருக்குமானால், அந்த மனசாட்சிக்கு எது உண்மை என்று தெரிகிறதோ அதை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கலாம் அல்லவா?

எதைக்கெடுத்தாலும் லஞ்சம், ஊழல் என்று வேகம் வேகமாகப் பேசுகிறார்கள். இந்த அமைச்சரவையிலுடைய மூன்றாவது அமைச்சர் மதியழகன் அவர்களைப்பற்றி அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. கருத்திருமன் அவர்கள் ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார்கள். அதன் உள் விவகாரத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. மதியழகன் ஒரு வீடு வாங்கினார் என்பது குற்றச்சாட்டு. அதற்கு அவர் சொன்ன பதில், " இந்த விவாதத் திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தொடங்கி, " எதிர்க்கட்சித் தலைவர் லாயிட்ஸ் ரோட்டில் வீடு வாங்கியிருக் கிறேன் என்று சொன்னார்கள். வீடு வாங்குவது தவறு என்று எதிர்க் கட்சித் தலைவர்கள் கருதுகிறார்களா? வீடு வாங்குவது ஒன்றும் தவறு இல்லை " என்று சொல்லியிருக்கிறார்கள். உடனே கருத் திருமன், " வீடு வாங்கலாம்; எப்படி வாங்குகிறார்கள் என்பதுதான் கேள்வி " என்று கேட்டார்கள். அப்போது திரு. மதியழகன், " பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்காக எவ் வளவு கேவலமான முறையில் மூன்று நாட்களாக எங்களை நடத் திறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்" என்று சொல்லியிருக் கிறார்கள். அப்போது மூன்று நாள் நடைபெற்றதுதான் இப்

[திரு. நா. வீராசாமி] [1973 ஆகஸ்ட் 9

போதும் மூன்று நாட்களாக நடத்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. எதோ அமைச்சர்களாக இருக்கிற காரணத்தினால் அவர்கள் சொந்தக்காரர்கள் வீடு வாங்கக்கூடாதா? இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளை ஒட்டு மொத்தமாகச் சாட்டுவது சரி அல்ல என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அவர் சொன்னதைத் தப்பு என்று நான் சொல்லவில்லை. அப்படி இந்தப் பக்கம் இருக்கும்போது சொல்லிவிட்டு, இப்போது அந்தப் பக்கம் போன உடனே திரு. கருத்திருமன் சொன்னதையே திரு. மதியழகன் திருப்பிச் சொல்வது என்ன முறை, என்ன நியாயம் என்றுதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இதைப்போன்ற இன்னும் பல கருத்துக்களை இங்கே பலரும் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் பேசிய எல்லா விவகாரங்களுக்குள்ளும் நான் போக விரும்பவில்லை. அதிலே இன்னுமொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகளை எல்லாம் இந்த அரசாங்கம் துன்புறுத்துகிறது என்று சொன்னார்கள். விவசாயிகள் நிலத்தை ஜப்தி செய்து, பம்புசெட்டுகளை ஜப்தி செய்து விட்டது இது முறையா என்று கேட்டார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். சோஷலிசக் கருத்துக்களைப் பரப்புகிறோம் என்று சொல்கின்ற பொதுநல வாதிகள்—கம்யூனிஸ்ட் கட்சியினர், ஏழைகளுக்காகவே வாழ்கிறோம் என்று சொல்லுகிறவர்கள், தாங்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டாமா? இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருக்கும் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் என்னால் மிகவும் மதிக்கப்படக் கூடியவர்கள், அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. கூட்டுறவு வங்கியில் அவரது துணைவியார் 38,000 ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார்கள். அதைத் திருப்பிச் செலுத்தாததால் ஜப்தி செய்தார்கள், என்று சொன்னார்கள். உள்ளபடியே அவர்களுக்குத் திருப்பிச் செலுத்த முடியாமல் இருந்திருக்கலாம். அது வேறு விஷயம், அதைப்பற்றிக் கவலை இல்லை. அதனால் அவர்கள் இருக்கக்கூடிய நிலைமைக்கு முடியவில்லை என்று சொல்வது சரியல்ல. உண்மையிலே அவர்களால் கொடுக்க முடியவில்லையா அல்லது கடனைத் திருப்பிக்கொடுக்க மனமில்லையா? என்று தெரிந்துகொள்வதற்காக அவர்களுடைய சொத்துக் கணக்கைப் புரட்டிப் பார்த்தேன். அவர்களுடைய பெயரிலே

1973 ஆகஸ்ட் 9] *[திரு. நா. வீராசாமி]*

மாத்திரம் 17 ஏக்கர் இருக்கிறது. அது அவருக்குச் சொந்தம். அவருடைய குடும்பத்தின் பெயரில் 44 ஏக்கர் இருக்கிறது. ஆக மொத்தம் 61 ஏக்கர் நிலம் சொந்தமாக வைத்திருக்கிறார். ஆனால் தன்னுடைய மனைவியார் பெயரில் கடனாக வாங்கிய 38,000 ரூபாய் செலுத்த முடியவில்லையா என்று கேட்டால் அவருக்குக் கோபம் வரும். ஒருவேளை பணம் இல்லாமல் இருந்திருக்கலாம்; அதனால் கொடுக்காமல் இருந்திருக்கலாம். என்று நினைத்தேன். ஆனால் உண்மை என்ன என்றால் அவருடைய பாங்க் பாலன்ஸ் 16,000 ரூபாய் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் பெரியவர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவர்; இந்த மன்றத்தின் உறுப்பினர்; சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடியவர். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட தவறு செய்யலாமா? அதற்காக இந்த அரசின்மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சொல்வது நியாயமா? அது முறையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஊழல், லஞ்சம் என்று வேகம் வேகமாகப் பேசினார்கள். அவர்கள் நிலைமையை மறந்துவிட்டு இப்படிப் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். மத்தியிலே ஒரு அரசாங்கம் நடக்கிறது. அது அவர்கள் கட்சி அரசாங்கம். அங்கே எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரு விபரத்தை மட்டும் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்திய அரசாங்க உணவு கார்ப்பரேஷனில் இருந்து ஒரு கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அது 1969-70-க்கான கணக்கு 1969–70-ல் மத்திய அரசாங்கம் கொள்முதல் செய்த உணவு தானியத்தில் ஒரு பகுதி காணமல் போய்விட்டது—Missing ஆகிவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு காணமல் போய்விட்டது என்றால், கோதுமையில் மட்டும் 1.95 லட்சம் டன். அதன் விலை 15 கோடியே 60 லட்சம் ரூபாய். நெல்—அரிசியில் 13 லட்சத்து 20 ஆயிரம் டன் காணவில்லை. அதன் மதிப்பு 84 கோடியே 90 லட்சம் ரூபாய். அதைப்போல மைலோ. இப்படி மொத்தமாகச் சேர்த்து 100 கோடியே 94 லட்சம் ரூபாய்க்கான உணவு தானியம் காணப்படவில்லை என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். மத்தியிலே அப்படி ஒரு ஊழல் ஆட்சி செய்து கொண்டிருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சி இங்கே **ரூ. 28,000-க்கு படகு கட்டாமல் ரூ. 39,000-க்கு படகு கட்டுகிறார்கள்**

[திரு. நா. வீராசாமி] [1973 ஆகஸ்டு 9

என்று அம்மையார் அவர்கள் குறைபடுகிறார்கள். இதுவரை காணுமல் போன உணவு தானியங்களுக்கு மத்திய அரசாங்கம் சரியான பதில் சொல்லவில்லை. மிஸ்ஸிங் என்று கணக்கு காட்டி விட்டால் பொது மக்களுடைய வரிப் பணத்திற்கு சமாதானம் சொன்னதாகிவிடுமா? அப்படி ஊழல் செய்கிறவர்கள்தான் 'நாங்கள் ஏழைகளுக்காகத் தொண்டாற்ற வந்தவர்கள்' என்று இந்த ஆட்சியைப் பார்த்துக் குறை சொல்கிறார்கள். இது என்ன முறை என்று கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மன்றத்தில் கொள்கையே இல்லாத ஒரு கட்சி இருக்கிறது. அந்தக் கட்சிக்கு ஒரு கொள்கையும் கிடையாது. அடிக்கடி எதையாவது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய கொள்கை என்ன என்று கேட்டால், அண்ணாவின் கொள்கை என்று சொல்கிறார்கள். அண்ணாவின் கொள்கை என்ன என்று கேட்டால், அதுதான் அண்ணாவின் கொள்கை என்று சொல்கிறார்கள். பிறகு சொல்கிறார்கள். மதுவிலக்குதான் எங்களுடைய கொள்கை என்று. உள்ளபடியே மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமாக இருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை. யாரோ எதற்கெல்லாமோ சத்தியம் செய்கிறார்கள். அவர்கள் சத்தியம் செய்ய வேண்டாம். அந்தக் கட்சியிலே இருப்பவர்களில் குடிக்காமல் இருப்பவர்கள் எத்தனை பேர் என்பதை மனசாட்சியைத் தொட்டுப்பார்த்து சொல்லத் தயாரா?

அது தனிப்பட்டவர்களுடைய நடவடிக்கை. நான் அதற்குள்ளே போகவில்லை. இந்த நாட்டில் நிர்வாகம் கெட்டுவிட்டது என்றால், யார் அந்த நிர்வாகத்தைக் கெடுக்கிறார்கள்? யார் அந்த அதிகாரிகளைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரத்தோடு ஒரு குற்றச்சாட்டை நான் உங்கள் அனுமதியோடு இங்கே படிக்க விரும்புகிறேன்.

மதுவிலக்குதான் எங்கள் கொள்கை என்று சொல்லக் கூடியவர்கள் யாரோ அல்ல அந்தக் கட்சியின் ஒரு தொண்டர் கூட அல்ல—ஒரு தொகுதியின் அமைப்பாளர் பி. கே. குமரவேல் என்பவர் ஒரு அழகான கடிதம் எழுதியிருக்கிறார். அதைப் படிக்கும்போது எனக்குச் சிரிப்பாக

1973 ஆகஸ்ட் 9] *[திரு. நா. வீராசாமி]*

இருக்கிறது. கொஞ்சம் வேதனையாகக் கூட இருக்கிறது. "புளியம்பட்டி 20—5—73—அன்புள்ள காளிமுத்துவுக்கு சுமரவேல் எழுதும் கடிதம்—இந்தக் கடிதம் கொண்டுவரும் பெரிய பையன் வசம் அருமையான கட்டுச்சாராயம் 2 லிட்டர் கொடுத்தனுப்பவும். . . . ."

திருமதி த. ந. அனந்தநாயகி: On a point of Order, Sir, what is the letter, the hon. Member is reading? May I know whether he has given a copy of the letter to the Hon. Speaker before? Otherwise, we can also bring all sorts of things.

திரு. நா. வீராசாமி: அந்தக் கடிதத்தை சபாநாயகரிடத்தில் காட்டி அவரது அனுமதியைப் பெற்றேதான் படிக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. சௌடி சுந்தரபாரதி) ஏற்கெனவே அனுமதி பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். அவரே படிக்கலாம் என்று உத்தரவிட்டிருந்தாலும் இனி மேற்கொண்டு அந்தக் கடிதத்தில் உள்ள எதையும் படிக்க வேண்டாம் என்று உத்தரவிடுகிறேன்.

திரு. நா. வீராசாமி: நீங்கள் தற்காலிகமாக இப்போது அந்த இடத்தில் இருக்கிறீர்கள். நான் பேரவைத் தலைவரிடமே அந்தக் கடிதத்தைக் காட்டி. . .

திரு. க. உரொ. எட்மண்ட்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நீங்கள் தற்காலிகமாக அந்த இடத்தில் இருக்கிறீர்கள் என்று சொல்லி, அதற்கு முன்பு இருந்த சபாநாயகரிடத்தில் அனுமதி பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். சட்டமன்ற விதிகளின்படி சபை நடக்கின்றபோது அந்த நேரத்தில் யார் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறாரோ அவர் தீர்ப்பைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். தாங்கள் அந்தக் கடிதத்தை மேற்கொண்டு படிக்கக்கூடாது என்று சொன்ன பிறகு, ஏற்கனவே இருந்த சபாநாயகர் அனுமதித்திருக்கிறார் என்று சொல்லி அதைப் படிப்பது முறைதானா? என்று நான் கேட்கிறேன்.

[1973 ஆகஸ்டு 9

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் எட்மண்ட் அவர்களுடைய வாதத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். பேரவைத் தலைவரின் அனுமதியின்றிக் கடிதத்தைப் படிக்கக் கூடாது என்றாலும், அந்தக் கடிதத்தின் சாராம்சத்தைச் சொல்லலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. சௌடி சுந்தரபாரதி) அந்தக் கடிதத்தைப் படிக்க ஏற்கெனவே சபாநாயகரது அனுமதியைப் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். அது எனக்குத் தெரியாது. நான் என்னுடைய தீர்ப்பின் பிரகாரம்தான் நிற்க விரும்புகிறேன். மேற்கொண்டு படிக்க வேண்டுமென்றால் என் அனுமதி பெற்றே படிக்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி : அதற்காகத்தான் நான் முன்பே உங்கள் அனுமதியோடு இங்கே படிக்க விரும்புகிறேன் என்று குறிப்பிட்டேன். இதைப் படித்தவுடனும் இதை நான் உங்களிடத்தில்தான் கொடுத்துவிடப் போகிறேன். இது குறித்து எந்த விசாரணைக்கும் நான் தயார். 'முக்கிய அதிகாரிகள் சிலர் வருவதால் சரக்கு நன்றாக இருக்க வேண்டும்' என்பதாக 20—5—73 அன்று பி. கே. குமரவேல் பழனித் தொகுதி அ.தி.மு.க. அமைப்பாளர் கையொப்பமிட்டு கடிதம் எழுதியிருக்கிறார். அதிலேயே முக்கிய குறிப்பு 'முடிந்தால் டிக்கெட் பணம் நூறு ரூபாய் கொடுத்தனுப்பவும்' என்று எழுதியிருக்கிறார்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இவர்கள் ஆட்சியில் உள்ள அதிகாரிதானே.

திரு. நா. வீராசாமி : இப்படி ஒரு சில அதிகாரிகள் **தவறு** செய்கிறார்கள். ஒப்புக்கொள்கிறேன். இப்படி அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து, சாராயத்தைக் கொடுத்து அதிகாரிகளைக் கெடுத்துவிட்டு, இந்த ஆட்சியைப் பார்த்து, நீங்கள்தான் காரணம் என்று சொல்வது எப்படிப் பொருந்தும் ? இந்த ஊழலைப் பற்றி, லஞ்சத்தைப் பற்றி. . .

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நீங்கள் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்தீர்களா ? எடுக்கவில்லை என்றால், ஏன் எடுக்கவில்லை ?

1973 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படி ஒருவரது பேச்சின் நடுவில் அடிக்கடி குறுக்கிடக்கூடாது என்று இங்கே தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி—இப்படிப்பட்ட விஷயங்களைச் சொன்னால் அவைகள் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கப்படும் என்பதாகப் பேரவைத் தலைவர் கூறியிருக்கிறார்கள். அதைத் தாங்கள் இப்போது அனுஷ்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: சில அதிகாரிகள் என்றுதான் இருக்கிறதே தவிர வேறு இல்லை. அவர்கள் யார் என்பது வாங்கிக் கொடுக்கச் சொன்னவனுக்கும், வாங்கிக் கொடுத்தவனுக்கும் தான் தெரியுமே தவிர மற்றவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. இப்படி லஞ்சம், ஊழல் என்று சொல்கிறவர்கள் செய்கிற காரியங்களையே உணர்ந்தாக வேண்டும். லஞ்சத்தைப் பற்றி, ஊழலைப்பற்றிப் பேசினார்கள். உங்கள் ஆட்சியில் லஞ்சம் ஊழல் என்றவுடன் பத்தாண்டு காலமாகவே இருந்து வருகிறது என்று ராஜாஜியும், ராஜகோபாலாச்சாரியார் காலத்திலேயே இருந்தது, லஞ்சம் இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது என்று காமராஜரும் சொல்லுகிறார்கள். இப்படி வள்ளுவர் காலத்தில் இருந்தே இருப்பதாக திரு. காமராஜ் சொல்வதும், ராஜகோபாலாச்சாரியார் காலத்தில் இருந்தே இருப்பதாகச் சொல்வதும் இருந்து வருகிற நேரத்தில் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்று சொல்வதும் முறைதானா என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏழைகளுக்காகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து வருகிறார்கள். தொழிலாளர்களுக்காகப் போட வேண்டிய சட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். குறிப்பாக, கை ரிக்ஷாக்காரர்களில் இருந்து கண்ணெளி இழந்து தவிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் என்ன செய்ய வேண்டுமோ அதை இந்த அரசு செய்து வருகிறது. அந்த ஏழைத் தொழிலாளர்கள், பாட்டாளி மக்கள், இந்த அரசு வாழ்க என்று எழுப்பிக் கொண்டிருக்கிற வாழ்த்தொலி எல்லோர் காதுகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கிற வரையிலும் யாரோ சிலர் நம்பிக்கையில்லை என்று சொல்வதன் மூலம்—மக்கள் இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்று தெரிவிக்கமாட்டார்கள் என்று தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

[1973 ஆகஸ்ட் 9

திரு. சி. வே. வேலப்பன்: மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியின் சார்பில் இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை என்று கொடுக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தையும், இந்த அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தையும் ஆதரித்து நான் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் கொண்டுவருவது எதிர்க் கட்சியில் ஏதோ புதியதாக வந்தது அல்ல. மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர், தமிழக முதலமைச்சர் அவர்கள், நம்முடைய பாண்டியன் நெடுஞ்செழியன் என்றே சொல்லக்கூடிய நாவலர் அவர்கள், மதிப்பிற்குரிய ப. உ. சண்முகம் அவர்கள் ஆகிய எல்லோருடனும் சேர்ந்து நானும் 1962-ம் ஆண்டில் இந்த மன்றத் தில் இருந்தேன். அப்போது என்ன என்ன காரணங்களைச் சொல்லி, அன்றைக்கு ஆண்டு வந்த காங்கிரஸ்காரர்களது ஆட்சியின் மீது நம்பிக்கையில்லை என்று சொன்னோம் என்பதை நினைவுகொள்ள வேண்டும். விலைவாசி உயர்வுக்கு மாநில அரசுதான் பொறுப்பு என்று சொல்லி மாநில அரசின் நிர்வாகத்திற்குட்பட்டிருக்கிற அலுவலகங்களுக்கு முன்னால் போராட்டங்களைத் துவக்குங்கள் என்று எங்களுக்கு எல்லாம் கட்டளையிட்டவர்கள் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்கள்தான். இன்றைக்கு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், அன்றைய காங்கிரஸ்காரர்களைப்போலப் பேசுகிறார்கள். அமைச்சர்களாகிவிட்ட பிறகுதான் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மாநில அரசுக்கு வக்கு இல்லை, வகையில்லை, அதிகாரம் இல்லை என்பதை இப்போது உணர்ந்திருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. அப்போது இவர்கள் எல்லாம் அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களைப் பார்த்து சொன்னது—இந்த ஆட்சியில் ஒழுக்கம் இல்லை, நாணயம் இல்லை, நிர்வாகத் திறமை இல்லை, நேர்மை இல்லை, ஆளுங்கட்சிக்காரர்கள் லஞ்சம் பெறுவதற்குத் துணைபோகிற ஆட்சியாக இருக்கிறது, அவர்களைச் சார்ந்திருக்கிற கட்சிக்காரர்களுக்கே பட்டா வழங்குகிற நிலையிருக்கிறது—என்பதாக ஒட்டுமொத்தமாகச் சொல்லி, இதைப் புறக்கணிக்கிறோம், இதைக் கண்டிக்கிறோம், ஆகவே, ராஜீநாமாச் செய்ய வேண்டும் என்றார்கள். இப்படி இப்போது

1973 ஆகஸ்ட் 9] [திரு. சி. வே. வேலப்பன்]

அமைச்சர் பொறுப்பில் இருப்பவர்கள் எடுத்துச்சொல்ல நானும் அதைத் தொடர்ந்து பேசினேன். இப்படிப் பேசுவது தவறு எனறு அன்றைக்கு யாரும் கருதியதாகத் தெரியவில்லை. எனக்கு முன்பு பேசிய ஒரு உறுப்பினர் கூட, இப்படிப் பேசுவது மாமூலாகப் போய்விட்டது என்றார். இந்த மாமூலை ஏற்படுத்தியதே இந்த மாமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம்தான். எடுத்ததற்கு எல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை விபீஷணர் நீலே என்கிறார்கள், ஓட்டுக் காங்கிரஸ் என்கிறார்கள். விபீஷணர்களாக யார் ஆகிவிட்டார்கள் என்பது தான் தெரியவில்லை.

அண்ணாவின் கொள்கையில் ஆட்சி நடத்துகிறோம் என்கிறார்கள். அண்ணா அவர்கள் தஞ்சை கருத்தரங்கில் என்ன சொன்னார்கள்? பதவி என்கிற போதை வந்துவிட்டால் எல்லாம் மறந்துவிடும். எப்படி ஒரு கட்சி ஆட்சிக்கு வருவது? எப்படிப் போவது? இப்படிப்பட்ட நீலையில் அண்ணா அவர்கள் அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்களே என்றால் (குறுக்கீடு) என்ன சொன்னார்கள் என்பது புரியாது. இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் தான் புரியும். காந்தியார் கொள்கை எனக்கு மிகமிகப் பிடித்திருக்கிறது, அரசாங்கம் ஒன்றுமே செலவழிக்காவிட்டாலும், எத்தத் திட்டத்தையும் போடாவிட்டாலும் ஏழைகளைக் காப்பாற்ற வேண்டுமானால் இந்த மதுவிலக்குக் கொள்கையைக் கண்டிப்பாக கடைப்பிடித்தாக வேண்டும். கடைப்பிடிக்கப்படுமானால் ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் தினசரி ரூ 2, ரூ. 5 கொடுத்ததாக இருக்கும் என்று தெளிவாகச் சொன்னார்கள். அது கூடாது என்று சொன்னால், அரசியலில் இந்தச் சூதாட்டம் வேண்டாம், பகடைக் காயை உருட்டாதீர்கள், மூன்று சீட்டு ஆடாதீர்கள், இவை தவிர்க்கப்பட வேண்டுமென்று சொன்னால், உடனே தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் அறிக்கை விடுகிறார்கள், ஆமாம், பகடைக் காய், அடுத்து சூதாட்டம், மூன்று சீட்டு, அடுத்து சூதாட்டம் என்று சுற்றி இருக்கிற மாநிலங்களில் இக்கொள்கை இல்லை, சுற்றி வைக்கப்பட்டிருக்கிற நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாக எத்தனை நாளைக்குத் தமிழகத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்; ஆகவே நானும் விட்டுவிட்டேன், என்று முதல்வர் கூறினர். நான் குடியிருக்கிற வீட்டைச் சுற்றி பெண்கள் ஒழுங்காக இல்லை, ஆகவே, நானும்

[திரு. சி. வே. வேலப்பன்] [1973 ஆகஸ்டு 9

விட்டுவிட்டேன், என்று சொல்வது போல் இருக்கிறது, இது. படிப்படியாக என்று சொல்லி, கள்ளுக் கடைகளை மூடிவிட்டோம் என்றும், சாராயக் கடைகளை வைத்திருக்கிறோமே. மூன்று சீட்டு அல்ல, பகடைக் காய் ஆடுகிறோம் என்பது போல் இருக்கிறது. கள்ளுக்கடை இருக்கும்போது என்ன பணம் வந்ததோ, அந்தப் பணம் வருகிறது. அப்படிப்பட்டச் சூழ்நிலையில் ஊழல் மிகுந்த ஆட்சி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறோம் என்றுதான், அண்ணாவினுடைய கொள்கை என்று சொல்கிறோம்; படி அரிசி என்று சொல்கிறோம். அந்த வழியிலே வந்தவர்களுக்கு உள்ள சாமர்த்தியம் அண்ணாவுக்குக் கூட இல்லை. சகலகலா வல்லவர்களாக இருக்கிறார்கள். தமிழ்நாடு தன்னிறைவு மாநிலம், உபரி மாநிலம், பசுமைப் புரட்சியை உருவாக்கிவிட்டோம், இப்படியெல்லாம் சொல்லிவிட்டு, நாட்டிலே பஞ்சம் உருவாகியிருக்கிறது என்கிறார்கள். விலைவாசி உயர்வுக்கு என்ன காரணம்? அண்ணாவினுடைய கொள்கையை அவர்கள் விட்டுவிட்டார்கள், அவர்கள் விட்டு விட்டார்கள். (குறுக்கீடு) அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை என்ன? ஒழுக்கம், நேர்மை, நாணயம். இது அல்லவா அண்ணாவினுடைய கொள்கை. (அவையில் சிரிப்பு) அண்ணா என்ன என்ன சொன்னாரோ—சிரிப்பு வரும். இருக்கிற இடத்திலே இருந்தால் சிரிப்பு வரும். மக்களிடத்திலே போகும் போது தெரியும். மதுவிலக்குக் கொள்கையைச் சொல்லவில்லையா, அண்ணா? எங்களுக்கு உயில் எழுதி வைத்துவிட்டுப் போனார் அண்ணா என்கிறார்கள். அவருக்கு வாரிசு பாருங்கள்? அதை எடுத்துச் சொன்னால், உடனே சவால் விட வேண்டியது, நான் ராஜினமா செய்கிறேன் என்று. என்னுடைய மதிப்பிற்குரிய வீரபாண்டி தொகுதி ஆறுமுகம் அவர்கள் நேற்று சவால் விட்டார்கள். நான் அதை சவாலாக ஏற்றுக்கொள்ளாமல், வேண்டுகோளாக, அறிவிப்பாக எடுத்துக் கொள்கிறேன். அவரும் எடுத்துக் கொள்ளட்டும். இன்றைக்கே, அவரும் ராஜினமா செய்யட்டும், நானும் ராஜினமா செய்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம்: நான் தயார்.

1973 ஆகஸ்ட் 9]

திரு. க. உரோ. எட்மண்ட் : அப்படி உண்மையான சவால் என்றால், இன்றைக்கே அவர் ராஜினாமாக் கடிதத்தைக் கொடுக்கட்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : முதலிலே, சவால் விட்டது, உங்கள் (ஆளும்) கட்சியைச் சேர்ந்தவர். அவர் முதலில் ராஜினாமாக் கடிதத்தை எழுதிக் கொடுக்கட்டும். உங்களை ராஜினாமா செய்ய வைக்க முடியவில்லை. நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து. . .

(திரு. முனு ஆகி, மேலும் சில உறுப்பினர்கள் நின்றார்கள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி) : When the Chair is on its legs, hon. Members should not stand. தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் யார் பேச தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் யார் பேச வேண்டுமென்றாலும் என்னுடைய அனுமதியைப் பெற்றுப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. உரோ. எட்மண்ட் : * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி) : நீங்கள் இப்பொழுது பேசுவது என்ன முறையிலே, என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, நீங்கள் சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று நான் ஆணையிடுகிறேன்.

திரு. சி. வே. வேலப்பன் : ஆகவே, பிரச்சினை எனக்கும் ஆறுமுகம் அவர்களுக்கும்தான். (குறுக்கிடு). ஆகவே, ஆறுமுகம் அவர்கள் விட்ட சவாலை நான் வேண்டுகோளாகத்தான் எடுத்துக் கொள்கிறேன், அறிவிப்பாக எடுத்துக்கொண்டு, அதை அவர்களும் எடுத்துக்கொண்டதால், நானும் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி. . .

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1973 ஆகஸ்ட் 9

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, தன்னிலை விளக்கம் ஒன்றை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய சி. வி. வேலப்பன் அவர்கள் சொன்னபடி சவாலை நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் ராஜினமா செய்கிறேன், அவரும் ராஜினமா செய்து, என்னுடைய விரபாண்டி தொகுதிக்கு வந்து நிற்க வேண்டும். அதில் யார் வெற்றி பெறுகிறாரோ பார்க்கலாம். அந்த அறைகூவலை, வேண்டுகோளை ஏற்றுக்கொள்கிறேன். நான் அவர் ஏற்றுச்சொன்ன வேண்டுகோளை முழுமனதோடு ஏற்று, எப்பொழுது எழுதிக் கொடுப்பது என்பதைச் சொல்லிவிட வேண்டும். என்னைப் பொறுத்தமட்டில், இப்பொழுதே நான் எழுதிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிலே, மேடையிலே நடைபெற வேண்டிய நிகழ்ச்சியை நம்முடைய அவையிலே சொல்ல வேண்டாம். நீங்கள் சவால் விடுவது, அவர் சவால் விடுவதென்ற நிகழ்ச்சி அவையினுடைய பெருமையைக் கெடுத்து விடும் என்று நினைக்கிறேன்.

திரு. சி. வே. வேலப்பன் : நான் சவால் என்று சொல்லவில்லை. அவர்கள் சவால் என்று சொன்னார்கள். நான் சவால் என்று சொல்லவில்லை. வேண்டுகோளாக, அவர்கள் விட்ட அறிவிப்புக்கு ஒப்ப, எது அண்ணாவினுடைய கொள்கையில் இருக்கிறது என்பதை நாம் பார்த்துவிடலாம். திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாவினுடைய கொள்கையில் இருந்து கொண்டிருக்கிறதா, அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாவினுடைய கொள்கையில் இருந்து கொண்டிருக்கிறதா? அப்படி அந்த நிலைமை வருமானால், இப்பொழுதே எழுதிக் கொடுத்தாக வேண்டும். அதிலேயாவது நாணயத்தைக் கடைபிடித்தாக வேண்டும். அதையெல்லாம் விட்டுவிட்டு எங்கோ சென்று விட வேண்டாம். தலைவர் அவர்களே, இப்பொழுது முடிவு கேட்டு எந்த நேரம் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஆறுமுகம்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும். . .

1973 ஆகஸ்ட் 9]

திரு. சி. வே. வேலப்பன் : *தலைவர் அவர்களே, நான் பேச்சை முடிக்கவில்லை. வேண்டுகோளாகத்தான் நேரத்தைக் கேட்டேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *நம்முடைய வேலப்பன் அவர்கள் நடந்துகொள்கிற முறை சரியல்ல. உங்களுடைய, அவருடைய ராஜிநாமாக் கடிதங்களைப் பெற்றுக்கொள்கிற, அதையெல்லாம் செய்வதற்காகப் பேரவைத் தலைவர் இங்கே இல்லை.*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *தலைவர் அவர்களே, நேற்று இந்தச் சவாலைப்பற்றித்தான் ஒரு உத்தரவை அறிவித்தீர்கள், ஒரு அறிவுரையை இந்த அவைக்கு வழங்கியிருக்கிறீர்கள். ஆனால், இன்று வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் பேசும்போது அவர் ஹாண்டே அவர்களுக்குப் பதில் சொன்னார். 'ஹாண்டே பூங்கா நகர்' தொகுதியிலே ராஜினாமா செய்துவிட்டு வரட்டும், நான் வீரபாண்டித் தொகுதியிலே ராஜினாமா செய்துவிட்டு வருகிறேன். இருவரும் 'வீரபாண்டி தொகுதியிலே நிற்கலாம்" என்றார். அதற்குப் பதில் சொல்லியிருக்க வேண்டியது ஹாண்டே. அவருக்குப் பதிலாக நண்பர் வேலப்பன் அவர்கள் இப்பொழுது பதில் சொல்கிறார் ; அவரும் ராஜினாமா செய்கிறேன், இவரும் ராஜினாமா செய்கிறேன் என்று சொல்லி, இரண்டு பேரும் வீரபாண்டி தொகுதியிலே சந்திக்கத் தயார் என்பதால், நாளையதினம் தனியாக இரண்டு பேரும் பேசி, சபாநாயகரிடத்திலே எழுதிக் கொடுத்தால், அதற்குப் பிறகு சபாநாயகர் யோசிக்கலாமே தவிர, இப்பொழுது அழைக்க முடியாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *திரு. சி. ஆறுமுகம் தொடர்ந்து பேசுவார்.*

திரு. சி. வே. வேலப்பன் : *தலைவர் அவர்களே, நான் என்னுடைய பேச்சை முடிக்கவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *நீங்கள் பேசிவிட்டு உட்கார்ந்து விட்டீர்கள்.*

திரு. கே. ஏ. மதியழகன் : *அவர் உட்காரவில்லை. அவர் பேசுவதற்கு நேரம் இருக்கிறது. அவர் நேரம் எடுத்துக் கொள்ளட்டுமே.*

[1973 ஆகஸ்டு 9

திரு. முனு ஆதி: எங்களுக்கு மைக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

திரு. முனு ஆதி: எங்களைப் பார்த்து உட்காருங்கள் என்று சொல்கிறீர்கள். சாலஞ்ச் பண்ணுகிறவர்களைப் பார்த்து ஒன்றும் சொல்ல மறுக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. யாருக்கு எவ்வளவு நேரம் கொடுப்பது என்கிற உரிமை பேரவைத் தலைவரிடம் தான் இருக்கிறது. திரு. வேலப்பன் 1.05-க்கு ஆரம்பித்திருக்கிறார். 15 நிமிஷம் பேசி இருக்கிறார். அவர் பேசிவிட்டு உட்கார்ந்துவிட்டார்.

திரு. முனு ஆதி: அவர் முடித்துவிட்டதாகச் சொல்லவில்லை. நீங்கள் சில பேருக்கு மணி அடித்து, அவகாசம் கொடுக்கிறீர்கள். இவருக்கு மட்டும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சவால் விட்டு, எழுதிக் கொடுக்கலாம் என்று சொல்கிறார். அது முறையல்ல. அவர் சொல்லிவிட்டு உட்கார்ந்ததனாலே முடித்துவிட்டார் என்று ஆறுமுகத்தைக் கூப்பிட்டாகிவிட்டது. இனி, இவர் உட்கார்ந்துவிட வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம்: நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கண்டிக்கின்ற தீர்மானத்தையும் கொண்டு வந்திருப்பதை நான் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதால் எதிர்த்து என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகிறேன். நான் பேசிக் கொண்டிருக்கும்பொழுது மாற்றுக் கட்சி நண்பர்கள் என்னைத் தாங்கள் பேச அழைத்ததற்குப் பின்னாலே ஒரு இயக்கத்தைச் சேர்ந்த மூன்று பேர்கள் எழுந்து நின்று கொண்டு. . .

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது விவாதம் ஆரம்பிக்கின்ற நேரத்திலே இந்த அவையிலே உள்ள ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு நேரம் என்று ஒதுக்கி

1973 ஆகஸ்ட் 9] [திரு. க. உரொ. எட்மண்ட்]

யிருக்கிறீர்களே தவிர, ஒவ்வொரு கட்சியிலும் எத்தனை பேர்கள் பேச வேண்டும் என்று நீங்கள் சொல்லவில்லை. நமக்குள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்ற அந்த ஒழுங்குமுறைக்குள் எங்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற ஒன்றேமுக்கால் மணி நேரத்திலே எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் பேசலாம், அல்லது ஒன்பது பேரும் பேசலாம். இப்பொழுது நண்பர் திரு. சி. வே. வேலப்பன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவருக்கு 15 நிமிஷங்கள் தான் என்று சொல்லிவிட்டு அவரை உட்கார வைத்திருக்கிறீர்கள். அந்த அடிப்படையிலே நீங்கள் உட்கார வைப்பீர்களானால் எங்களுக்குக் கொடுக்கப்படுகிற நேரத்தை நாங்கள் அவர்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியில்லாமல் அவர் இந்த மன்றத்திலே ஒழுங்குமுறை மீறிப் பேசியிருக்கிறார், அல்லது வரம்பு மீறி பேசியிருக்கிறார் என்ற கருத்திலே நீங்கள் உட்கார வைப்பீர்களானால் நான் ஒன்றை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய சட்ட மன்ற விதிமுறைகளைப் பார்த்தால் தெரியும். ஒரு சட்ட மன்ற உறுப்பினர் பேசியதில் ஒரு குறிப்பிட்ட பகுதியைத்தான் அதற்காக நீக்குவதற்கான உத்தரவிடுவதற்குத்தான் உங்களுக்கு அதிகாரம் இருக்கிறதே தவிர, பேச விரும்புகின்ற ஒரு உறுப்பினரை தொடர்ந்து பேச அனுமதிக்காமல் உட்கார வைப்பதற்குத் தங்களுக்கு உரிமை இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நேரம் கொடுப்பதே ஒன்றிரண்டு நிமிடங்கள் அதிகமானாலும்கூட அனுமதித்துத்தான் வந்திருக்கிறோம். அதனால் அதற்காக 15 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் ஒரு உறுப்பினர் 20 நிமிடங்களோ அல்லது 25 நிமிடங்களோ தன்னுடைய பேச்சுக்காக எடுத்துக்கொள்ளக்கூடாது. திரு. வேலப்பன் பேசிவிட்டு உட்கார்ந்துவிட்டார். நான் அடுத்த உறுப்பினரை இப்பொழுது பேச அழைத்து இருக்கிறேன்...

திரு. சி. வே வேலப்பன்: நான் பேசிவிட்டு உட்காரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசிவிட்டு உட்கார்ந்துவிட்டீர்கள். நான்தான் கண்ணைதிரே பார்த்துக் கொண்டிருந்தேனே . . .

திரு. க. உரொ. எட்மண்ட்: அவர் உட்கார்ந்தது உண்மை, ஆனால் பேச்சை முடித்துவிட்டு உட்காரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் தங்களுக்கு இஷ்டப்பட்ட நிலையிலே உட்கார்ந்துகொள்வதும், தங்களுக்கு இஷ்டப்பட்ட நேரத்திலே, நிலையிலே எழுந்து பேசுவதுமாக இருந்தால் அது எல்லாம் பேரவைத் தலைவருக்கு எப்படித் தெரியும்? திரு. வேலப்பன் பேசிவிட்டு உட்கார்ந்ததற்குப் பிறகு தான் நான் திரு. சி. ஆறுமுகம் அவர்களைப் பேச அழைத்தேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டு இருக்கும்பொழுது தலைவர் எழுந்து நின்றால் உறுப்பினர் உட்காரத்தான் வேண்டும் என்று விதியே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேலப்பன் அவர்கள் பேசியபோது யாரும் எழவில்லை, திரு. வீரபாண்டி ஆறுமுகம் எழவில்லை.

திரு. சி. ஆறுமுகம்: நான் தலைவர் அவர்களால் பேசுவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறேன், என்னைப் பேச அனுமதிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின்மீது வந்திருக்கிற நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் முழுக்க முழுக்க எதிர்த்து என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் 7 நிமிடங்கள் வரையில் என்னுடைய நேரத்தை எடுத்துக்கொண்டார்கள். (இந்த நேரத்தில் திரு. சி. வே. வேலப்பன் பேசிக்கொண்டேயிருந் தார்கள்) அந்த நேரத்தையும் சேர்த்து எனக்குத் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே இந்த அளவிற்கு ஒவ்வொரு நாளும் குழப்பம் ஏற்படுத்திக் குழப்பத்தின் அடிப்படையிலே இந்த மன்றத்தை

1973 ஆகஸ்ட் 9] [டாக்டர் மு. கருணாநிதி]

நடத்த வேண்டுமென்ற முறையைக் கையாண்டால் நம்மை நாமே அவமரியாதை செய்துகொள்கிறோம் என்றுதான் பொருள்படும். இந்த மன்றம் பல ஆண்டுக்காலமாக நடந்து வந்திருக்கிறது. ஆளுங்கட்சி இருந்திருக்கிறது, எதிர்க்கட்சிகளும் இருந்திருக்கின்றன. நல்ல முறையில்தான் நடந்து இருக்கிறது. இப்பொழுது சிறிய பிரச்னைக்குக்கூட—எதற்கெடுத்தாலும்—கூச்சலையும் குழப்பத்தையும் ஏற்படுத்துவது. உள்ளபடியே வேதனைக்குரியதாக இருக்கிறது. ஒரு பெரிய பிரச்னைக்கு அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டாலுங்கூடப் பார்ப்பவர்கள், பொதுமக்கள், வோட்டுப் போட்டு அனுப்பியவர்கள் இவ்வளவு பெரிய பிரச்னைக்காக அப்படி வாதாடுகிறார்கள் என்று மகிழலாம். ஆனால் சிறிய பிரச்னைக்கெல்லாம் தகராறுகளை விளைவிக்காமல் இருப்பது நல்லது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் ஒவ்வொரு கட்சிக்கும் தி.மு.க. வுக்கு இவ்வளவு நேரம், காங்கிரஸ் கட்சிக்கு இவ்வளவு நேரம், அ.தி.மு.க. வுக்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்கியிருக்கிறீர்கள். அதிலே இதுவரையில் அ.தி.மு.க. வுக்கு எவ்வளவு நேரம் ஆகியிருக்கிறது என்ற கணக்கை காட்டி—அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தையெல்லாம் அவருக்கே கொடுத்து விடுகிறோம் என்று அ.தி.மு.க. வினர் சொல்கிறார்கள்—இதுவரையில் அந்தக் கட்சியினருக்கு எவ்வளவு நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது என்பதைத் தாங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, கட்சித் தலைவர் என்ற முறையிலே நான் பேச விரும்புகிறேன். இவர் யார் மத்தியஸ்தம் செய்ய என்று கேட்க வேண்டாம். இந்த மன்றத்திலே எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது. இந்நேரம் பேசவிட்டிருந்தால் திரு. வேலப்பன் அவர்கள் அவர்களுடைய பேச்சை முடித்திருப்பார்கள். தொடர்ந்து அவரைப் பேச அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு வேலப்பன் அவர்களுடைய கட்சிக்கு நேரம் இருக்கிறதா இல்லையா என்ற நிலைமை இல்லை. இனி, பேரவைத் தலைவர் ஒரு உறுப்பினரைப் பேச அழைத்ததற்குப் பிறகு, தொடர்ந்து முன்னாலே பேசிய

உறுப்பினருக்கு நேரம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர் பேசிக்கொண்டிருக்கக்கூடாது. அந்த உறுதியின் அடிப்படையிலே திரு. வேலப்பன் அவர்களை இப்பொழுது பேச அனுமதிக்கிறேன்.

திரு. சி. வே. வேலப்பன்: மீண்டும் என்னைப் பேச அனுமதித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணாதுரைவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கொள்கையிருக்கிறதா என்று கேட்கிறார்கள். அண்ணாவின் எந்தக் கொள்கையை நீங்கள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? அண்ணா காலத்திலே அவர்கள் படியரிசித் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். யார் அந்தத் திட்டத்தை அமல்படுத்தாமல் அந்த நிலையிலிருந்து மாறி விடுகிறார்களோ அவர்கள்தான் அண்ணாவின் கொள்கையைக் கைவிட்டவர்கள் ஆகிறார்கள். அண்ணா அவர்கள் மதுவிலக்குத் திட்டம் கொண்டுவந்தார்கள். யார் அந்த மதுவிலக்குக் கொள்கையைக் கைவிட்டார்களோ அவர்கள்தான் அண்ணாவின் கொள்கையைக் கைவிட்டவர்கள் ஆகிறார்கள்.

இங்கே கட்சிமாறியென்றெல்லாம் பேசுகிறார்கள். யார் கட்சி மாறி என்று புரியவில்லை. முக்கியப் பொறுப்புகள் கட்சி மாறி வந்தவர்களுக்கு எல்லாம் கொடுக்கப்படவில்லையா? கட்சி மாறுவது என்பது இயற்கை. கொள்கையை விரும்பாதவர்கள் கட்சி மாறுவார்கள். அப்படியென்றால் தி.மு.க.வும் ஒரு கட்சி மாறிய கட்சிதான். அண்ணா அவர்களின் கொள்கையை யார் யார் எங்கு விட்டு விட்டார்களோ அவற்றையெல்லாம் காப்பாற்றக் கூடியவர்கள் நாங்கள். ஊழல் இல்லை என்று சொன்னார்கள். முதலமைச்சரே சொன்னார்கள், தவறுதலாக, பெறக்கூடாதவர்கள் பட்டா பெற்றுவிட்டார்கள், இதோ வேண்டுகோள் விட்டேன், அவர்கள் திருப்பிக் கொடுத்தார்கள், அவர்களுக்குப் பதவி கொடுக்கிறோம் என்று. இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அண்ணா அவர்கள் அதைத்தான் சொன்னார்களா? நான் கேட்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்களை நாட்டு மக்கள் பார்த்து மதிக்கவேண்டுமென்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த மதிப்புக்குக் குந்தகம் வராமல் நடக்க வேண்டும். மக்களுக்கு எடுத்துச் சொல்கிறோம், கடமை,

1973 ஆகஸ்ட் 9] [திரு. சி. வே. வேலப்பன்]

கண்ணியம், கட்டுப்பாடு என்று. சொல்கிறவர்கள் கொஞ்சமாவது கடைப்பிடிக்கவேண்டாமா? குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பிரச்சாரம் செய்கிறோம். அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள் என்று செய்கிறோம். ஆனால் அப்படிச் சொல்லலாம், செய்ய வேண்டியதில்லே என்றால் எப்படி? இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் உடனே ஜாதி, ஆரியர், ஆடுமாடு மேய்த்தவர்கள் என்று கிளப்புகிறார்கள். நாம் எல்லாம் என்ன ஜாதி? நமக்கே தெரியாது. ஆதியிலே ஜாதியில்லே. இடையிலே புகுந்ததுதான் ஜாதி. தொழில் துறை மூலம் புகுந்ததுதான் ஜாதி. கொஞ்சம் ஒழுக்கமாக இருங்கள் என்றால் கேரளாவிலே இல்லேயா; அங்கே இல்லேயா, இங்கே இல்லேயா என்று கேட்கிறார்கள். நீ குடிக்காதே என்று சொன்னால் பக்கத்து வீட்டுக்காரன் 3 பாட்டில் குடிக்க வில்லேயா என்று கேட்பது? பக்கத்துவீட்டுக்காரன் 3 பாட்டில் போடலாம், நீ குடிக்காதே என்றுதான் சொல்கிறோம்...

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒருவர் குடித்துவிட்டு மற்றவர்களுக்கு குடிக்காதே என்று உபதேசம் செய்வது—அவர் குடிக்காமல் இருந்தால் மற்றவர்களுக்கு அப்படி உபதேசம் கூறுவது பொருத்தமாக இருக்கலாம்—அவரே குடித்துவிட்டு மற்றவர்களைக் குடிக்காதே என்று சொல்வது எப்படிப் பொருத்த மாகும் என்பதை விளக்கவேண்டும்.

திரு. சி. வே. வேலப்பன்: குடி என்று சொன்னாலே நம் முடைய நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு டேன்ஸ்ட் உண்டு. அவருக்கு ஒரு டேன்ஸ்ட். முன்பே சட்டமன்றத்தில், கள் குடித்தால் உம்பிற்கு மிக மிக நல்லது என்று சொல்லியிருக் கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, கள் நல்லது என்று டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் சொன்னேன். கள் உடம்பிற்குச் சத்து தருகிறது என்று டாக்டர்கள் சொல்லியதைத் தெரிவித்திருக்கிறேன். ஆனால் நான் இப்பொழுது சொல்வது, ஒருவர் குடித்துவிட்டு மற்றவர்களைப் பார்த்து, குடிக்காதே என்று சொன்னால், அதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் கேட்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும். திரு. வேலப்பன் நாளைய தினம் தொடர்ந்து பேசுவார்கள்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

(5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

'Nil'

B. *Reports, Notifications and Other Papers.*

42. Notification issued with G.O. Ms. No. 280, Labour and Employment, dated the 28th April 1973 in regard to certain amendments to the Madras Employees Insurance Courts' Rules, 1951.

43. Notification issued with G.O. Ms. No. 279, Labour and Employment, dated the 18th April 1973 in regard to certain amendments to the Madras Employees ' State Insurance (Medical Benefit) Rules, 1954.

44. Report of the Joint Select Committee on the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 (L.A. Bill No. 15 of 1973).

TAMIL NADU LEGISLATURE LIBRARY
19 NOV 1973
MADRAS